மங்கை



காரியாலயம்

11



வெளிவந்துவிட்டது

கம்ப சித்திரம்

சுந்தர காண்டம்

(பி. ஸ்ரீ.)

அழகிய பதிப்பு

ரூ. 7/8.

(தபால் செலவு தனி)

★

நவ பாரதி பிரசுராலயம் லிமிடெட்

திருநெல்வேலி ஜங்ஷன்

★

சென்னைக் கிளை :
33-வெங்கடாசலம் செட்டி தெரு
திருவல்லிக்கேணி.

வென்றி வாள்புடை விசித்து, மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுருத் தூணி யாத்(து),இரு
குன்றம் போன்(று)உயர் தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினன் உலகம் தாங்கினன். —கம்பன்

மங்கை

பெண்களின் புத்தகம்

11

பதிப்பாசிரியர்:
"குகப்ரியை"

சக்தி

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை : சென்னை

நமது சமூகம்

ஜானகி கிருஷ்ணன்

விவாகம்

நமது சமூகத்தில் விவாகம் என்பது மிகவும் முக்கியமான ஓர் அம்சம். விவாகம், சமூகக் கட்டுப்பாட்டிற்கு அடங்கியது. கணவனும் மனைவியும் விவாகம் செய்து கொண்டு நடத்தும் வாழ்க்கையை இல்லறம் என்று நமது பண்டைய நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. விவாகம் சிற்றின்பத்திற்காக மட்டும் ஏற்பட்டதன்று. மனிதன் தர்மத்தைக் காப்பாற்றுவதற்காகப் பிறந்தவன். இம்மை மறுமைக் குரிய அறங்களை நடத்துவதில் இல்லறமே முக்கிய சாதனம் என்பதில் பெரியோர்கள் நம்பிக்கை பூண்டு நடந்து வந்தார்கள். இல்லற வாழ்க்கையில் தர்மம் என்பது பெண்களால்தான் காப்பாற்றப்படுகிறது. பண்டைய காலத்தில் பாரத நாட்டுப் பெண்மணிகள் தர்மநெறி தவறாத உன்னத வாழ்க்கையை நடத்தி வந்ததால்தான் நம் நாடும் உன்னத நிலைமை அடைந்தது.

விவாகம் பெண்ணின் நல் வாழ்க்கைக்கும், குடும்ப ஸ்தாபனத்திற்கும், இல்லறத்தின் மூலம் தர்மத்தை நடத்துவதற்கும் முக்கியமான தத்துவம் ஆகும். சில தேசத்தினர் விவாகத்தை ஓர் ஒப்பந்தமாகக் கருதுகின்றனர். ஆனல், நமது விவாகம், முப்பத்து முக்கோடித்

தேவர்கள் சாட்சியாகவும் அக்னி சாட்சியாகவும் நடை பெறும் தெய்விகச் சடங்கு. ஆயுள் முழுவதும் சட்டத் தாலும் பிரிக்க முடியாதது. விவாகம் இந்தியப் பெண் ணின் சீரிய வாழ்க்கைக்கு நற்சாதனம் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. குடும்ப வாழ்க்கையற்ற இந்தியப் பெண்ணிற்குத் தகப்பனுருடைய அந்தஸ்தும் உத்தியோகமும், தாயாருடைய சொத்தும், தாய்தந்தை யரின் ஆதரவும் அவள் மனத்திற்கு ஆறுதல் அளிக்கக் கூடியது அன்று. அவள், கணவனுக்கு உகந்த மனைவியாக வும், உத்தமபுத்திரர்களுக்கு நல்ல தாயாகவும் இருக்கும் படியான பாக்கியத்தையே விரும்புவது சகஜம்.

குழந்தைப் பருவம் முதல் அமைதியான வாழ்க்கை யில் ஈடுபட்டுச் சாந்தம், பொறுமை, ஈவு, இரக்கம் முதலிய குணங்களை ஸ்வீகரித்துக்கொண்டு வளருவதே இவர்களின் குலதன மாகும். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நற் குணங்களுடன் இளமைப் பருவத்தில் இருந்தே வளர்வதை ஹிந்து குடும்பங்களில்தான் காண லாம். ஹிந்துப் பெண்மணிகள் கணவனுக்கு உட்பட்டு வாழ்வதை அடிமை வாழ்வாகக் கருதமாட்டார்கள். அதை அவர்கள், ஒப்புயர்வற்ற உன்னத வாழ்க்கை யாகவே எண்ணுவார்கள். அரசன் மகளாயினும் சரி; ஆண்டியின் மகளாயினும் சரி; அவர்கள் கணவன் வீட் டில் வாழ்வதையே மகத்தான பாக்கியமாகவும், கண்ணிய மாகவும் கருதுகிறுர்கள். கல்லானுலும் கணவன் புல்லானு லும் புருஷன் என்ற வைராக்கியத்துடன் கணவன் தூஷித் தாலும்சரி, பூஜித்தாலும்சரி, அவனே கதிஎன, உற்ருரையும் பெற்ருேரையும் பிரிந்து, கணவன் மனம் கோணுமல் நடப் பதே தம் பிறவிப் பயன் என்று நடந்து கொள்கிறுர்கள்.

கணவனும் தெய்வமும் ஒன்றே எனக் கருதினுலும் நம் நாட்டுப் பெண்கள், கணவனைத் தேர்ந்தெடுக்கும்

உரிமை மட்டும் பெற்ருேர்களிடமே இருக்கிறது. அவர்கள், நற்குண நற்செய்கைகளுடைய ஆடவனுக்கே தம் பெண்களை அளிக்க முயற்சிக்கின்றனர். அதில் ஏதேனும் தவறு ஏற்பட்டு, அதனுல் தம் பெண் கண்ணீர் சிந்தி நிற்க நேர்ந்ததாயின் இப் பாபம் பெற்ருேர்களையே சேருகிறது. முன்னுளில் கூடியவரையில் தம் பந்து வர்க்கத்துக்குள்ளேயே வரன் தேடுவார்கள். அவர்கள், உயர்ந்த குலம், நல்ல குணம், நல்ல நடத்தை ஆகியவைகளை உடைய வாலிபர்களைத் தேர்ந்தெடுத்தார்களே யன்றி, பணத்தையும் உத்தியோகத்தையும் பற்றி அவர்கள் சிந்திப்பதே இல்லை. தாய் தந்தையர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனை அங்கீகரித்து அவன் மீது அன்பைச் செலுத்துவது நம் நாட்டுப் பெண்களின் வழக்கம்.

சுயேச்சை, அடக்கியாளும் தன்மை, கோபம் முதலிய குணங்களுடைய ஆடவரது வாழ்க்கை, அடக்கம், பொறுமை, சகிப்புத்தன்மை முதலிய இனிய குணங்களுடைய பெண்ணின் கூட்டுறவால் மேன்மை அடைகிறது. கணவனின் பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் தன்னுல் எவ்விதமான அவநிலையும் ஏற்படாத நிலையில் நடந்துகொள்வதே இவர்களின் முக்கிய நோக்கம். இதனுல், விவாகமும் சமூகக் கட்டுப்பாடும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்படுகிறது. எத்தகைய கஷ்டம் நேர்ந்தாலும் சமூகக் கட்டுப்பாட்டை எதிர்க்க அவர்கள் அஞ்சுவார்கள். நாலுபேர் நாலு சொல்வார்களே என்று சொல்வதைச் சாதாரணமாக நாம் வழக்கத்தில் காண்கிருேம் அல்லவா? 'அந்த நாலு பேர்கள்' யார்? அவர்களுக்கு நாம் ஏன் பயப்பட வேண்டும்? என்று சிலர் விதண்டாவாதம் செய்வார்கள். 'அந்த நாலு பேர்' என்பதுதான் சமூகத்தைக் குறிப்பது. ஏதோ கணவன் கோபத்தில் அடித்தாலும் ஹிம்சித்தாலும் அவனை விட்டு

விலகி, விவாகரத்துச் செய்துகொண்டு விடுவது என்பது ஹிந்துப் பெண்களுக்குச் சாதாரணமாக வழக்கம் இல்லை. எப்படிப்பட்ட கஷ்டம் நேர்ந்தாலும் பொறுத்துக் கொண்டு உலகத்தில் நகைப்பதற்கு இடம் கொடாமல் நடந்து கொள்வதற்காகச் சகித்துக் கொள்வதில் நம் நாட்டுப் பெண்களுக்கு நிகர் ஒருவரும் இல்லை என்றே கூறலாம். கணவன் துன்பப்படுத்தும்போதும், தாம் என்ன வேதனைப்பட்டாலும் அதை வெளிக்காட்டாமல், சிரித்த முகத்துடன் இருக்க முயற்சிப்பார்கள்.

தாம் பிறந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் கணவனை இகழ்ச்சியாகப் பேச இடங் கொடுக்கமாட்டார்கள். இதன் காரணமாகவே, தம் மனக்குறையைத் தம்மைச் சேர்ந்தவர்களிடங்கூடச் சொல்லிக் கொள்ள மாட்டார்கள். வாழ்விலும் தாழ்விலும், கஷ்டத்திலும் சுகத்திலும், தம் கணவனுடைய நலனையே விரும்புவது என்பது அவர்களிடமிருக்கும் மிகவும் பாராட்டத்தக்க விஷயமாகும். இதுவே, நம் ஹிந்து விவாகத்தின் பூரணத் தத்துவம். ஆடம்பர மற்ற ஆனந்த வாழ்க்கையை விரும்பிக் கணவனுடைய வரவிற்குத் தக்க செலவு செய்து கண்ணியமான வழியில் குடும்பம் நடத்துவதற்கென்றே பழக்கப்படுத்தப் பட்டிருப்பதால், அவர்கள் மண வாழ்க்கையை ஆனந்தமாகவே ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

படித்த பெண்களுக்குக் குடித்தனம் பண்ணத் தெரியாது என்று ஒரேயடியாகச் சொல்வது சரியல்ல. ஆரம்ப முதல் அடக்கம், பொறுமை, மரியாதை முதலிய குணங்களோடு அவர்கள் வளர்கிறார்கள். அந்த நற்குணங்கள் கல்வி அறிவினால் மெருகிடப்பட்டு, 'பொன்மலர் நாற்ற முடைத்து' என்று சொல்வது போல அவர்கள் மண வாழ்க்கையை மேலும் பரிமளிக்கச் செய்யக்கூடும். நற்குணங்களுக்கும் கல்விக்கும் யாதொரு சம்பந்தமும்

இல்லை. 'தாயைப் பார்த்து மகளைக் கொள்' நூலைப் பார்த்துச் சேலையைக் கொள்' என்ற பழமொழிப் படி, தாய், அவள் தன் மாமன் மாமி முதலிய பெரியோர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வதைக் குழந்தைப் பருவ முதல் கவனித்து வரும் பெண்ணுக்கு அதுவே ஒரு பாடமாகிறது. விவாகமான பிறகு, தன் பெண், மாமியாரிடம் நற்பெயர் எடுக்க வேண்டுமே என்ற கவலை தாயைப் பாதிக்கிறது. ஒற்றுமையாக இருந்த குடும்பம், சில வேளைகளில் சில்லரை மனஸ்தாபங்களினுல் சிதறி விடுவதுமுண்டு.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், 'பெண்வளர்த்த சவரணையைப் பார்' என்று சமூகத்தில் ஏசுவார்களே என்று தாய் திகில் கொள்வாள். அதேபோல் பிள்ளை வீட்டுக்காரர்களும், வீட்டிற்குள் எவ்வளவு மனஸ்தாபம் ஏற்பட்டாலும், மாமியார் நாட்டுப் பெண் சண்டை ஏற்பட்டாலும் அது வீட்டிற்குள் புகைந்து கொண்டு இருக்குமே அன்றி, வீட்டுத் துன்பம் வெளியாருக்குத் தெரியாமல் அதி ஜாக்கிரதையாக நடந்து கொள்வார்கள். ஊர் சிரிக்கலாகாது என்கிற எண்ணம் எல்லோருக்கும் உண்டு. சமூகத்திற்கு அஞ்சி அனைவரும் குடும்பத் துன்பத்தைச் சகித்துக் கொள்வார்கள். குடும்பமே சமூகக் கட்டுப்பாட்டிற்குப் பயந்து நடக்கிற வழக்கமும் உண்டு.

கட்டுப்பாடு தளர ஆரம்பித்தபின், 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்னும் நடவடிக்கை ஓங்கத் தலைப்பட்டு விட்டது. காதல் மணமும், விவாக ரத்தும் பெரும் நாகரிகமாகச் சிலரால் நினைக்கப்படுகிறது. வாலிபப் பருவமுடைய பெண்ணும் பிள்ளையும் நெருங்கிப் பழகி ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டபின் விவாகம் செய்து கொள்வது என்பது நம் புராதனக் கொள்கை

களுக்கு விரோதமானது. இதனால் பலவித அபாயங்கள் நேரிடலாம்.

தனக்குத் தகுந்த புருஷன் எவன் என்பதை உலக அநுபவம் இல்லாத சிறுமியால் எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்? பெற்றோர்களும், நண்பர்களும் ஆராய்ந்து யோசித்து நடத்திவைக்கும் கல்யாணங்களி லேயே தவறுதலும் ஏமாற்றமும் ஏற்படும்போது, அநுபவ மற்ற சிறுமி ஒருத்தி, தன் மனத்திற்குத் தோன்றியபடி தீர்மானிக்கும் விவாகம் எப்படிக் குற்ற மற்றதா யிருக்க முடியும்? ஒருவனிடம் நெருங்கிப் பழகி அவன் குணம் மனத்திற்குப் பிடிக்கா விட்டால் மறுபடி வேறொருவனு டன் இதே பரீட்சையை நடத்த முடியுமா? கற்பே அணி கலமாகக் கொண்ட நம் பெண்களுக்கு இது அழகன்று. பழகியபின் விதி வசத்தால் கல்யாணம் நின்று விட்டால் பெண்ணின் கதி அதோ கதிதான்! அறிவிலும் அநுபவத்தி லும் சிறந்த பெரியோர்கள் இஷ்டப்படி நடப்பதே, சிறந்த மார்க்கம். மகளுக்குத் தகுந்த மருமகனைத் தேர்ந்தெடுப் பது தாய் தந்தையர்களுடைய கடமை.

பண்டைய காலத்தில் பெண் ஐந்து வயசடைந்தது முதல் அவளுக்கு விவாகம் செய்யவேண்டியதைப்பற்றிக் கவலையுடன், அதற்குத் தகுந்த ஏற்பாட்டைச் சிறுகச் சிறுகச் செய்து வைத்துக்கொள்வார்கள். நகை முதலியன வற்றைத் தம் சக்திக்கேற்றவாறு செய்து தயாராக வைத் திருப்பார்கள். தற்காலத்திலோ பெண்ணின் படிப்புக் கவலையே பிரதானமா யிருக்கிறது. 'வீட்டைக்கட்டிப் பார்; கல்யாணத்தைப் பண்ணிப்பார்' என்பது போல் 'குழந்தைகளைக் 'காலேஜ்' வரை படிக்க வைத்துப்பார்' என்று சொன்னால் தவறாகாது. இது சாமான்யமான விஷயமன்று. படிக்கவும் வைத்து, அது முடிந்தவுடன் கல்யாணமும் பண்ணியாக வேண்டும். பெண்ணிற்கு நகை

நட்டுக்களும் குறைக்கக் கூடாது என்றுல் இது எவ்வாறு சாத்தியப்படும்? நடுத்தர நிலைமையில் உள்ளவர்கள் பாடு சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாது. இது தான் நமக்கும் நம் முன்னேர்களுக்குமுள்ள வித்தியாசம். அநாவசியமான செலவும் ஆடம்பர வாழ்க்கையும் இல்லாத படியால் அவர்கள் சுகமாகவும், சந்தோஷமாகவும், திருப்தியாகவும் வாழ்ந்தார்கள். அக்காலத்தில் பெண்கள், முற்றிலும் பெரியவர்கள் விருப்பப்படி நடந்துகொண்டார்கள். விவாக விஷயத்தில் தலையிடுகிற வழக்கம் இருக்கவில்லை. இக்காலத்திலோ, குழந்தைகள் விருப்பத்திற்குப் பெற்றேர்கள், 'சரி' என்று தலையாட்டும் நிலைமைக்கு வந்துகொண் டிருக்கிறது. தோளுக்கு மிஞ்சினல் தோழன்! பெண்ணுனல் என்ன? பிள்ளையானல் என்ன? அவர்கள் பார்த்துச் சரி என்று சொல்லாமல் நடப்பதில்லை. நாகரிகமும், ஆடம்பரமும் அதிகரிக்க அதிகரிக்க, திருப்தியும் சந்தோஷமும் குறைந்து கொண்டே வருகின்றன.

சமூகக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய நாட்களில் அவரவர்கள் குலாசார முறைப்படி தவருமல் நடந்து வந்தார்கள். விவாக விஷயம்கூடச் சௌகரியப்படி நடத்துவது என்பது வழக்கமாகிவிட்டது. குலாசாரமும், சம்பிரதாயங்களும் கூட இப்பொழுது மறைந்துகொண்டே வருகின்றன. ஹிந்து விவாகம் எட்டு வகைப்படும். காலக்கிரமத்தில் சாஸ்திர விவாகம், குலாசார விவாகம், சட்டபூர்வமான விவாகம் இவைகளே இப்பொழுது நடைபெற்று வருகின்றன. எவ்வளவு நாகரிகம் ஏற்பட்டாலும் விவாகம் சாஸ்திரப்படி நடத்தப்பட வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டே வருகிறது. அந்தக் கல்யாண தினம் ஒரு நாளாவது மணமகனும் மணமகளும் தம் ஜாதிக் கட்டுப்பாட்டிற்குரிய மாதிரியில் உடை அணிந்து

கொள்வதைப் பார்க்கிறோம்! அதுவும், முகூர்த்தம் நடக்கும் வரையில்தான்! மாலையில் ஒரே நாகரிகத் தோற்றத்தைத் தவிர, வேறெதையும் காணமுடியாது. தமக்குச் சேரவேண்டியதை வசூல் பண்ணும் பொருட்டுப் புரோகிதருடைய உபத்திரவத்திற்காக ஔபாசனம் நடக்க வேண்டியதாகிறது. மாப்பிள்ளை பெரிய ஆபிஸராயிருந்து விட்டால் சில சமயங்களில் அவருக்கு லீவு கிடைக்காத காரணத்தால், அவர், முகூர்த்தம் நடந்த மறுநாள் அதிகாலையிலேயே ஊருக்குப் புறப்படும்படி ஏற்படுகிறது. அப்பொழுது பிரவேச ஹோமத்துடன் சேஷ ஹோமமும் நடந்து விடும். பெண்ணின் மங்களகரமான வாழ்விற்கு விவாகம் முதலிய சுப காரியங்கள் முக்கியம் என்பது போக, மாப்பிள்ளையின் உத்தியோகமும் ஆடவனுடன் பெண்ணை நாகரிகமான முறையில் அனுப்புவதுமே முக்கியமாகிவிட்டது. பெண்ணை நாகரிகமான முறையில் அவன் வைத்துக்கொள்ள வேண்டுமே என்கிற கவலையும் அதிகரிக்கிறது.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. இதுவே நம் முன்னோர்களின் லட்சியம். அதனால், பெண்ணை நல்ல இடத்தில் விவாகம் செய்து கொடுக்கக் கூடாது என்பதல்ல. விதியை வெல்ல ஒருவராலும் முடியாது. 'ஆழ அமுக்கி முகக்கினும் நாழி முகவாது நாநாழி' என்பது பொய்க்குமா? பெற்றோர்கள் எவ்வளவு முயன்றாலும், கடைசியில் அவரவர்கள் கொடுத்து வைத்த அளவுதான் வாழ்க்கைப் பயன் கிட்டுகிறது. நம் முன்னோர்கள் எல்லாம் வல்ல இறைவனை நம்பித் தம் கடமையைச் செய்து வந்தார்கள். நாம் அதிக ஆராய்ச்சியினால், மூளையைக் குழப்பிக் கொண்டு கடைசியில் தலைவிதியின் மீது பழியைப் போடுகிறோம். விதியை மாற்ற ஒருவராலும் முடியாது. நாம் நமது கடமையைச் செய்கிறோம்.

அதனால் ஏற்படும் சந்தோஷமோ, துக்கமோ அது அவர வர்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. 'அன்று அயனர் அமைத்தபடிதான் யாவும் நடக்கும்'. நாம் வீணில் மனத்தை அலட்டிக் கொண்டபின் கடைசியில் இந்த முடி விற்கு வருகிறோம். ஆனால், அக்காலத்தில் அவர்கள் ஈசுவரன் மீது பாரத்தைப் போட்டுத் தம் கடமையைச் செய்து வந்தபடியால் மன அமைதியுடன் வாழ்ந்தார்கள். அவர்கள் முடித்து வைத்த கல்யாணங்களும் சீரும் சிறப்பு மாக நடந்து தம்பதிகளும் உத்தமமான மார்க்கத்தில் இல் லற தர்மத்தை நடத்தி இம்மை மறுமைக்குரிய பலன்களை அடைந்தார்கள். அவரவர்கள் குல தர்மத்தை ஒழுங்கா கப் பரிபாலித்து வருவதே சாலச் சிறந்ததாகும். நாகரி கம் எவ்வளவு முற்றிய போதிலும், விவாக விஷயம் மட்டி லும் சமூகக் கட்டுப்பாட்டிற்கும் பெரியோர்கள் சம்பிர தாய விதிப்படிக்கும் முற்றிலும் மாறிவிடாமல் நடந்து கொண்டிருக்க வேண்டும்.

✲

நான் ஒரு செயலில் லயித்து விடும்பொழுது தையல் காரனின் ஊசியைப் போன்று ஆகிவிடுகின்றேன். அதாவது, நான் உள் நுழைந்து அதிலிருக்கும் ரசத்தை அநுபவிக்கிறேன்.

—பென் ஜான்ஸன்

காகிதப் பட்டு

வெங்கடலக்ஷ்மி

விளக்கின் திரியைத் தாழ்த்தி வைத்துவிட்டுக் குழந்தையின் கட்டிலுக்குப் பக்கத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு கவலையுடன் உட்கார்ந்துகொண்டான் நாகராஜன்.

அவன் மகன் பாலகோபாலனுக்கு மூன்று வயசு. குழந்தைக்கு எட்டு நாளாக நல்ல ஜுரம்; கண்ணைத் திறவாமல் கை காலைப் போட்டது போட்டபடி கட்டிலின் மீது துவண்டு கிடந்தான் அவன். மணி ஏழுதான் ஆகியிருந்த போதிலும் வெளியே வானம் இருண்டு கிடந்தது. அவ்வப்பொழுது வானத்தில் பளிச்சிட்ட மின்னற் கொடிகளுடன் லேசாக மேக கர்ஜனையும் கேட்டது.

மூடப்பட்டிருந்த சாளரத்தின் கதவில் மழைத் துளிகள் 'டப் டப்'பென விழுந்து ஓசை செய்தன. கவலையில் ஆழ்ந்து கிடந்த நாகராஜனின் மனத்தை அச்சப்தம் மிகவும் சங்கடப் படுத்தியது. திரும்பிப் பார்த்தான்.

அறையின் நிலைப்படியில் தலையை வைத்துப் படுத்து நிம்மதியாய்க் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள் அவன் தாய் சிவகாமி. அதைக் கண்ட அவன் மனத்தில் மின்னலைப்போல் ஓர் எண்ணம் தோன்றி மறைந்தது. அவ்வெண்ணங்களுக்கு நடுவே அவன் மனைவி தங்கத்தின் அழகிய முகம் ஒரு விநாடி எழுந்தது.

விம்மித் தணிந்த தன் நெஞ்சைக் கையால் அழுத்திக் கொண்டான் நாகராஜன். பழைய நினைவுகள் அவன் மனத்தில் குபு குபுவென எழுந்தன.

பளீரென்ற ஒரு மின்னல் அவ்வறை முழுமையும் ஒரு கணம் பிரகாசமாக்கிவிட்டு மறைந்தது.

அந்தக் கணத்தில் விழித்துக்கொண்ட குழந்தை பயத்துடன், "அப்பா!" என்றலறினான். அவனுடைய சிறிய உடல் அச்சத்தினால் குலுங்கியது.

சட்டென்று அவனை அணைத்துக்கொண்ட நாகராஜன் "பாலு, பயப்படாதே கண்ணு! இதோ நானிருக்கிறேனே!" என்று சமாதானப் படுத்தினான். குழந்தை சற்று நேரம் மௌனமாயிருந்தான். அவன் உடல் அனலாய்க் கொதித்தது. "அப்பா! அம்மாவைக் கூப்பிடேன்! அம்மா பண்ணித் தந்த பச்சைக் காகிதப் படகு எங்கே? அலமாரிலேருக்கா? அதை யெடுத்துக் குடேன்! அம்மாவைப் பாக்கணுமே! அம்மா எப்போ வருவாள்?" என்று தந்தையின் முகத்தைக் கண்ணீர் ததும்பும் விழிகளால் நோக்கினான்.

குழந்தை யுள்ளத்தில் குமுறி வெடித்த ஏக்கத்தின் சின்னம், அழகிய அவன் விழிகளில் பிரதிபலித்தது. அதைக் கண்ட நாகராஜனின் ஹிருதயம் தாங்க முடியாத பாரத்தினால் அழுத்தப்படுவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று.

'ஐயோ! ஈசுவரா! இந்தக் குழந்தைக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? மூன்று நாளாக இதையே கேட்கிறானே குழந்தை! என்றெண்ணியபடியே, "பாலு! இதோ பாரு! நான் அன்றைக்குக் கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்தேனே! சிவப்புச் சாயம் பூசின அழகான படகு! அதைத் தாட்டுமா, பளபளன்னு ஜோராயிருக்கே!" என்று கேட்டான் நாகராஜன்.

குழந்தையின் முகம் சுண்டியது.

"ஊஹூம்! அது வேண்டாம்! நீ அம்மாவைக் கூப் பிடு!...அம்மா வந்தா நல்ல காயிதப் படகு பண்ணித் தருவா! நேக்கு அம்மா வேணுமே!"

அழுகை பொங்கிய குரலில் சிணுங்கினன் பாலு.

நாகராஜனுக்குச் சற்று நேரம் வரையில் என்ன செய்வதென்று தெரியவில்லை.

விரிந்த கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்த் துளிக ளுடன் தன்னைப் பரிதாபகரமாக நோக்கிய பாலகனின் முகம் அவனை இடித்துக் காட்டுவது போல் தோன்றியது.

சற்றுப் பொறுத்து, "பாலு, பச்சைக் காகிதம் அல மாரியிலே நிறைய வச்சிருக்கேனே! அதை எடுத்து நான் படகு பண்ணித் தாரட்டுமா?" என்று கொஞ்சிய குரலில் கேட்டான்.

குழந்தை வெறுப்புடன் தலை யசைத்தான்.

"வாண்டாம் போ! நோக்குப் பண்ணத் தெரியாது ...அம்மாதான் நன்னப் பண்ணுவா! அம்மாவைக் கூப் பிடு! அம்மா! அம்மா!"

அவனுடைய ஓலம் பலத்தது.

சட்டென்று எழுந்தான் நாகராஜன். குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டபடியே தன் தாயார் படுத்தி ருக்கும் இடத்திற்குப் போனன்.

"அம்மா! அம்மா! எழுந்திரு!" என்று அவளைத் தட்டி எழுப்பினன்.

"என்னடா வேணும்? பாலு அழறுனு?" என்று சாவதானமாகக் கேட்டுக்கொண்டே கண்ணைக் கசக்கிய படி எழுந்து உட்கார்ந்தாள் சிவகாமி.

"இல்லே போ! சிரிக்கிறுன்! நீ பாட்டில் பிரளயம் வந்தால் கூட நமக்கென்ன நிம்மதியாய்ப் போச்சென்று தூங்கிக் கொண்டிரு! பாலுவுக்கு அம்மா வேணுமாம்!

போ! உயரப்போய்ப் பெரிய கண்ணாடி அலமாரியிலே தங்கத்தினுடைய படம் வைத்திருக்கே! அதை எடுத்துக் கொண்டுவா! அதையாவது கொடுத்துப் பார்க்கிறேன்!''

தன்னுள்ளத்தில் ஊறியிருந்த மனக்கசப்பையும் வெறுப்பையும் இவ் வார்த்தைகளின் மூலம் வெளிப் படுத்தினான் நாகராஜன்.

"இப்போ என்னத்துக்கடா அது? இங்கே கொண்டுவா அவனை! நான் சமாதானப்படுத்துகிறேன்!" என்று குழந்தையை வாங்கிக்கொள்ளக் கையை நீட்டினாள் அவன் தாய்.

பாலு தலையைத் திருப்பிக்கொண்டு தன் தந்தையின் கழுத்தை இறுகக் கட்டியபடியே இன்னும் பலமாக அழவாரம்பித்தான். தன் தாயாரை நோக்கி நாகராஜன் பொங்கி எழுந்த கோபத்துடன், "போய்ப் படத்தை எடுத்துக்கொண்டுவா! நீ அவனைச் சமாதானப் படுத்தியது போதும்!'' என்று சீறினான்.

சிவகாமியம்மாள் ஏதோ சொல்ல வாயெடுத்தவள் அவன் முகத்தைப் பார்த்ததும் சட்டென்று தன்னை அடக்கிக்கொண்டவளாய் எழுந்து மாடிக்குப் போய்ச் சற்று நேரத்திற்கெல்லாம் கையில் ஒரு சிறிய புகைப் படத்துடன் திரும்பி வந்தாள்.

அதைக் கையில் வாங்கிப் பார்த்துவிட்டுக் குழந்தையிடம் கொடுத்தான் நாகராஜன். அவனுடைய கண்களில் நீர் மல்கியது.

பிறகு, குழந்தையைக் கட்டிலில் படுக்கவைத்துவிட்டு விளக்கைப் பெரிதாக்கிவிட்டுப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். மலர்ந்த விழிகளில் ஆவல் ஜ்வலிக்கத் தன் சின்னஞ்சிறு கையிலிருந்த தாயின் படத்தை விழுங்கி விடுபவன் போல் பார்த்துக்கொண்டே அசையாமல்

படுத்திருந்தான் பாலு. அவன் முகம் திருப்தியைக் காண்பித்தது.

வெளியே மழை விடாமல் கொட்டிக்கொண்டிருந்தது. காற்றின் 'ஹோ' வென்ற சத்தமும் ஆழ்ந்த இரவின் அமைதியும் நாகராஜன் மனத்தில் விவரிக்க முடியாத ஒரு திகிலை உண்டாக்கின. குற்றமுள்ள அவன் நெஞ்சம் கலவரத்திலாழ்ந்து கிடந்தது. களங்கமற்ற அக் குழந்தையின் கேள்விகள் அவன் நெஞ்சைச் சுட்டன.

தங்கம் பைத்தியமானுலென்ன? குழந்தையிட மிருந்து தாயைப்பிரித்த பாபம் யாரைச் சேரும்? தனக்கு இதே கதி நேர்ந்திருந்தால் தன்னை விட்டுவிட்டுத் தங்கம் ஓடிப்போயிருப்பாளா? மாட்டாள்!...நிச்சயமாக மாட்டாள்!... அம்மா சொல்லுவதைக் கேட்டுக்கொண்டு நிர்த்தாக்ஷிண்ணியமாக அவளைப் பிறந்த வீட்டுக்குத் துரத்திவிட்டேனே! இப்பொழுது என்ன செய்வது? குழந்தை இதே ஏக்கமாகப் படுத்துவிட்டானே! தங்கத்தை அழைத்துக் கொண்டு வரச் சொல்லி அவளுடைய அப்பாவுக்குக் கடிதம் போடட்டுமா? அவர் கூட எழுதியிருந்தாரே!...குழந்தையுடன் அவளைச் சேர்த்துவைத்தால் அவளுடைய சித்தம் ஸ்வாதீனத்துக்கு வந்தாலும் வருமென்று!...நான்தான் பாபி...வந்துவிட்டால் நமக்கு வீண் சிரமமேயென்று பதிலே போடாமல் இருந்துவிட்டேன்! அம்மா சொன்ஞல் எனக்குப் புத்தியெங்கே போச்சு! நான் தாலி கட்டின மனைவியல்லவா அவள்! சித்தம் ஸ்வாதீனமில்லாத பொழுதுகூட இக் குழந்தையின் பேரில் எவ்வளவு பாசம் வைத்திருந்தாள்!...நான்தான் பாபி!...பாபி! என்று தன்னையே சபித்துக்கொண்டான்.

சிவகாமியம்மாள் அவனைப் பயத்துடன் நோக்கியபடியே அவனிடம் ஒன்றும் பேசத் துணியாமல் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள்.

குழந்தை, தன் கையிலிருந்த படத்தை மார்போ டணைத்தபடியே அயர்ந்து தூங்கிவிட்டான்.

நாகராஜன், அவனுக்கு நன்ருகப் போர்த்துவிட்டு அப்படியே நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான். கடந்துபோன ஒன்றரை வருஷத்தின் துக்ககரமான சம்பவங்கள் அவன் மனக்கண் முன்பு ஒவ் வொன்ருய் எழுந்து நிழலாடின.


2

நாகராஜனின் மனைவி தங்கம், குழந்தை பால கோபாலனுக்கு ஒன்றரை வயசாகும் வரையில் நன்ருகவே யிருந்தாள். தாயற்ற பெண் அவள். தகப்பனுர் நல்ல உயர்ந்த நிலைமையிலிருந்தார். வேண்டியவரையில் சீர் வகைகள் செய்திருந்தார். தங்கத்தின் அழகிலும் பெருந் தன்மையான குணத்திலும் மயங்கிப் பூரித்துப் போயிருந் தான் நாகராஜன். தாயார் சிவகாமி தன் மருமகளைச் சற்றுக் கடுமையாகவே நடத்திவந்தாளாயினும் கபட மற்ற அப் பெண் அவள் மனம் கோணுமல் நடத்துவந்தாள். குழந்தைக்கு ஒன்றரை வயசு நடந்துகொண்டிருந்தது. மத்து மதுக்கென்று தந்தப் பதுமைபோலிருந்தான் அவன். தங்கம் அவனிடம் தன் உயிரையே வைத்திருந் தாள்.

சாயந்திரம் நாகராஜன் ஆபீஸிலிருந்து வரும்பொழுது, தலைவாரிச் சிங்காரித்துக் கொண்டு இடுப்பில் குழந்தை யுடன் வாசலில் வந்து நிற்பாள் தங்கம். நாகராஜன் அவ்வளவில் உலகையே மறந்துவிடுவான். எப்படியோ இன்பகரமாக ஓடின நாட்கள்.

ஒருதினம் மாலை நாகராஜன் ஆபீஸிலிருந்து வந்து உள்ளே நுழையும் பொழுது வீட்டில் ஒரே அமர்க்களமா யிருந்தது.

குழந்தை பாலுவுடன் கூடத்தில் உட்கார்ந்திருந்தாள் தங்கம். அவளைச் சுற்றிலும் வர்ணக்காகிதங்கள் இறைந்து கிடந்தன. தலையை விரித்துப் போட்டுக் கொண்டு உரத்த குரலில் ஏதேதோ பாடியபடியே அக் காகிதங்களைக் கிழித்துப் படகுகள் செய்து கொண்டிருந்



தாள். குழந்தை பாலகோபாலன் தன் கைகளைக்கொட்டிச் சிரித்தபடியே அப் படகுகளைச் சுக்குச் சுக்காய்ப் பிய்த்துப் போட்டுக்கொண்டிருந்தான்.

சிவகாமியம்மாள் தன் மகனைக் கண்டதும் ஒப்பாரி வைத்து அழலானாள்.

நாகராஜன் திகைத்துப்போய் நின்றான்.

மத்தியானத்திலிருந்து தங்கம் இப்படியிருப்பதாகவும் வீட்டிலிருக்கும் துணிகளில் கைக்கு அகப்பட்டதை யெல்லாம் கிழித்துப்போட்டு விட்டதாகவும் தெரிவித்தாள் சிவகாமி.

நாகராஜன் ஓடிப்போய் டாக்டரை அழைத்து வந்தான்.

டாக்டரைக் கண்ட தங்கம் கையிலிருந்த வர்ணக் காகிதங்களை யெல்லாம் கிழித்து அவர் முகத்தில் போட்டு விட்டு 'ஓ' வென்று கூச்சலிட்டபடியே பக்கத்திலிருந்த அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

மிகுந்த சிரமத்தின் பேரில் அவளை வெளியே தருவித்துப் பரிசோதித்தார் டாக்டர். அதிகரித்த உஷ்ணத்தினால் மூளை குழம்பிவிட்டதாகவும், பழையபடி சித்தம் ஸ்வாதீனத்துக்கு வருவது சிரம மென்றும் கூறிவிட்டார் அவர்.

நாகராஜனுக்கு இடியிடித்ததுபோல் ஆய்விட்டது.

வைத்தியம், மாந்தரீகம் எல்லாம் பார்த்தாய்விட்டது. ஒன்றிலும் பலன் காணவில்லை. குழந்தையை மட்டுமே தங்கம் நினைவில் வைத்திருந்தாள். சில நாட்கள் யாரிடமும் பேசாமல் மௌனமாயிருப்பாள். சில நாட்களில் பாட்டும் கூத்தும் அமர்க்களப்படும். கைக்குக் கிடைத்த காகிதங்களை யெல்லாம் கிழித்துப் படகுகள் செய்து வீடு முழுதும் இறைத்துவிடுவாள். பிறகு அவற்றை யெல்லாம் பொறுக்கிச் சுக்குச் சுக்காகக் கிழித் தெறிந்துவிட்டுக் குழந்தையைப் போல் கைகொட்டிச் சிரிப்பாள்.

நாளாக நாளாக நாகராஜனுக்கு மனம் கசந்து போயிற்று. அத்துடன் தாயின் போதனையும் மெல்லத் தலைக்கேறியது.

"கொண்டு தள்ளுடா பிறந்தாத்தில்! அவள் அப்பன் பார்த்துக் கொள்ளட்டும்! பைத்தியத்தைக் கட்டிக் கொண்டு எத்தனை நாளைக்கு மாரடிப்பது? எனக்கு ஒடம் புலே சீவனில்லேயப்பா!" என்று இரவு பகலாய் அவனைத் துளைத் தெடுத்தாள் சிவகாமியம்மாள்.

தங்கத்தை வந்து அழைத்துப்போகும்படி அவள் தந்தைக்கு எழுதினான் நாகராஜன். வந்து பார்த்த அவர் தம் மகளின் நிலையைக் கண்டு பரிதபித்தார். அவளிருக்கும் நிலையில் குழந்தையிடமிருந்து அவளைப் பிரிப்பது அவளுடைய உடல் நிலையை இன்னும் கேவலமாக்குமென்று சொல்லிப்பார்த்தார். நாகராஜன் குழந்தையை அனுப்ப முடியாதென்றும் அவளை மட்டும் அழைத்துப் போகும் படியும் கண்டிப்பாய்க் கூறிவிட்டான். சொல்லமுடியாத வெறுப்புடனும் மனக் கசப்புடனும் அவர் தம் பெண்ணை அழைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந் தார்.

சனி விட்டதென்று சந்தோஷித்தாள் சிவகாமியம் மாள். நாகராஜனுக்கும் அம்மட்டில் தொல்லை விட்ட தெனத் திருப்திதான். ஆனல், தன் தாயின் யோசனைப்படி இன்னொரு விவாகம் செய்துகொள்ள மட்டும் அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. தங்கத்தின் உடல் நிலை நாளுக்கு நாள் கேவலமாகி வருவதாகவும், சதா குழந்தை யின் பேரைச் சொல்லி அழுது கூக்குரல் போடுகிருளென் றும் அவள் தந்தை இரண்டொருதரம் எழுதியிருந்தார் நாகராஜனுக்கு. தன் தாயின் யோசனைப்படி நடந்து கொண்ட நாகராஜன் அக்கடிதங்களுக்குப் பதிலே போட வில்லை.

குழந்தை மட்டும் தன் தாயை மறக்கவேயில்லை. அடிக்கடி கேட்டுக்கொண்டேயிருந்தான். அவள் செய்து விட்டுச் சென்ற காகிதப் படகுகளும் அவன் நெஞ்சை

விட்டகலவில்லை. அந்த மாதிரியாகப் படகு செய்து கொடுக்கும்படி தன் தகப்பனாரையும் பாட்டியையும் அடிக்கடி தொந்தரவு செய்வான். நாகராஜன் விதம் விதமான வர்ணக் காகிதங்கள் வாங்கிவந்து சின்னதும் பெரிதுமாகப் பலவகைப் படகுகள் செய்து கொடுப்பான். ஆனால், பாலுவின் நெஞ்சம் அவற்றால் திருப்தியடையாது. வெறுப்புடன் அவற்றைக் கசக்கி எறிந்துவிட்டு அம்மா செய்து கொடுத்த படகுகளைப்போல் அவையில்லையென்று கூறி விடுவான். இந்த உபத்திரவம் சகிக்க முடியாமல் நாகராஜன் ஒரு தினம் ஆபீஸிலிருந்து வரும்பொழுது பளபளப்பாகச் சாயம் பூசி, மரத்தினாலாக்கப்பட்ட விளையாட்டுப் படகொன்று வாங்கிவந்தான். பாலகோபாலன் அதைக் கண்ணெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. திரும்பத் திரும்ப அம்மாவையும் அம்மா பண்ணிக்கொடுத்த காகிதப் படகுகளையுமே கேட்கலானான்.

"சரிதான் போ அம்மாவுடைய பைத்தியம் பிள்ளையையும் பிடிச்சுட்டாப்போலிருக்கு!" என்றாள் சிவகாமி ஒரு தினம். ஆனால், நாகராஜனின் மனம் குழந்தையைக் கோபித்துக்கொள்ளமட்டும் இடங் கொடுக்கவில்லை. தாயையும் குழந்தையையும் பிரித்துவைத்தது பெரிய தப்பிதமென்று அவன் நெஞ்சம் அவனை இடித்துக் கொண்டேயிருந்தது.

3

படீரென்ற சப்தம். அதைத் தொடர்ந்து மளமளாவென்று ஏதோ ஓசை.

நாற்காலியிலேயே உறங்கிவிட்ட நாகராஜன் திடுக்கிட்டு விழித்தான். கட்டிலில் எழுந்து உட்கார்ந்து மருள மருள விழித்துக்கொண்டிருந்தான் குழந்தை. மார்போடணைத்தபடியே தூங்கிவிட்ட அவன் தாயின்

படம் தரையில் விழுந்து சுக்கு நூருக உடைந்து கிடந்தது. சட்டென்று எழுந்து குழந்தையைச் சேர்த்தணைத்துக் கொண்டான் நாகராஜன். அவன் உடல் ஏதோ விவரிக்க முடியாத திகிலினுல் நடுங்கியது.

"அப்பா!...அப்பா!....அம்மா.......ஓடஞ்சுபோய்ட் டாளே!" என்று விம்மினன் குழந்தை. அவன் உடல் பதறியது.

"போனுப் போகட்டுமடா கண்ணு.பொழுது விடிஞ்ச தும் நான் வேறே கண்ணுடி போட்டுத்தரேன்!" என்று அவனைச் சமாதானப்படுத்தினுன் நாகராஜன்.

"நான் அப்பவே சொன்னேனே! கேட்டாயா? குழந்தை கையிலே கொடுக்காதேன்னுட்டு!" என்று சொல்லிக்கொண்டே கண்ணைக் கசக்கியபடி எழுந்து வந் தாள் சிவகாமி.

நாகராஜன் பதிலே பேசவில்லை.

வெளியே மழை ஓய்ந்திருந்தது. இடையிடையே 'கட கட' வென்று இடியோசை மட்டும் கேட்டுக்கொண் டிருந்தது.

பலபலவென்று விடியும் தருணம். கோழி கூவியது. 'தட தட' வென்று கதவைத் தட்டும் ஓசையும் அதைத் தொடர்ந்து "ஸார்! ஸார்! தந்தி, ஸார்!" என்று கூவும் குரலும் கேட்டன.

குழந்தையைப் படுக்கையில் விட்டு விட்டு வாசலுக்கு ஓடிப்போய்க் கதவைத் திறந்தான் நாகராஜன். தந்தியைக் கையில் வாங்குகையில் அவன் மனமும் தேகமும் அச்சத்தினுல் ஆட்டம் கொடுத்தன. பிரித்துப் படித் தான்...

"நேற்றிரவு ஒன்பது மணிக்குத் தங்கம் மரணம்." அவ்வளவுதான்! தந்தி நாகராஜன் கையிலிருந்து கீழே விழுந்தது.

வெறித்த பார்வையுடன் உள்ளே வந்த அவன் குழந்தையை மார்போடணைத்துக்கொண்டு விம்மி விம்மி அழலானுன்.

சிவகாமியம்மாள் வாசலிலிருந்தே பிலாக்கணம் வைக்கலானுள்.

ஒன்றும் விளங்காமல் விழித்த குழந்தை, "அப்பா! அம்மா வரவேமாட்டாளா? இனிமே நேக்குக் காயிதப்படகெல்லாம் யாரப்பா பண்ணித்தருவா?" என்று அழுகையால் தழு தழுத்த குரலில் தந்தையின் கழுத்தைக் கட்டியபடி கேட்டான்.

கபடமற்ற அப்பாலகனின் வார்த்தைகள் நாகராஜனின் நெஞ்சை ஈட்டியால் குத்துவது போலிருந்தன.

"காயிதப்படகுதானே! நான் பண்ணித்தரேண்டா கண்ணு!" என்று வறண்ட குரலில் கூறிக்கொண்டே கீழே கிடந்த தன் மனைவியின் படத்தைக் கையிலெடுத்து ஹிருதயம் பிளக்கும் வேதனையுடன் அதை ஊடுருவி நோக்கினுன் நாகராஜன்.

✲

தமிழ்ச் சகோதரிகளே! பலவித சாஸ்திரங்களில் படித்துத் தேறுங்கள். அங்ஙனம் தேறியவர்களில் சிலரேனும் வெளி நாடுகளுக்குப் போய்க் கீர்த்தி சம்பாதித்துக்கொண்டு வாருங்கள். விடுதலைத் தெய்வம், உங்களைத் தழுவும்பொருட்டு இரண்டு கைகளையும் விரித்துக் காத்து நிற்கிறது.

—பாரதியார்

ஹெலன் கெல்லர்

பூமிஜா

அந்தகக் கவி வீரராகவ முதலியாரைத் தமிழ் உலகத்திற்கு அறிமுகப் படுத்த வேண்டியதில்லை. அவர், பிறரைத் தன் முதுகிலே எழுத்தின் வடிவத்தை எழுதச் சொல்லிக் கல்வி பயிலும் நிலையில் இருந்தாரேயன்றித் தாமாகவே விரல்களால் தொட்டுத் தடவிப் படிக்கக்கூடிய வசதி ஏற்படவில்லை. ஆனால், தற்காலக் குருடர்களுக்கும், செவிட்டுக் குருடர்களுக்கும் அரும் வரப் பிரஸாதமாகக் கிடைத்திருப்பது 'ப்ரெயில் டைப்' என்னும் அச்சு. இந்த அச்சானது கடிதங்களை மேடுகளாக்கி, குருடர்கள் கைகளினால் தடவி, விஷயத்தைப் புரிந்துகொள்ளும்படி அமைந்துள்ளது. மேல் நாடுகளில் பலவிடங்களிலும், நம் நாட்டில் மைசூரிலும் உள்ள குருட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்த முறைதான் கையாளப் படுகிறது.

உலகத்தின் பல பாஷைகளிலும் வெளியிடப்படும் 'வாசகரின் சாரம்' (Readers' Digest) என்னும் மாதப் பத்திரிகை இந்தப் 'பிரெயில் டைப்' என்னும் அச்சிலும் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிற தென்பதைக் கேட்கும்பொழுது, குருடர்களின் கல்வி யறிவு எத்தகைய முன்னேற்ற மடைந்திருக்கிற தென்பதை அறியலாம். இவற்றிற்கெல்லாம் ஆதிகாரணமானவர் ஓர் அமெரிக்கப் பெண்மணி என்று சொல்லிக் கொள்ளும்பொழுது பெண் குலமே பெருமையினால் தலை நிமிரும். குருடர்களுக்காக அரிய சேவை செய்த அந்தப் பெண்மணிதான் ஹெலன் கெல்லர்.

தமிழ் நாட்டிலே, 'குருடனுக்குக் குருடன் வழி காட்டியதுபோல' என்று அறியாதவர், மற்றொருவருக்குப் புத்தி புகட்டுவதைக் குறிப்பதுண்டு. ஆனால், குருடும், செவிடுமான இந்த மங்கை, 'குருடருக்குக் குருடு வழி

காட்டி வாழ்வைப் பயனுள்ளதாகச் செய்ய முடியும்' என்பதைமெய்ப்பித்து விட்டாள்.

இன்று டாக்டர் கெல்லர் என்றால் உலகம் முழுவதும் அறியும். இவர் 1880-ஆம் ஆண்டில் அலபாமா (Alabama) விலுள்ள டஸ்கம்பியாவில் பிறந்தார். இவரது தாய் தந்தை



யர்கள் சிறந்த அறிவாளிகள். குழந்தை பிறந்தபொழுது மிகவும் அழகா யிருந்ததினாலேயே, பெற்றோர் ஹெலன் என்று பெயரிட்டனர். பொன் நிறமான கூந்தலும், நீல மணிக் கண்களும் உடையவளாய்க் காண்போர் கண்களை யும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தாள் குழந்தை ஹெலன்.

ஒன்றரை வயசிலேயே மழலை முற்றாத மென் சொலால் பேசவும் தொடங்கினாள். திடீரென்று ஒரு நாள் 'டைபாய்டு' ஜுரம் வந்தது. மாதக் கணக்காய் எமனுடன் போராடிப் பிழைத்தாள் குழந்தை. மெல்ல மெல்ல உடல் தெளிந்தது. ஆனால், கண்களும் காதும் போய் விட்டன! குழந்தையின் இந்த நிலை பெற்றோரின் மனத்தை உருக்கியது. சிரிப்பும் விளையாட்டுமாய் இருந்த குழந்தை அழுது அழுது சோர்ந்தது. பிறகு, திடீரென்று அழுவதையும் சிரிப்பதையும் நிறுத்திவிட்டது. இந்த நிலையில் பெற்ற மனம் எப்படிச் சும்மா யிருந்திருக்க முடியும்? இதற்குத் தகுந்த சிகிச்சை தேடும் பொருட்டுப் பெற்றோர் பரபரப்புடன் வழி தேடினர். கண்டவர்களை யெல்லாம் இது விஷயமாய்க் கலந்து ஆலோசித்தனர்.

தங்க விக்கிரகம் போல் கல கல வென்று ஓடி விளையாடி வீட்டை இன்ப நிலையமாகச் செய்துவந்த குழந்தை கண்களையும், செவிகளையும் இழந்து வாயும் உளறிவிட்டது என்றால், இந்தக் கொடுமையை யார்தான் சகிக்கமுடியும்? ஊரூராய் அலைந்து திரிந்து இந்தக் குழந்தைக்குச் சிகிச்சை செய்வார்களா? என்று ஆராயத் தொடங்கினர். அந்தச் சமயத்தில்தான் தற்செயலாகச் சார்லஸ் டிக்கென்ஸ் (Charles Dickens) எழுதிய 'அமெரிக்கன் நோட்ஸ்' என்னும் நூலைக் காப்டன் கெல்லர் பார்க்க நேரிட்டது. அதில் டாக்டர் ஹௌ (Howe) என்பவர் பிறவியில் செவிட்டுக் குருடான லோரா பிரிட்ஜ்மென் என்ற குழந்தையைப் பேசவும், படிக்கவும் செய்திருப்பதாகக் கண்டார். உடனே, அந்த டாக்டரின் உதவியை நாடினர்.

டாக்டர் ஹௌ, குருடும் செவிடுமான பல குழந்தைகளுக்கு ஒரு நிலையம் ஏற்படுத்தி அவர்களையும் மற்றவர்களைப் போல் பேசச் செய்த புண்ணியவான். ஆனால், காப்டன் கெல்லர் அவரைத் தேடிப் போகும்பொழுது

அவர் இறந்து நெடுநாள் ஆகிவிட்டது! அவர் திட்டத்தின் படி நிலையம் மட்டும் நடைபெற்று வந்தது. நிலையத்தின் தலைவி ஆன் ஸலிவன் என்பவள். இவள் ஒரு காலத்தில் குருடாயிருந்து டாக்டர் ஹெளவின் சிகிச்சையினால் கண் பெற்றவள். தன்னைப் போன்ற குருடர்களின் வாழ் நாளைச் சீர்திருத்துவதற்காகவே தன்னை அர்ப்பணம் செய்து கொண்டவள். ஊரெல்லாம் சுற்றி அலைந்து மேற் படி நிலையத்தை அடைந்த பொழுது குழந்தை ஹெல னுக்கு வயசு எழு. அசாத்திய விஷமம் செய்து வந்தாள். ஆனால், இத்தகைய குழந்தைகளுடனே உறவாடும் ஸல்லி வன், அவளை மிகவும் அன்புடன் அணைத்துக் கொண் டாள். அவள் விரும்பியபடி அவளுடைய பொறுப்பி லேயே குழந்தை விடப்பட்டாள்.

ஆன் ஸலிவன் ஒவ்வொரு பொருளையும் குழந்தை யின் கையில் கொடுத்துவிட்டு, அதன் பெயர்களை அவள் உணரும்படி உள்ளங்கையில் எழுத்தெழுத்தாக எழுதி அறிந்து கொள்ளும்படி செய்வாள். அடிக்கடி, தோட்டத் திற்கும், மைதானங்களுக்கும் அழைத்துச் சென்று, பல பொருள்களைப் பற்றிய விஷயங்களை அவள் அறிந்து கொள்ளும்படி போதிப்பாள்.

மேலும், குச்சிகள், விதைகள், அட்டைகள், நூல்கள், காகிதம் முதலியவற்றால் வீடு கட்டுதல், பறவைக் கூடு கட்டுதல் முதலிய விளையாட்டுகளினால்தான் ஹெலன் முதலில் பேசப் பழகினாள். தன் மனத்தில் தோன்றிய எண்ணங்களையெல்லாம் அழகான வாக்கியங்களால் எழுதிக் காண்பிக்கத் தொடங்கினாள். இந்தக் குழந்தை யின் அற்புதமான அறிவும், கலைத்திறனும் எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தன. பேசும்பொழுது பேசுகிறவர் களுடைய முகத்தைத் தடவிப்பார்த்து அவர்கள் பேச்சை உணர்ந்து கொள்ளுவாள்.

இதன் பிறகு, இவள் பிறருக்குக் கடிதங்கள் எழுதவும் தொடங்கினாள். ஹெலன் நல்ல கவிதைகளைக் கற்றுக்கொண்டாள். தானாகவே, கதைகளும், கட்டுரைகளும் எழுத ஆரம்பித்துவிட்டாள். இந்த ஆச்சரியமான பெண்ணைப் பெரிய அறிவாளிகளெல்லோரும் கண்டு வியந்தனர். அவர்களுள் போஸ்டனில் குருடர் பள்ளிக்கூடம் நடத்தி வந்த ஆனகோஸ் என்பவரும் ஒருவர். ஒருநாள் ஹெலன், ஸல்லிவனுடன் அவருடைய பள்ளிக்கூடத்திற்குப் போனாள்.

வகுப்பு நிசப்தமாய் நடந்து கொண்டிருந்தது. குழந்தைகள் ஏடுகளைத் தொட்டுத் தடவிப் படித்துக்கொண்டிருந்தன. காலடி ஓசையினால் வருபவரை அறிந்த குழந்தைகள் அவரை வெகு ஆனந்தத்துடன் வரவேற்றனர். ஒரு கதை சொல்ல வேண்டுமென்று வேண்டிக்கொண்டார் ஆனகோஸ். குழந்தைகளுக்கு ஏற்றதும் தனது சொந்தக் கற்பனையுமான ஒரு கதையைச் சொன்னாள் ஹெலன். ஆனகோஸ் ஆச்சரியத்தினால் மெய்ம்மறந்தார். இந்தக் குருட்டுப் பெண் சிறந்த அறிவாளி என்பது மட்டுமல்ல, இவள் ஒரு நல்ல கவி. கற்பனாலங்காரங்களுடன் எழுதக்கூடியவள் என்று நினைத்து, 'என் குழந்தைகளுக்கு நீ ஒரு நல்ல கதை எழுதிக்கொடுக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

பல நாட்கள் பொறுமையுடன் உழைத்து வரிவரியாகத் தடவித் தடவி எழுதி ஓர் இனிய கதையை அமைத்தாள் ஹெலன். பெற்றோர் அதைக் கண்டு ஆனந்தமடைந்தனர். அதற்குப் 'பனியரசன்' என்று பெயர். ஆனகோஸ் இதை வியந்து ஒரு பத்திரிகையிலும் வெளியிட்டார்.

ஆனால், சில அற்ப மனம்படைத்த எழுத்தாளர்கள் இது அவள் சொந்தக் கற்பனையன்று. காம்பி என்னும்

ஆசிரியரின் கதையைத் தழுவியது என்று சாதித்துக் காம்பி என்பவரைத் தூண்டிவிட்டு வியாஜ்யமும் போடச் செய்தனர். விசாரணை நடந்தது. முடிவில், காம்பியே அவளது கற்பனையைப் பாராட்டி மெச்சும்படி நேர்ந்தது. ஆனால், அவள் இளம் மனத்தில் இந்த விஷயம் முள் போல் உறுத்திக்கொண்டிருந்தது. அதன் பின் அவள் கதைகள் எழுதுவதில்லை என்று தீர்மானித்து விட்டாள்.

இதன் பின், பள்ளிக்கூடங்களிலும், மற்றப் பொருட் காட்சி சாலையிலும், தான் தொட்டுத் தடவிப் பார்க்கும் விஷயங்களை யெல்லாம் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று அவள் நெஞ்சிலே ஆவல் மீறிட்டு எழுந்தது. இவைகளை யெல்லாம் எழுத்தால் எழுதிப் பிறருக்குப் பயன் படுத்த வேண்டுமென்று தன் எண்ணங்களை யெல்லாம் எழுதி வைக்கத் தொடங்கினாள். இருந்தாலும் எழுதுவதோடு மட்டும் அவள் மனம் திருப்தி யடையவில்லை. மனத்திலுள்ள விஷயங்களை வாய் விட்டுப் பேச வேண்டுமென்று நெஞ்சு துடி துடித்தது. நாய் குரைக்கும்பொழுது கழுத்தைப் பிடித்துப் பார்ப்பாள். பூனை 'மியாவ்' என்னும் பொழுது அதன் வாயைத் தடவிப் பார்ப்பாள். தன் தாய், சுற்றிலுமுள்ளவர்களிடம் பேசும்பொழுது அவள் உதட்டையும் நெஞ்சையும் தொட்டுப் பார்த்துத் தானும் பேச முயற்சி செய்வாள். இப்படியே பிறர் பேசும் பொழுதெல்லாம் செய்வாள். அவள் பேச நினைக்கும் பொழுதெல்லாம் அர்த்த மற்ற ஒரு கூச்சல்தான் அவள் வாயிலிருந்து எழுந்ததே ஒழியத் தொடரான வார்த்தைகளை அவளால் பேசமுடியவில்லை. சிகாகோ ஸாரா புல்லர் என்னும் பெண்மணி இவளது ஆர்வத்தைக் கண்டு இவளைப் பேச வைப்பதாக ஒப்புக்கொண்டார். அவள் பலவருஷங்கள் முயன்று இம்மாதிரிக் குழந்தைகளின் சூட்சுமத்தைக் கண்டு அக்குழந்தைகளைப் பேசச் செய்திருக்கிறார். இவ

ளுடைய பெரு முயற்சியால் ஹெலன் தெளிவாகப் பேசும் சக்தியைப் பெற்ருள்.

"என் உள்ளத்தில் எழும் எண்ணங்களை யெல்லாம் இனிப் பிறருக்குச் சொல்ல முடியும்" என்று ஆனந்தக் கூத்தாடினுள் அவள். பெற்ருேர் இன்பக் கண்ணீர் வடித்தனர். 'எனக்குத் தெளிவாய்ப் பேசத் தெரிந்து விட்டது. அருகிலுள்ளவர்கள் என்னை நன்ருகப் புரிந்து கொள்ள முடியும். இனி நான் சுதந்திரமாய் வீதிகளில் செல்லவோ, படகு தள்ளவோ, நீந்தவோ, குதிரை ஏறவோ முடியும். அவற்றை நான் கற்றுக்கொள்வேன்' என்று துணிந்து செய்யத் தொடங்கினுள்.

ஒருநாள் அவள் தெருவில் நடந்து போய்க்கொண் டிருக்கும் பொழுது 'கண்ணில்லாத கபோதி......காசு கொடு' என்று ஒரு குழந்தை அவள் கையைப் பிடித்தது. குழந்தையை வாரி அணைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தாள். ஒரு வருஷத்தில் அவளை—டாமி என்னும் குருட் டுக் குழந்தையைப் பேசவும், படிக்கவும் பயிற்றுவித்தாள். பிஷப் ப்ரூக்ஸிற்கு அவன் படத்துடன் ஒரு கடிதம் எழுதி னுள். ஏற்கெனவே தனது பதினேராவது வயசு முதலே பிஷப் ப்ரூக்ஸுடன் கடிதப் போக்கு வரத்துச் செய்து வந்தாள். ஆகவே, அவர் தமது பத்திரிகையான ஹெரால் டில் படத்தையும் கடிதத்தையும் வெளியிட்டு அவளுடைய சரித்திரத்தையும் எழுதினுர். இதன் பயனுக அவள் குருட்டுக் குழந்தைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் அமைத் தாள். இதன்பின் ஒரு வாசகசாலையும் அமைத்தாள். கோடீஸ்வரர்கள் நிறைந்த அமெரிக்காவில் பண வசதிக் குக் குறைவென்ன?

அவள் பல நூல்களைக் கற்றதோடு, பிரெஞ்சு, லத்தீன், ஜெர்மன் முதலிய பாஷைகளையும், கணிதம், தத்துவம், சரித்திரம் முதலியவைகளையும் நன்கு கற்ருள். இதன்பின்


சர்வகலாசாலைப் பட்டம் பெறவேண்டுமென்று ஆவல் எழுந்தது. உடனே, கல்லூரியில் சேர்ந்து படித்து, கணக்கில் முதன்மையாகத் தேறிப் பீ. ஏ. பட்டம் பெற்ருள். இவளது ஆச்சரியமான உறுதியையும், திறமையையும் கண்டு உலகமே திகைத்தது. அற்புதம்! அதிசயம்! என்றெல்லாம் போற்றியது. அமெரிக்கத் தலைவர் இந்த அற்புதப் பெண்மணிக்கு டாக்டர் பட்டம் அளித்தார்.

இதன் பின், தன் போன்றவர்களுக்குச் சேவை செய்வதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டாள் அவள். ஆயிரக் கணக்கான பள்ளிக்கூடங்கள் நிறுவி நாடெங்கிலும் உள்ள குருட்டுக் குழந்தைகளைக் கல்வி பயின்று இன்ப வாழ்க்கை நடத்துவதற்கு உதவினள்.

ஒரு சமயம் இவள் கவியரசர் ரவீந்திர நாதரைச் சந்தித்தாள். "கவியரசரே, உம்முடைய கீதாஞ்சலியில் ஒன்று சொல்லும்" என்று கேட்டாள். அவர், 'இந்தக் குருட்டுப் பெண் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்?' என்று நினைத்தார். அவள் அவர் உதடுகளில் கையை வைத்து, "நான் புரிந்துகொள்ள முடியும். நீங்கள் சொல்லுங்கள்" என்ருள். கவியரசர் மெதுவாகத் தம் கவிதையில் ஒன்றைச் சொன்னர். அவள் எந்தப் பாடல் என்பதைப் பளிச்சென்று சொல்லிவிட்டாள். ஆச்சரியத்தால் திகைத்துப் போனர் கவியரசர். இந்த அறபுதமான காட்சியைத் திரைப் படமாக எடுத்திருக்கிருர்கள். ஐம்புலன்களும் சரியான நிலையில் இருந்தும் பக்க பலமும், சூழ்நிலையும், வசதிகளும் ஏராளமாக இருந்தும், அவைகளைத் தமக்கோ, தம்மைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கோ பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையே இன்றி வாழ்நாளை வீணுளாகக் கழிக்கும் நம் நாட்டுப் பெண்மணிகளுக்கும் சரி, ஆண்களுக்கும் சரி, ஹெலன் கெல்லரது இந்த அற்புதமான சேவை ஒரு தீபமாகக் காட்சியளிக்கிறது.

நம் நாட்டிலே நூற்றுக் கணக்கான குருடர்கள், நொண்டிகள், மூடவர்கள், நோயாளிகள், குஷ்ட ரோகிகள் ஆகியவர்களுக்காகப் போராடவும் சேவை செய்யவும் ஒருவர் இன்னும் பிறக்கவேயில்லையோ என்பதை நினைக்குந்தோறும் 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்துவிட்டால்' என்ற பாரதியாரின் வாக்குத்தான் நினைவுக்கு வருகிறது.

*



மீரத் காங்கிரஸில் பணி புரிந்த பெண்தொண்டர் படையினர் கொடி வணக்கம் செய்கிறார்கள்.



வெளுக்கும் முறை

எஸ். யமுனா

முன்பு பருத்தி ஆடைகளை வீட்டிலேயே சுலபமான, சுகாதார முறையில், ஆடைகள் கெடாதவண்ணம் வெளுக்கும் முறையைப் படித்தீர்கள். பருத்தி ஆடையை வெளுப்பது மிகவும் கஷ்டமானதுமல்ல. மேலும், அநேகருக்குத் தெரிந்த விஷயமாகவும் எண்ணியிருப்பீர்கள். ஆனால், பின் கூறப்போகும் ஆடைகளை, வண்ணானிடம் வெளுப்பதைவிட, கூறப்போகும் முறையில் சிரமத்தைக் கவனியாமல் வீட்டிலேயே வெளுத்து அழுக்கெடுத்தால், ஆடைகளை அநேக விதமான நாசத்திலிருந்து காப்பாற்றி, அநேக நாள் உழைக்கும்படி செய்யலாம்.

கம்பளிச் சட்டைகள்: சாதாரணமாகக் கம்பளிச் சட்டைகள் தண்ணீரில் நனைத்தவுடன் சுருங்கிவிடும். ஆகையால், ஆடையை நன்றாய் உதறி, சட்டை, கோட்டுகளாயிருப்பின், ஒரு காகிதத்தின் மேல் பிரித்து வைத்து, அந்தச் சட்டையின் அளவைக் காகிதத்தில் வரைந்து கொள்ளவும். கம்பளி ஆடைகள் வெந்நீரில் நனைத்தவுடன் மிகவும் மிருதுவாக இருக்கும். ஆகையால், கம்பளி ஆடைகளை வெத வெதப்பான தண்ணீரில்தான் நனைக்க வேண்டும். ஆடையைத் தோய்த்து உலரவைக்கும் வரைக்கும் தண்ணீர் ஒரேவித உஷ்ணத்திலிருப்பதில்தான் கம்பளி ஆடையை வெளுக்கும் ரகசியம் இருக்கிறது. அதிகக் காரமில்லாத (Alkali) சோப்புக்களைத்தான் இவ்வாடைகளுக்கு உபயோகப்படுத்த வேண்டும். இந்தச் சோப்புக்

களையும், பருத்தி ஆடைக்குச் செய்வது போலவே, சோப் ஜல்லியாகச் செய்து கொள்வது நலமாகும். புங்காங் கொட்டையையும் கலர்க் கம்பளிகளுக்கு உப யோகப்படுத்தலாம். ஒரு பாத்திரத்தில் வெத வெதப்பான நீரை எடுத்து இந்தச் சோப் ஜல்லியைக் கலந்து நன்ருய் நுரை மேலெழும்பும் வரை கலக்கவும். நுரை அடங்குவ தற்குமுன் ஆடையை அதில் நனைத்து, ஆடையை நன்ருய் மேலுங்கீழுமாக அதில் அலசவும். இவ்வாடையை ஒரு பொழுதும் அழுத்திக் கசக்கித் தோய்க்கக்கூடாது. என் என்ருல், கம்பளிகள் விரைவில் இணைப்புப் பிரிந்து சொற சொறப்பாகி, முறப்பாகிவிடும்.

இரண்டு மூன்று தடவை வெத வெதப்பான தண்ணீரி லேயே அலசி எடுப்பதால் அதிலிருக்கும் அழுக்கு, தண்ணீரிலிறங்கிவிடும். கம்பளி ஆடைக்குச் சுயேச்சை யாக உள்ள மிருதுத்தன்மையும், பள பளப்பும், தோய்ப்ப தில் மாறிப்போகுமாகையால், அந்த மிருதுத்தன்மையும், பள பளப்பையும் ஆடை மறுபடியும் பெறுமாறு, கடை சித் தடவையாக அலசும் நீரில் கொஞ்சம் கிளிசரைன் (Glycerine) சேர்க்கவும். கடைசியாக அலசிய பிறகு, ஆடையைப் பிழியாமல், ஓர் ஈரத்தை இழுக்கக்கூடிய துணியிலோ, (Turkish Towel இதற்கு மிகவும் பொருத்த மானது.) அல்லது சவுக்கத்திலோ ஆடையை நன்ருய்ப் பிரித்து வைத்துத் துணியுடன் சுற்றிஞல், ஆடையி லிருக்கும் ஜலம் எல்லாம் துணி எடுத்துக் கொள்ளும். சிறிது நேரம் கழித்துத் துணியிலிருந்து ஆடையை எடுத்து நனைப்பதற்குமுன் எடுத்து அளவு வரையப்பட்ட காகிதத்தில் ஆடையைப் பிரித்து வைக்கவும். ஆடை அதி கம் சுருங்கியிருப்பதைக் காணலாம். சுருங்கிய ஆடையை வரையப்பட்ட அளவுக்கு நான்கு பக்கத்திலும் இழுத்துப் பழைய அளவுக்கு நிரவி அப்படியே காயவைக்கவும்.

கம்பளி ஆடைகளை ஒருபொழுதும் எந்தக் காரணத்தைக் கொண்டும் கொடிகளில் உலரவைக்கலாகாது. காரணம், கம்பளி மறுபடியும் சுருங்கி, தொங்கும் பாகத்தில் நீண்டு இழுத்துக்கொள்ளும். ஆகையால், தரையிலோ, அல்லது மேஜைமீதோ அந்த அளவுடனேயே அப்படியே நிழலில் உலரவைக்கவும். சுருக்கங்கள் ஏதாகிலுமிருந்தால், உலர்ந்த பிறகு, உட்பக்கத்தைத் திருப்பி, மேலே ஒரு வெள்ளைத் துணியைப் பரப்பிச் சிறிது ஜலம் தெளித்து, நிதானமான உஷ்ணமுள்ள இஸ்திரிப் பெட்டி கொண்டு லேசாக இஸ்திரி செய்தால் சுருக்கங்கள் நீங்கிவிடும். இஸ்திரிப் பெட்டி இல்லாதவர்கள் ஒரு கனமான தட்டைச் (தாம்பாளப்) சிறிது உஷ்ணப்படுத்தி, ஆடையின்மீது லேசாக ஒட்டினுல் சுருக்கங்கள் நீங்கிவிடும்.

2. பட்டாடைகள்: கம்பளிகளைப் போலவேதான் இவைகளையும் வெளுக்க வேண்டும். ஆனுல், கம்பளியைப் போல் அவ்வளவு சுருங்காதாகையால் அளவு எடுக்க வேண்டிய அவசியமில்லை. பட்டுகளுக்குக் கஞ்சிக்குப் பதிலாக, கோந்தை உபயோகப் படுத்தலாம். பாதி உலர்ந்ததுமே வேறு வெள்ளைத் துணியை மேலாகப் பரப்பி நிதானமான உஷ்ணமுள்ள பெட்டியைக் கொண்டு இஸ்திரி போடவேண்டும். போங்கீ பட்டிற்கு இஸ்திரி போடலாகாது. கிரேப் (crape) ஸில்க்குகளுக்கு இஸ்திரி அவசியமில்லை. இவைகளையும் கம்பளிகளைப் போலவே கொடிகளில் உலர்த்தாமல் பரப்பிக் காயவைப்பது நலம்.

3. வெல்வெட்: (Velveteen) பட்டைப் போலவே இவைகளையும் வெளுக்கவும். ஆனுல், வெல்வெட், நனைந்தவுடன் அதனுடைய பளபளப்பு மறைந்துவிடும். அந்த மேல் பளபளப்பு வரும்பொருட்டு வெல்வெட் ஆடை காய்ந்த பிறகு நன்ருய் உதறி, பிரஷ் (Brush) போட்டு இஸ்திரிப் பெட்டியை நல்ல உஷ்ணமாக்கி வைத்து நல்ல

ஈரமான துணியை அதன்மேல் போடவும். அதன் முன்னால் தோய்த்த வெல்வெட் ஆடையை உட்புறமாகத் திருப்பிச் சீக்கிரமாக அந்த இஸ்திரிப் பெட்டியின் முன் காட்டினால் ஈரத் துணியிலிருந்து வரும் நீராவியால் படிந்து போன வெல்வட்டிலுள்ள மிருதுவான நூல்கள் மறுபடியும் நிமிர்ந்து ஆடைக்குப் பளபளப்பைத் தரும். இஸ்திரிப் பெட்டியில்லாதவர்கள் கெட்டி (Kettle) யிலாவது, ஒரு பாத்திரத்திலாவது தண்ணீரை நன்றாய்க் கொதிக்கவைத்து அதிலிருந்து வரும் நீராவிக்கு நேராக வெல்வெட் ஆடையை உட்புறமாகத் திருப்பி, ஆடையைப் பூராவும் ஆவியில் காட்டினால், மறுபடியும் அந்த பளபளப்பை ஆடை பெறும். வெல்வெட் ஆடைகளை மடிப்பதை விடக் கொக்கிகளில் மாட்டிவைப்பது நலம்.

4. கொசுவலை, லேஸ் (Lace) ஆடைகள்: சோப் ஜல்லியை முன் கூறிய பிரகாரம் உபயோகித்து நன்றாய் நுரை வரும்படி கலக்கவும். இதற்கும் சோப்பில் அதிகக் காரம் சேர்ந்திருக்கக்கூடாது. கொசுவலையையோ, அல்லது தோய்க்கப் போகும் லேஸையோ ஒரு மெல்லிய பழைய துணியில் தளர்வாகக் கட்டிச் சோப்பு நுரையில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஊறவைக்கவும். அந்த மெல்லிய துணியுடனேயே லேசாக இரண்டு அல்லது மூன்று தடவை அலசினால் லேஸிலிருக்கும் அழுக்கு, நீரில் இறங்கிவிடும். இதேமாதிரி இரண்டு, மூன்று தடவை வெவ்வேறு ஜலத்தில் மெல்லிய துணியுடனேயே அலசவும். பிறகு மிகவும் மெதுவாக மெல்லிய துணியுடனேயே லேஸைப் பிழிந்து அதிலிருக்கும் நீரை எடுக்கவும். (கஞ்சி வேண்டிய அவசியமிருந்தால் மிகவும் கொஞ்சமாக, வடித்த, வெண்மையான கஞ்சியையும், நீலப் பௌடரையும் கடைசியில் அலசும் தண்ணீரில் சேர்த்துக் கொள்ளவும்.) பிறகு, இன்னும் இருக்கும் நீரை எடுப்பதற்குக் கம்பளி

யைச் சுற்றியது போலவே சவுக்கத்தில் சிறிது நேரம் சுற்றி வைத்திருந்தால் ஈரம் வாங்கிவிடும்.

பிறகு லேஸை, ஒரு மேஜையின் மேல் காகிதத்தைப் பரப்பி; அதன்மேல் பிரித்து, எல்லாப் பக்கத்திலும் சுருங்கா வண்ணம் குண்டூசியைக் குத்தி வைக்கவும். கொசு வலையாக இருப்பின் கட்டிலில் கட்டுவது போலவே ஒரு நிழலான இடத்தில் கட்டி, உலர வைக்கவும்.

லேஸிற்கு இஸ்திரி போட வேண்டுமானால், நன்றாய்க் காய்ந்து போவதற்கு முன் குண்டூசியை எடுத்துவிட்டு ஒரு வெள்ளைத் துணியை மேலாகப் பரப்பி அதிக உஷ்ண மில்லாத இஸ்திரிப் பெட்டியைக் கொண்டு இஸ்திரி போடவும்.

5. **ரத்தினக் கம்பளங்கள்:** கம்பளத்தை நன்றாய் உதறி, அதிலிருக்கும் தூசிகளை எடுக்கவும். ஒரு கிண்ணத் தில் கொஞ்சம் ஜலம் எடுத்து அதிகக் காரமில்லாத பட்டு களுக்கு உபயோகப்படுத்தும் சோப் ஜல்லியைக் கலந்து நல்ல நுரை கிளம்பி வரும் வரை கலக்கவும். இந்த நுரை யைக் கம்பளத்தின் ஒரு மூலையின் மேலே சிறிய பாகத்தில் தெளித்து, ஒரு பிரஷ்ஷைக் கொண்டு நன்றாய் வட்டமாக (circular motion) மேலாகப் பலமுறை தேய்க்க வேண்டும். பிறகு, மற்றொரு கிண்ணத்திலிருக்கும் தெளி வான ஜலத்தைத் தெளித்து வட்டமாகத் தேய்த்தபின் பஞ்சைப் பந்துபோல் வைத்துக்கொண்டு தெளித்த நீர் எல்லாவற்றையும் பஞ்சு உறுஞ்சுமாறு ஒத்தி ஒத்தி எடுக்க வேண்டும். இப்பொழுது அந்தத் துடைத்த பாகம் மற்றப் பாகங்களை விட மிகவும் மிருதுவாயும், பூ வேலைகள் தெளி வாயும், சுத்தமாயும் இருப்பதைக் காணலாம். மேற் சொன்னபடியே சிறிது சிறிது பாகமாக முழுக் கம்பளங் களையும் சுத்தம் செய்தல் வேண்டும். குறிப்பு: சுத்தம் செய்யும்போது ஒன்று, மேல் இடப் பக்கக் கம்பளத்தி

விருந்து ஆரம்பித்து வரி வரியாக அழுக்கை எடுக்க வேண்டும்; அல்லது, கம்பளத்தின் மத்தியில் ஆரம்பித்து நான்கு பக்கங்களிலும் சுற்றிச் சுற்றி வெளிப்பாகத்தைக் கடைசியில் துடைக்க வேண்டும்.

6. மழை உடை: (Rain coat) லின்சீட் எண்ணெய்யை (Linseed oil) மேலாக ஆடை பூராவும் தடவவும். பிறகு, எண்ணெய்ப் பிசுக்கை எடுப்பதற்குப் பெட்ரோல் அல்லது ஸ்பிரிட்டை உபயோகப் படுத்தவும். கை, காலர் முதலியவற்றைச் சோப் நுரையைக் கொண்டு சுத்தம் செய்யவும். ஆடையை இரண்டு கொக்கிகளில் நன்ருய் விரித்துத் தொங்கவிட்டு, ஒரு வாளி ஜலததில் சிறிது அமோனியாவைக் (Dilute ammonia) கலந்து, மேலிருந்து ஆடையின் மேல் விடவும். இப்பொழுது ஆடையிலிருக்கும் எந்த விதமான அழுக்கும் கரைந்து விடுகிறது.

7. எண்ணெய்த் துணி: (Oil cloth) துணியை நன்ருய்ப் பிரித்துப் போட்டுச் சிறிது அமோனியா கலந்த சோப்பு ஜலத்தை விட்டு அலம்பினுல் போதுமானது. இத் துணியை எப்பொழுதும் நிழலிலேயே உலர வைக்க வேண்டும். அதை எடுத்து வைக்கும்போது மடிக்காமல் எப்போதும் பாய்களைச் சுருட்டுவது போல் சுருட்டி வைக்க வேண்டும். ரப்பர்த் துணியையும் இதே விதத்தில் சுத்தம் செய்யலாம்.

8. தோல்: இரண்டு பங்கு வினிகரில் (Vinegar) அரைப் பங்கு லின்சீட் (Linseed) எண்ணெய்யைக் கலந்து, நன்ருய்த் தோல் மேல் சிறிது எடுத்து நன்ருய்த் தேய்த்தால் எந்த விதமான பழைய தோலுக்கும் புது மெருகு கொடுத்தாற்போலாகும்.

✲

தீர்ப்பு

மாஸ்தி வெங்கடேசய்யங்கார்
கன்னட மூலத்திலிருந்து
குகப்பிரியை—ராஜலக்ஷ்மி அம்மாள்

எங்கள் பாட்டனர் கோர்ட்டு நியாயாதிபதியின் கீழ் வெகுமானம் பெறக்கூடிய சிரஸ்தார் வேலையிலிருந்தார். ஒரு நாள் எங்கள் வீட்டிலிருக்கும் பழைய தஸ்தாவேஜுகளையெல்லாம் பரிசோதித்து உபயோகமற்றவைகளைக் கிழித்தெறியலாம் என்னும் எண்ணத்துடன் எடுத்துப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினேன்.

அவைகள் எங்கள் தாத்தாவின் காலத்துப் பத்திரங்கள்! அவைகளுள் கோர்ட்டு நியாயாதிபதி எழுதிய டைரியின் சில பகுதிகள் கிடைத்தன. அந்த நியாயாதிபதியை நானும் பார்த்திருக்கிறேன். குழந்தைப் பருவத்தில் ஒவ்வொரு சமயம் அவர் எனக்குத் தின்பண்டங்கள் கொடுத்ததும் ஞாபகம் வந்தது. அவர் மிகவும் நல்ல மனிதர். டைரியில் என்ன விஷயமிருக்கலாமென்ற எண்ணத்துடன் நடுவிலே பிரித்துச் சில பாகங்களை வாசித்தேன். ஒருநாள் குறிப்பைப் படித்ததும், முழுவதையும் ஒரே மூச்சில் வாசித்துவிட வேண்டும் என்ற ஆவல் மூண்டது. எல்லாவற்றையும் படித்தேன்.


அது அப்படி ஒன்றும் பெரியதென்று சொல்வதற்கில்லை. உட்கார்ந்தபடியே படித்து முடித்துவிட்டேன். விஷயங்கள் எனக்கு மிகவும் ஸ்வாரஸ்யமாய்த் தோன்றியபடியால் மற்றவர்களுக்கும் ரசமாகவே இருக்கும் என்று

அதை இங்கே எழுதுகிறேன். டைரியிலிருந்த பாஷை ஆங்கிலம். அந்தத் துரை கன்னடம் நன்ருய்ப் பேசவும், எழுதவும் கற்றவர். இந்த டைரியில் அங்கங்கே சிற்சில பகுதிகள் கன்னடத்தில் இருக்கின்றன. ஆனல், என் சிலவற்றைத் தன் தாய் மொழியாகிய ஆங்கிலத்தை விடுத்துக் கன்னடத்தில் எழுத வேண்டும்? ஒருவேளை, சீக்கிரமாகவும் சுலபமாகவும் எழுதும் எண்ணத்தினலோ, அல்லது



தனது கருத்தைச் சுலபமாக வெளியிட இந்தப் பாஷையே சுலபம் என்ற காரணத்தினலோ இருக்கலாம். ஆனல்,

பெரும்பான்மை ஆங்கிலத்தில்தான் இருந்தது. நான் இங்கே எழுதுவது டைரியிலிருக்கும் ஒரு நாளைய குறிப்பின் மொழி பெயர்ப்பு. பாஷை மொழி பெயர்ப்பாய்இருந்தாலும் அவர் அபிப்பிராயத்தை உள்ளபடி தெளிவாக்க வேண்டுமென்று மிகவும் சிரமப்பட்டுத்தான் எழுதியிருக்கிறேன். பாஷை எப்படி இருந்தபோதிலும் விஷயம் ருசிக்கலாம்.



இன்று நான் ஒரு வழக்கை விசாரித்துத்தீர்ப்புக்கொடுக்க வேண்டி வந்தது வழக்கிலே வாதி ஆந்தல் ஹென்றித் துரை.குற்றவாளிகள் ஒட்ட ஜாதியைச் சேர்ந்தராமபோயும், திம்மபோயும். ஆந்தல் ஹென்றியும் ஓரளவில் குற்றவாளி என்றே சொல்லலாம். ஆனல், தண்டிப்பதானல் ராமபோயி, திம்மபோயி இவர்களைத்தான் தண்டிக்க வேண்டுமே அன்றி, ஆந்தல் ஹென்றியைத் தண்டிக்க முடியாது. ஹென்றியின் தர்ம ஞானத்தின் மகிமை

பினல் அவருக்கு இன்றைக்கோ நாளைக்கோ ஏற்படக் கூடிய பச்சாத்தாபம் ஒன்று மட்டுமே இவ்வுலகில் அநுபவிக்கக் கூடிய தண்டனை. சில சாமான்களைப் போக் கடித்துக்கொண் டிருக்கிறார். அதுவும் அவருக்கு ஒரு தண் டனைதான். எல்லாவற்றையும் பார்த்துக்கொண் டிருக்கும் பகவான் வேறு என்ன தண்டனை கொடுப்பாரோ?

இப்பொழுது குற்றவாளிகள் ராமபோயும் திம்ம போயும்தான் என்று உலகம் நினைக்கிறது. அவ்விருவரும் சந்திரபுரம் டிவிஷன் கொம்பீத் தாலுக்காவைச் சேர்ந்த இராமபுரம் கிராமவாசிகள்.

இராமபுரம் மிகவும் அழகிய சின்னஞ்சிறு கிராமம். அதில் சுமார் ஐம்பது அறுபது வீடுகள்தானிருக்கும். சுமார் முப்பது வீட்டார் குடியானவர்கள். சிலர் தமிழர் கள், சிலர் ஒட்டர்கள். ஊர், பார்வைக்குச் சிறியதாய் இருந்தாலும் மிகவும் வசதி யுள்ளது. அதனல் போக்கு வரத்தும் கொஞ்சம் அதிக மென்றே சொல்லலாம். ஊருக் குச் சமீபத்திலிருக்கும் ஸ்ரீ ராமன் கோயிலுக்குப் பிரார்த் தனை செலுத்துவதன் பொருட்டு யாத்திரையாக வரும் ஜனங்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருப் பார்கள்.

கிராமத்தில் ஒட்டர்களின் வீடு பத்துப் பதினைந்து தான். அவர்களும் வேளாளர்களைப் போல் உழுது பயிரிட்டும், குடிக்காத சமயங்களில் பரம யோக்கியர் களாகவும் நடந்து கொள்ளுவார்கள். அவர்கள் விஷய மான வம்பு தும்புகளில் தலையிடாதவரையில் மிகவும் நல்ல மனிதர்கள்தான். மதம், ஜாதி என்ற பெயரால் அவர்களைத் தாக்காமலிருந்தால் தர்மத்தை அநுசரித்தே நடப்பவர்கள் தான். மழை, வேளாண்மை எல்லாம் ஒழுங் காக நடைபெற்றால் திருடமாட்டார்கள். ஆசை மூட்டக் கூடிய பொருள்களை எதிரே குவித்திருந்து, திருடக்கூடிய

வசதியிருந்தாலும் விரலால் கூடத் தொடமாட்டார்கள். இயற்கை அவர்களை வஞ்சிக்காத வரையில் நல்ல வழியிலேதான் நடந்து கொள்வார்கள். அதாவது நம் திருஷ்டிக்குத் தர்மம், அதர்மம் என்பது வித்தியாசப் பட்டால் அவர்களுக்குத் தெரிந்த அளவு தர்ம மார்க்கத்தி லேயேதான் நடக்கக் கூடியவர்கள்.

அவர்களுக்குத் தெரிந்தவைகளுள், முன்குறித்த இராமன் கோயிலிலுள்ள விக்ரகத்தினிடம் அவர்களுக் கிருந்த உறுதியான பக்தி ஒரு முக்கியமான அம்சம். பிறரிடம் எவ்வளவு உறுதியாய் வாக்களித்திருந்தாலும் அதை மாற்றுவதற்கு அஞ்சாத இந்தப் போயிகள் இராம தேவனுக்கு வாக்களித்த தொகை மூன்று காசாக இருந் தாலும் அந்தப் பிரார்த்தனையைச் செலுத்தாமலிருக்க அஞ்சுவார்கள் எப்படியாவது அந்தக் காணிக்கையைச் செலுத்தியே தீருவார்கள்.

இவர்களுக்குள் ஜாதி அபிமானமும், கட்டுப்பாடும் அதிகம். இதர ஜாதி மனிதர்களை மோசம் செய்வார்கள். தொந்தரவு செய்வார்கள். சொன்ன சொல் தவறுவார் கள். ஆனால், தங்கள் ஜாதிக்குள் வெகு ஒழுங்காகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ளுவார்கள். அவர்கள் இருதயத்தில், ஒரு வேளை மேற்படி இராமனும் தங்கள் இனத்தைச் சேர்ந்தவன் என்று தோன்றித்தான் மோசம் செய்வதில்லையோ என்னமோ? நமக்கென்ன தெரியும்! இது அவர்களுக்கு மட்டுமா என்ன? நம் நாட்டாருக்கும் இதுதான் சுவபாவம் என்றுதான் தோன்றுகிறது.

நம் நாட்டு ஜனங்களில் பலர் இந்த இந்து தேசத்திற்கு வந்து இவ்விடத்திலேயே வேரூன்றி இந்தத் தேசத்து ஜனங்களுக்கு எவ்விதமான துன்பங்களைக் கொடுப்பதற் கும் பின்வாங்குவதில்லை. அவர்களுடைய கஷ்ட நஷ்டங் களைப் பற்றியோ இன்ப துன்பங்களைப் பற்றியோ கடுகள

வும் சிந்தையில்லாமல் கசக்கிப் பிழிந்து வேலே வாங்குகிருர்கள். ஆனல், எனக்குத் தெரிந்த வரையில் தங்களுக்குள் மட்டும் பரம யோக்கியர்களாய் நடந்து கொள்ளுகிருர்கள். ஆகையால், சுயஜாதி அபிமானம் இந்தப் போயிகளிடத்தில் இருப்பது குற்றம் என்று சொல்ல முடியுமா? குற்றமானலும் சரி; குணமானலும் சரி. இதுதான் அவர்களுடைய பொதுப்படையான குணம். மொத்தத்தில் இந்த ஒட்டர்கள் ஏதோ ஒரு தர்மத்தையும் நீதியையும் உண்மையான பக்தியோடும் சிரத்தையோடும் பின்பற்றி, ஜன சமூகத்தில் நல்ல செயல்களைச் செய்யக் கூடிய யோக்கியமான குடிகள் என்பதில் சந்தேகமில்லை.

அநேகமாய், நமக்குள் இவர்கள் பின்பற்றும் இந்தத் தர்மமானது உண்மையானதல்ல, அவர்களைக் காப்பாற்றக் கூடிய சக்தி வாய்ந்ததல்ல என்றும் தோன்றலாம். பண்பட்ட மனத்திற்குக் கஷ்டமான தத்துவங்கள் தான் சம்மதம். சுலபமான தத்துவங்களினல் நாம் திருப்தி அடைவதில்லை. இதுதான் நாகரிகத்தின் இருதயம். சில சமயங்களில் இது நம்மிடமுள்ள தோஷமா குணமா? என்று கூடச் சந்தேகப் பட்டதுண்டு. முரட்டு ஜனங்களின் மனம் வசந்த காலத்துக் குயிலின் குரலுக்கு உருகிவிடும். அது மீண்டும் ஒரே ஸ்வரத்தையேதான் கூவுகிறது. ஆனல், நம்முடைய மனம் உருகவேண்டுமானல் பீத்ஹோவனின் கானமும் போதாது. (பீத்ஹோவன் மேல்நாட்டுப் பிரசித்தி பெற்ற சங்கீத வித்வான்)

ஆனல், நாம் என்ன நினைக்கிருேம்? நாம் சீர்திருத்தப் பட்டவர்கள்; நம்முடையதுதான் நாகரிகம் என்று நினைக்கிருேம். இராமபோயனுடைய அறிவைக் கண்டு இது மனிதனை மேலெழச் செய்யும் அறிவல்ல, இவனை நம்மைப் போலவே அறிவுள்ளவனகச் செய்யவேண்டும் என்று நினைப்போம். ஆந்தல் ஹென்றி துரையின் மனேபாவமும்

இவ்விதம்தான். இவர் இராமபோயனையும் அஞ்ஞானத்தி லிருந்து விடுத்து, மெஞ்ஞானத்தைப் போதிக்க வேண்டு மென்ற பரம கருணையோடு இங்கே வந்திருக்கிறார். கூடிய வரையில் நல்ல காரியங்களைத்தான் செய்தார். ஆனால், செய்ததில் சரியான மார்க்கத்தை விட்டதனாலோ, அல்லது சாது ஜனங்களுக்கு அவ்வப்பொழுது தொந்தரவு ஏற் பட்டதனால்தானோ என்னமோ, அவர் போதனைகளின் பலன் இப்படி விபரீதமாய் ஆகிவிட்டது என்று சொல்ல லாம்.

இராமபோயனும், திம்மபோயனும் இன்று என் எதிரில் குற்றவாளிகளாய் நிற்கிறார்கள். ஆந்தல் ஹென்றி நஷ்டப்பட்டுப் பிராது செய்து வாதியாய் நிற்கிறார்.

இராமதேவன் கோயிலைப் பற்றி நான் முன்னமே சொன்னேன் அல்லவா? நான் அக்கோயிலை அநேக முறை பார்த்திருக்கிறேன். இராமபுரம் மிகவும் சிறியதானாலும் அழகியது. குப்பிக்கு மூன்று மைல் தூரத்தில் ஈசானிய மூலையில் உள்ளது. குப்பியிலிருந்து அங்கே போக அழ கான பாதையுண்டு. நம் கமிஷனர்களின் பிரயத்தனத்தி னாலும், இந்நாட்டு மக்களின் தர்ம புத்தியினாலும் வளர்க் கப்பட்ட பெரிய மரங்கள் சாலையின் இருபுறமும் வானை யளாவி நின்று குளிர் நிழலைத் தரும். இராமபுரத்திற்குப் போகும் முதல் வழி ஏரியின் கரைமேல் செல்லுகிறது. ஏரிக்கு இராமபுரம் ஏரி என்று பெயர். ஊருக்குள் வந்து சேர்ந்ததும் பாதை எங்கேயோ மாயமாய் மறைந்து விடும். ஊருக்குள் நுழைந்ததும் ஆலமரம், நாவல், பூவரசு முதலியவைகள் ஊர்வாயிலில் கூட்டங் கூட்டமாய் நின் றிருக்கும் அழகைச் சொல்ல முடியாது. உதயகாலத்தின் இளஞ் சூரியன் அவைகளில் தன் பொன்னிறக் கதிர்களைப் பரப்பி எழும்பொழுது, இவை கம்பீரமாகவும் சாந்தமாக வும் நிற்கும். ஆனந்தக் காட்சி, கண்ணையும் கருத்தை

யும் ஒருங்கே கவரும். ஆலும் அரசும் ஒன்றுடன் ஒன்று மிருதுவான ஸ்வரத்தில் பேசுவதுபோல், தம் அழகிய இலைகளை மெல்ல மெல்ல வீசி, அந்தக் காலையில் மிருதுவானதும் இன்ப மயமானதுமான காற்றை வழங்கும். அந்த ஆனந்தத்திலே மெய்ம்மறந்து போவோம் நாம்.

ஊருக்குள் நுழைந்தால் வீடுகள் அங்கங்கே அழகாய்ப் பொட்டு வைத்தது போலிருக்கும். நம் ஊரில் இருப்பதுபோல் சந்து சந்தாகவும் அருவருக்கத் தக்கதுமான தெருக்கள் கிடையா. சுத்தமாய் மெழுகிப் பெருக்கி லட்சணமாய் வைத்திருக்கிறார்கள். அங்கங்கே கோலமிட்டுக்கொண் டிருக்கும் பெண்களும்—கைகளில் அரிவாள்களையும் மற்ற ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு கழனிக்குச் செல்லும் உழவர்களையும் காணலாம்.

* * *

இன்னும் சற்றுத் தூரத்தில் அழகிய பச்சைப் பசேலென்ற வயல்கள், தோட்டங்கள். ஓரிரண்டு பர்லாங் தூரத்தில் அழகாய் ஓடும் நதி தூரத்திலிருந்து சுற்றிச் சுற்றி வரும் காட்சி ஊரின் பின்புறத்திலிருந்தே தென்படும். ஊருக்கு அரைமைல் தூரத்தில் மேற்கிலிருந்து தெரியாமல் வழி தப்பி வந்து விட்டதோ என்று நினைக்கும்படி இருந்த ஒரு சிறு குன்றம். அதற்குத்தான் இராமதேவன் குன்றம் என்று பெயர். நதி மலையைச் சுற்றிக் கொண்டு செல்லுகிறது. ஊரிலிருந்து மலைக்குப் போக வேண்டுமானால் வயல்களில் வீழ்ந்து கிடக்கும் ஒரு பாறையின் சந்து வழியாகவேதான் போகவேண்டும். நான் பல தடவைகள் என் குதிரையின் மேலேறி, மலையின் சமீபம் சென்று, குதிரையை எங்கேயாவது கட்டிவிட்டு மணிக் கணக்காய்ப் பொழுதுபோவதே தெரியாமல் குன்றின்மேல் உட்கார்ந்திருப்பதுண்டு. சுற்றிலும் எங்கே பார்த்தாலும் தோப்புக்கள், ஒரு காலத்தில் உயர்ந்த

மண்டபமாய் இருந்தது. இப்பொழுது சிதிலமாயிருக்கும் கட்டடங்கள். இந்தப் பாழடைந்த மண்டபங்களின் மேலேறிச் சென்ருல் மண்டபத்தின் உச்சியை அடையலாம்.

பல தடவைகளில், 'இந்த ஹிந்துக்கள் மிகவும் புத்தி சாலிகள். மனிதனது நெஞ்சிலே முளைத்தெழுந்த எந்த ஆசையினுல் மதம் என்பதொன்று அவனுக்குத் தேவையாய் இருந்ததோ அந்த எண்ணங்களை அறிந்து, தெளிந்து அவனது பூர்ண திருப்திக்கு அவசியமான குணங்களுள்ள இடங்களைத் தேடி எடுத்துக் கடவுளுக்கு உறைவிடமாகக் கற்பித்துக் கோயில்களைக் கட்டி யிருக்கிருர்கள். இவர்களுடைய அழகு உணர்ச்சியும், கலை உணர்ச்சியும் எவ்வளவு பண்பட் டிருக்கிறது' என்று எனக்குள் நானே சிந்திப்பேன்; வியப்பேன்.

தேவ தேவனுடைய செளந்தர்யத்தைச் சுற்றிலும் கண்கொண்ட மட்டும் பார்த்துக் களிப்பதை விட்டு இங்கே ஒரு சிறு மண்டபத்தைக் கட்டி, அதற்குள் ஒரு விக்ரகத்தை வைத்து அதைப் பார்த்துப் பகவான் பகவான் என்கிருர்களே, இவர்களுக்கு இது ஒன்று மட்டும் தெரியவில்லை. பகவான் எங்கே இருக்கிருர்? அவரை எப்படிப் பார்ப்பது? என்று. இத்தகைய இயற்கையழகு விளங்கும் ஸ்தலங்களில் இவர்களுக்கு விக்ரகம் எதற்கு? இப்படிப் பலவிதமாய் எண்ணிக்கொண்டு அவ்விடத்தை விட்டு இறங்க மனமில்லாமல் இறங்கி வருவேன். வரும்பொழுது நதியைப் பார்த்தால்—அது மலையைச் சுற்றித் தழுவி வருவதைப் பார்த்தால் இந்த அழகிய மலையில் நானும் எப்படியாவது ஏறிப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுடன் எங்கேயாவது மார்க்கமிருக்கிறதா என்று தேடுவேன். பிறகு, மனம் சலித்து என்னுல் ஏறமுடியாது. தவிரவும், என் வாழ்க்கை லட்சி

யம் கடலை அடைய வேண்டியதல்லவா? என்று கடமையை நினைத்துக் கடலை நோக்கிச் செல்வது போல வும் தோன்றும் அந்த நதி.

இந்த மலைமேல் குடிகொண் டிருக்கும் இராமனைத் தான் முன் சொன்ன ஒட்டர்கள் பரம பக்தியுடனும் விசு வாசத்துடனும் நம்பி வழிபட்டு வந்தார்கள். அவர்கள் இந்தத் தெய்வத்தின் அபார சாமர்த்தியத்தினிடம் வைத் திருந்த உறுதியான நம்பிக்கை நமக்கு எந்தத் தெய்வத்தி னிடமும் இராது!

இந்த இராமன் பொதுவாய் நல்லவன்தானும்! ஆனால், கெடுதல் செய்தால் உதவி செய்யமாட்டானும்! நியாய வழியில் செல்பவர்களுக்கு மட்டுமேதான் உதவி செய்வா னும். தப்புச் செய்தவர்கள் அபராத காணிக்கை செலுத்தி னல் மன்னிப்பும் உண்டு. தலைவலி, முதுகு வலி முதலிய வியாதிகள் எது வந்தாலும் பிரார்த்தித்துக் காணிக்கை செலுத்தினல் தீரும். யாராவது ஒட்டருக்கு விரோதமாய் வியாஜ்ய விவகாரங்கள் எவ்வளவு இரகசியமாய்ச் செய்த போதிலும் அத் தெய்வத்தின் எதிரில் நின்ருல் அவனை நிஜத்தைச் சொல்லும்படியாகச் செய்யுமாம்! இப்படி அந்த இராமதேவன் ஒரு பிரசித்தி பெற்ற ஒட்டர் தலைவ னக இருந்தால் எப்படி இருப்பானே அப்படியே ஒரு தெய்வமாகவும் இருந்தான்.

ஆனல், இதில் ஒரு சௌகரியமும் அதிகம். மக்களின் தலைவனய் இருந்தால் சமயம் வரும்பொழுது குணங்களி லும் அபிப்பிராயங்களிலும் பேதம் ஏற்படக் கூடும். இந்தத் தலைவனே என்றைக்கும் ஒரே சீராய் இருந்தான்.

இந்தத் தெய்வத்துக்கு அஞ்சி வாழ்ந்த அந்த ஒட்டர் கள் அநேகமாய்க் கோர்ட்டு, கச்சேரி என்று சென்ற வர்களல்ல. அதிலும் குற்றவாளிகளாய்க் கோர்ட்டுக்கு வந்ததே இல்லை. இன்றுதான் என்முன் நிற்கிருர்கள்!

பிராது கொடுத்திருப்பதோ இவர்களுக்கு ஞானோப தேசம் செய்யும்பொருட்டுக் கடல் கடந்து வந்திருக்கும் ஆந்தல் ஹென்றி துரை!

பிராது விஷயத்தை அவர் சொன்னபடி இங்கே எழுதுகிறேன்.

ஆந்தல் ஹென்றிக்கு இந்த இரண்டு பேர்களையும் நெடு நாளாய்த் தெரியும். அவர் இராமபுரத்தில் அடிக்கடி பிரசங்கம் செய்வது மட்டுமல்லாமல் தனி மனிதர்களையும் கூட்டி வைத்து உபதேசம் செய்து வந்தார். முதலில் இரண்டு பேயிகளும் இவரை எதிர்த்து வாதாடி இராமனே நிஜ தெய்வம் என்று சண்டையிட்டதும் உண்டு. ஆனால், வயசு முதிர்ந்த சில ஒட்டர்கள், "அவர் சொல்வதைச் சொல்லுகிறார். உங்களுக்கு இஷ்டமிருந் தால் கேளுங்கள். இல்லாவிட்டால் விட்டு விடுங்கள்" என்று சொன்னதின் பேரில் சும்மா இருந்தார்கள். பிறகு, படிப்படியாய் இராமனிடம் நம்பிக்கை குறைய ஆரம் பித்தது. கோயிலுக்குப் போவதை நிறுத்திவிட்டார்கள்.

ஹென்றி ஆனந்தக் கடலுள் மூழ்கினார். ஆனால், அதற்குள் விஷயம் வேறாகிவிட்டது. ஒரு நாள் இருவரும் குப்பியிலிருக்கும் ஹென்றி துரையின் வீட்டிற்கு வந் திருந்தார்கள். சாயந்திரமே ஊருக்குத் திரும்புவதாய்ச் சொல்லிவிட்டு ஊருக்குப் போகவில்லை. துரையின் வீட்டை அடுத்து மாதா கோயில். இரவில் மாதா கோயி லுக்குள் புகுந்து அங்கிருந்த கோயிலுக்குச் சொந்தமான வெள்ளிச் சாமான்களையும், ஹென்றிக்குச் சொந்தமான வெள்ளிச் சாமான்கள் சிலவற்றையும் திருடிக்கொண்டு வந்துவிட்டார்கள்!

காலையில் எழுந்ததும் துரை போலிஸுக்கு ரிபோர்ட் செய்தார். சாமான்கள் போயர்கள் வீட்டில் கிடைத்தன. அவர்களைப் பிடித்து விசாரித்துக் கோர்ட்

டுக்கு அழைத்து வந்திருந்தார். அவருக்கு இவர்கள் மேல் பிராது கொடுத்து ரூபிக்க வேண்டுமென்று விருப்பமில்லை. போலிஸில் தெரிவித்தான பிறகு அவர்கள் இஷ்டமே தவிர, பிடிப்பதற்கோ, விடுவதற்கோ இவருக்கு அதிகாரமில்லை.

மேலும், போயிகளும் தாங்கள் செய்த குற்றத்திற்காகப் பச்சாத்தாபப்படவில்லை. அசல் துஷ்டர்களைப் போலவேதான் முறைத்தார்கள். ஹென்றியும் தான் எதிர்பார்த்தபடி அவர்கள் புத்தி இன்னும் பக்குவப்படவில்லை; ஏதோ சொற்பமாய்த் தண்டித்தால் புத்தி வரும் என்று எண்ணினர். ஆகவே, கோர்ட்டிற்கு வந்து சாட்சி சொல்ல ஒப்பினர்.

ஹென்றி, தன் சாட்சியத்தைச் சொல்லும்பொழுது நான் அவ்விருவரையுமே பார்த்துக்கொண்டிருந்தேன். இருவரும், முகத்தில் ஒரு விதமான மாறுதலுமின்றிக் கற்சிலைபோல் நின்றிருந்தார்கள். இந்தக் கீழ் நாட்டு ஜனங்கள் எல்லோருமே இப்படித்தான். இது மூடத்தனமா? அல்லது தைர்யமா? என்று என்னல் நிர்ணயிக்க முடியவில்லை. அது தைர்யமானலும் எதுவாயிருந்தாலும், ஆபத்துச் சமயத்தில் ஒரே விதமாகவே நடந்துகொள்ளும் இவர்களைப் பார்த்தால், முன் ஒருநாள் ஏதன்ஸ் நகரத்தில் மரணம் சமீபத்தில் இருக்கிறது என்று தெரிந்தும் தைர்யமாய் நின்றிருந்த சாக்ரடீஸின் நினைவு வந்தது. பைலேடன் முன் தண்டனையை எதிர்பார்த்துச் சாந்தமாய் நின்றிருந்த எங்கள் தேவனின் ஞாபகம் வந்தது. இருவரும் வாயே திறக்கவில்லை. எனக்குக் கொஞ்சம் திக்திக்கென்றது. பிறகு, தங்கள் மதத்தை விட்டுக் கிறிஸ்துவ மதத்திற்கு வரவேண்டும் என்னும் விருப்பம் இருந்திருந்தால் இருவரும் திருடுவார்களா? என்று யோசித்தவனாய்—ஹென்றி, தன் பேச்சை நிறுத்தியதும்,

"இவர்கள் கிறிஸ்துவ மதத்தில் சேருகிறேன் என்று சொல்லிக்கொண் டிருந்தார்களா என்ன?" என்றேன்.

"இல்லை"

"சேருவார்களென்று எப்படித் தெரிந்து கொண்டீர்?"

"தெய்வத்தினிடம் நம்பிக்கை குறைந்ததில் இவர்கள் தாம் முதன்மையாய் இருந்தனர். அது இவர்கள் பேச்சிலிருந்தே தெரியவந்தது. மற்றவர்கள் ஏதோ ஒப்புக்காக வாவது கோயிலுக்குப் போவார்கள். இவர்களோ போகவேயில்லை. ஒரே பிடிவாதமாய் இருந்தார்கள்."

"சரி" என்று சொல்லிவிட்டுப் போயிகளைப் பார்த்து "உங்கள் பக்கத்திற்கு யாரையாவது வக்கீல்களை அழைத்து வந்தீர்களா?" என்றேன்.

"குற்றம் செய்தது செய்துவிட்டோம். வக்கீல் வேறு எதற்கு?" என்றான் இராம போயன்.

"நீ எதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் சொல்வது சரியல்ல என்று சாட்சிகள் மூலம் ருசுப்படுத்தலாம்."

"சுவாமி! அவர், ஹென்றி துரை தப்பாய்ச் சொல்லக் கூடியவரல்ல, நாங்களும் பொய் சொல்லித் தப்பித்துக் கொள்ளக் கூடியவர்களல்ல."

நான் திரும்பப் போயியை ஏறிட்டுப் பார்த்தேன்.

"துரையே! அவன் சொல்வதையேதான் நானும் சொல்லுகிறேன். வேறொன்றுமில்லை" என்றான்.

"அப்படியானால் பொறுங்கள். இங்கே எழுதிக் கொள்கிறேன். பிறகு நீங்கள் சொல்ல விரும்பும் வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ளலாம்" என்று குற்றப் பத்திரிகை எழுதினேன். அதை வாசித்தும் காண்பித்தேன். கடைசியில், "நீங்கள் இதை ஒப்புக்கொள்கிறீர்களா?" என்றேன்.

இருவரும் மிக அமைதியாக, "குற்றம் எங்களுடையதுதான்" என்றார்கள். அதையும் எழுதிக்கொண்டேன். பிறகு, "நீங்கள் கிறிஸ்துவ மதத்தில் சேர இருந்தவர்கள், ஏன் திருடினீர்கள்?" என்றேன்.

"நாங்கள் ஜாதியைக் கெடுத்துக்கொண்டு மதம் மாறுவதாகச் சொல்லவில்லையே?"

"பின் உங்கள் தெய்வத்தை விட்டுவிட்டீர்களாமே?"

"அது ஏனோ விட்டோம், இந்தத் துரை சொன்னார்: உங்கள் தெய்வத்துக்கு விளக்கு வைக்காவிட்டால் இருட்டில் இருக்கிறது. கோயிலில் குப்பையைப் பெருக்காவிடில், தானே பெருக்கிக் கொள்ளத் திறமையற்றது என்று. எங்கள் பெரியோர்கள் இப்படியெல்லாம் தெய்வ நிந்தனை செய்யக் கூடாது என்றார்கள். நாங்கள் பலவந்தமாய்க் கோயிலைச் சாத்திப் பூட்டிவிட்டோம். பத்து நாட்கள் வரை ஒன்றுமே கிடையாது. திறந்து பார்த்தபொழுது துரை சொன்னபடியேதான் நடந்திருந்தது. பகவான் மேல் மண்ணுங்கட்டிகள் இடிந்து விழுந்திருந்தன. அந்த பகவான் அதை உதறிக்கூடத் தள்ளவில்லை! கோயிலிலிருந்து ஒரு பாத்திரத்தைத் திருடினோம். அப்பொழுதும் அந்தப் பகவான் ஏனென்று கேட்கவில்லை. அதன் பிறகு இந்தத் தெய்வத்துக்குச் சக்தி போதாது என்று நினைத்தோம்."

"சரி, உங்கள் கோயில் தெய்வத்தின் சங்கதி அப்படி. இந்தக் கோயிலில் ஏன் நுழைந்தீர்கள்?"

"சுவாமி! இவர்கள் மாதா கோயிலில் பகவானே இல்லை. பகவான் இருந்த அவ்விடமே ஏனென்று கேட்காதபொழுது கடவுளே இல்லாத இடத்தில் பயமென்ன? என்று நானும் இவனும் அந்த ஞாயிற்றுகிழமையே அங்கே புகுந்தோம்."

"கடவுள் இப்பொழுது இக்கட்டில் சிக்கவைத்து விட்டாரல்லவா?"

"கடவுள் ஒன்றுமே செய்யவில்லை. துரைதான் பிடித்துக் கொண்டார். தெய்வம் என்ன செய்யும்? இந்தத் தெய்வமும் சத்தியமல்ல. உங்கள் தெய்வமும் சத்தியமல்ல. தெய்வத்துக்கும் தன்னைக் காப்பாற்ற உதவி வேண்டியிருக்கிறது! உங்கள் தெய்வத்தின் சாமானை துரை பார்த்துக் கொள்கிறார். எங்கள் கோயிலில் தலைவன் பார்த்துக் கொள்ளுகிறான். நாங்கள் இப்பொழுது இங்கே விதிக்கும் தண்டனையை அநுபவித்து விட்டுப் பிறகு, எங்கள் தெய்வத்திற்கு அபராத காணிக்கை செலுத்த வேண்டுமென்பது எங்கள் தலைவன் கட்டளை".

நான் ஹென்றியைப் பார்த்து, "இவர்களுக்கு இராமனிடமுள்ள நம்பிக்கையைக் குறைக்க இவ்வாறு செய்தீர்களா?" என்றேன்.

"ஆம்! விக்ரகத்தில் ஒன்றுமில்லை என்பதைக் கற்பிப்பதன் பொருட்டு நான் இவ்விதம் செய்தேன். இவர்கள் சிறுவர்கள். நான் சொன்னவற்றில் சிலவற்றைச் செய்து பார்த்தார்கள். சொன்னது பலித்தது. பிறகு, பாத்திரத்தைத் திருடியது எனக்குத் தெரியாது. மேலும் இவ்வளவுதூரம் யோசிப்பார்களென்றும் எனக்குத் தோன்றவில்லை."

பிறகு அவர்களைப் பார்த்து, "அபராதம் விதித்தால் கொடுக்கமுடியுமா?" என்றேன்.

"எப்படி முடியும் சுவாமி! நாங்களோ பரம ஏழைகள். எங்கள் தெய்வத்திற்குக் காணிக்கை செலுத்தவே போதும் போதும் என்றாய்விடும். இன்னும் இது வேறு என்றால் எப்படிக் கொடுப்போம்?"

"அப்படியானால் சிக்ஷையே விதிக்கிறேன்"

"சுவாமி நாங்கள் ஓரிடத்திலும் வேலையில்லாமல் சோம்பித் திரியும் ஜாதியல்ல. ஆகையால், வேலை செய்யும் சிக்ஷை விதியுங்கள்.

நான் மிகுந்த யோசனை செய்து வெகு வருத்தத்துடன் பதினைந்து நாள் கடுங்காவல் விதித்தேன். பிறகு, ஹென்றியைப் பார்த்து, "நீங்கள் என் வெள்ளிச் சாமான் இருக்குமிடத்தைக் காண்பித்தீர்கள்?" என்றேன்.

"முதலில் இவர்கள் ஆசைப்பட்டுப் பார்க்க வர வேண்டுமென்று நகாசு வேலை செய்த சாமான்களைக் காண்பித்தேன். பிறகு, அவர்கள் மற்றச் சாமான்களையும் பார்க்க ஆவலுள்ளவர்களாய்த் தோன்றவே, அதையும் காண்பித்தேன். எந்தக் காரணத்தைக் கொண்டாகிலும் அவர்கள் சர்ச்சுக்கு வந்து, தேவனுடைய நல் வார்த்தைகளைக் கேட்கட்டுமே என்று இவ்விதம் செய்தேன். முடிவு இப்படி ஆயிற்று!"

நான் போயிகளுக்குத் தண்டனை விதித்தாயிற்று. ஆனால், இந்தத் திருட்டின் குற்றம் பாதியாகிலும் ஹென்றியைத்தான் சேரும் என்றேதான் இப்பொழுதும் தோன்றுகிறது. அதைத் தேவனேதான் விசாரித்துக் கொள்ள வேண்டும்! இன்று முழுவதும் என் மனம் ஒரே குழப்பமாயிருக்கிறது. ஒருவன் அஞ்ஞானத்தால் அலைகிறான். மற்றவன் வழிகாட்டுவதாய் எண்ணிப் பள்ளத்தில் தள்ளுகிறான். இன்னொருவன் பள்ளத்தில் ஏன் விழுந்தாய் என்று தடி கொண்டடிக்கிறான். இது என்ன? அவிவேகந்தான்! சந்தேக மென்ன? ஆனால், இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு சர்வேசுவரன் ஒருவனிருக்கிறான்! இந்தத் தீர்ப்புச் சரியல்ல என்று எனக்குத் தெரியும். ஆனால், என்ன செய்வது? இதுதான் இவ்வுலகத் தீர்ப்பு.

*



"தீபிகா"

நமக்கு அகப்படும் சாமான்கள் கோதுமையும் சோளமும் மைதா மாவும்தான். இதில் செய்த பலகாரத்தையே திரும்பத் திரும்பச் செய்தால், குழந்தைகளுக்கு அலுத்து விடுகிறது. அடிப்படையான சாமான்கள் இவைகளாக இருந்தாலும் நாம் செய்யும் மாதிரியாவது கொஞ்சம் மாற்றிச் செய்யலாம் அல்லவா?

கொப்பரைப் போளி

இதைச் செய்ய ஒரு கொப்பரை, முக்கால் ஆழாக்குப் பூரா சர்க்கரை, இரண்டு ஆழாக்கு மைதா மாவு, இரண்டு மேஜைக் கரண்டி நெய், ஏலப் பொடி, கொஞ்சம் கேசரிப் பௌடர் ஆகிய இவைகள் வேண்டும். கொப்பரையை ஈரத் துணியில் பத்து நிமிஷம் சுற்றி வைத்தால், மேல்தோல் நன்ருக ஊறி இருக்கும். பிறகு, கத்தியினல் மெதுவாகச் சீவினல் தோல் நீங்கிவிடும். கொப்பரைத் துருவல் வெளுப்பாக நன்ருக இருக்கும். துருவலோடு சர்க்கரையையும், ஏலப் பொடியையும் கலந்துவிட வேண்டும். மைதா மாவில் நெய்யையும், கேசரிப் பௌடரையும் போட்டு அப்பளமாவு மாதிரிக் கொஞ்சம் கெட்டியாகவே கலக்க வேண்டும். அரைமணி நேரம் மாவு ஊறினதும், நன்ருகப் பிசைந்து உருண்டைகளாக்கி வைத்துக்கொண்டு, அப்பளம் இடுவதுபோல் இடவேண்டும். அப்பளப்

பில்லைகள் உள்ளங் கை அகலத்திற்கு வந்தவுடன் கொப்பரைப் பூரணத்தில் கொஞ்சம் எடுத்து, அதில் வைத்து (சுமார் ஒரு மேஜைக் கரண்டி அளவு) அப்பளத்தை நன்ருக மூடி மறுபடியும் இடவேண்டும்.

உள்ளே இருக்கும் பூரணம் வெளியில் வராமல் இருக்கும்படி மெதுவாக இடவேண்டும். அப்பளம் ஒட்டாமல் இருக்க, ஒற்றிக்கொள்ளும் மாவும் மைதா மாவாகவே இருக்கவேண்டும். பிறகு, தோசைக் கல்லில் போட்டுக் கொஞ்சம் நெய் விட்டு, நன்ருகச் சிவந்ததும் திருப்பிப் போட்டு, மறு பக்கத்திற்கும் கொஞ்சம் நெய் விட்டு முறுமுறு என்று எடுக்கலாம். அடுப்பை நிழல் போல் எரியவிட்டுக் கூடியவரையில் கொஞ்சமாகவே நெய்விட்டு எடுத்தால் போளி நன்ருக இருக்கும்.

நைஸ் பிஸ்கோத்து

இது செய்வதற்குக் கால்படி மைதா மாவு, ஒரு கொப்பரை, ஆழாக்குச் சர்க்கரை, ஐந்து பலம் நெய், கொஞ்சம் ஏலப் பொடி, கொஞ்சம் சோடாமாவு ஆகியவைகள் வேண்டும். மாவு தினுசுகளையும் சர்க்கரையையும் ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொப்பரையையும் துருவி, அதில் சேர்த்து நெய், ஏலப் பொடி, சோடா இவைகளையும் போட்டு நன்ருகக் கலக்கவேண்டும். மாவு மொத்தையாக வராவிட்டால் கொஞ்சம் பாலைத் தெளித்துப் பிசைய வேண்டும். சப்பாத்தி மாவு மாதிரி, நன்ருகத் தேய்த்துப் பிசைந்த மாவைக் கொஞ்சம் எடுத்துப் பெரிய அப்பளமாக அரை அங்குல கனத்திற்குச் சமமாகப் பலகையில் இடவேண்டும்.

நமக்கு எந்த அளவில் வேண்டுமோ, அந்த மாதிரி ஹார்லிக்ஸ் மூடியினுலோ, அல்லது சற்றுப் பெரிய மூடியினுலோ நறுக்கி, அப்பளத்தை எடுத்து வைத்துக்

கொள்ளவும். தோசைக் கல்லை அடுப்பின்மேல் போட்டு அடுப்பை நிழல் போல் எரியவிட்டு, நறுக்கி வைத்து இருக்கும் பிஸ்கோத்துகளை இரண்டு மூன்றுகளாகக் கல்லில் போட்டு இரண்டு பக்கமும் பொன் நிறமாக வேக வைத்து எடுக்கவேண்டும். இந்தப் பிஸ்கோத்து அதிகத் தித்திப்பு இல்லாததினால், தெவிட்டாமல் சாப்பிடுவதற்கு நன்ருக இருக்கும். குழந்தைகளுக்கு இந்தப் பிஸ்கோத்தைக் கொடுத்தால் அஜீரணத்தை உண்டாக்காது.

கோள் வடை

இந்தப் பட்சணம் செய்வதில் மைசூர்க்காரர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். செய்வதும் சுலபம், சாமானும் சாதாரண அரிசி மாவுதான். ஆனல், சாப்பிட வெகு ருசியாக இருக்கும். இதைச் செய்யக் கால்படி அரிசி மாவுக்கு ஒரு மூடித் தேங்காய்த் துருவல், மூன்று மேஜைக் கரண்டி அளவு நெய், பச்சைக் கொத்தமல்லி, பச்சை மிளகாய், கொஞ்சம் பெருங்காயம், திட்டமான உப்பு ஆகியவைகள் வேண்டும். மாவில் தேங்காய்த் துருவலைப் போட்டு நெய்யையும் சேர்த்து, மிளகாய் முதலியவற்றை நன்ருக அரைத்து, இதில் கலந்து, கொஞ்சம் தண்ணீரும் விட்டு, மொத்தையாகப் பிசைய வேண்டும். அரிசி மாவு கரகரவென்று இல்லாமல் மிகவும் நைசாக இருக்க வேண்டும். பிறகு, சிறு எலுமிச்சம்பழ அளவு மாவை எடுத்து, ஒரு மணையில் வைத்துக் கையினல் விரல் பருமனுக்கு வரும்படி நீளமாக உருட்ட வேண்டும். மாவு சுமார் மூன்று அங்குல நீளம் வந்தவுடன், இரண்டு நுனியையும் ஒன்றன்மேல் ஒன்ருகச் சேர்த்து வளையம் செய்ய வேண்டும். அரிசி மாவில் பசையில்லாவிட்டால் பென்சில் போல் உருட்ட வராது. அதனல், மாவை நன்ருகத் தேய்த்துப் பிசைந்து கொள்ளவும். இப்பொழுது நன்ருக உருட்ட வரும்.

பிறகு, வாணலியில் டால்டாவையாவது, தேங்காய் எண்ணெய்யையாவது திட்டமாக வைத்து இந்த வளையங்களைப் போட்டுக் கரகரவென்று வேகவைத்து எடுக்க வேண்டும்.

பக்கவடா

சோளமாவில் பக்கவடா செய்துபார். மிகவும் நன்றாக இருக்கிறது. ஆழாக்குச் சோள மாவு, அரை ஆழாக்கு அரிசி மாவு, இரண்டரைப் பலம் முந்திரிப் பருப்பு, பச்சை மிளகாய், மூன்று பலம் நெய், கொஞ்சம் சோடா மாவு, கொஞ்சம் கருவேப்பிலை, திட்டமான உப்பு ஆகியவைகள் வேண்டும் இதைச் செய்ய. மாவில் முந்திரிப் பருப்பைச் சிறிதாகச் செய்துபோட்டுப் பச்சை மிளகாயைப் பொடிப் பொடியாக நறுக்கி, அதையும், உப்பு, சோடா மாவு, கருவேப்பிலை ஆகியவைகளையும் மாவில் சேர்க்க வேண்டும். பிறகு, நெய்யை நன்றாகக் காய்ச்சி மாவின்மேல் விட வேண்டும். மாவு மிகவும் மொத்தையாகத் தளர்ந்து போகக்கூடாது. பிடித்தால் பிடிபட வேண்டும். உதிர்த்தால் உதிர வேண்டும். அதற்கு நெய் சரியான அளவு இல்லாமல் இருந்தால் இன்னும் கொஞ்சம் சேர்த்துப் பிசைந்து கொள்ளலாம். பிறகு, வாணலியில் எண்ணெய்யை வைத்து நன்றாகக் காய்ந்தவுடன் தண்ணீர்க் கையினால் இந்த மாவைச் சிறிசு சிறிசாக உருட்டி எண்ணெய்யில் போடவும். உருட்டுவது என்றால் சீடைமாதிரியாக இல்லை. மாவைக் கிள்ளிக் கிள்ளிப் போட வேண்டும். கோணலும் மாணலுமாக இருந்தால்தான் உட்புறம் நன்றாக வெந்து பக்கவடா கரகரவென்று இருக்கும். இதைச் சூடாகச் சாப்பிட்டால் நன்றாக இருக்கும்.


*

பிருந்தையின் அருள்

சரோஜா ராமமூர்த்தி

அன்று தை வெள்ளிக்கிழமை. மஞ்சள் குங்குமத்துக்காகக் கமலத்தின் வீட்டிற்குப் போயிருந்தேன். கமலம் என் கணவருக்கு ஒன்றுவிட்ட அம்மங்காள் ஆக வேண்டும். ஒரு சமயத்துக்கு முன்புதான் வடக்கேயிருந்து அவள் கணவர் நாங்கள் இருக்கும் ஊருக்கு மாற்றலாகி வந்திருந்தார். அதற்குமுன் எனக்கும், அவளுக்கும் நெருங்கிய பழக்கம் கிடையாது. என் கல்யாணத்தின் போது வந்திருந்தாள். கலகல என்ற சிரிப்பும், வெகுளித்தனமான பேச்சும் அவள் சுவபாவத்தை அறிவித்தன. வேறொன்றும் அவளைப்பற்றி எனக்குத் தெரியவேண்டிய அவசியம் அப்போது ஏற்படவில்லை. என் கணவரும் ஏறக்குறைய இதே அளவுதான் அவளுடன் பழகி இருந்தார். கமலத்தை ஆறு வயசுப் பெண்ணாக இருந்தபோது பார்த்தவர் தம்முடைய கல்யாணத்தின் போதுதான் மறுபடியும் பார்த்தாராம்! அடிக்கடி என்னிடம் மட்டும் கூறுவார், 'உன்னை முதலில் பாராமல் கமலத்தைப் பார்த்திருந்தால் அவளையே கல்யாணம் பண்ணிக்கொண்டிருப்பேன்' என்று. 'அப்படி அவள் என்ன ஒசத்தி?' என்றுகூட அவரிடம் சண்டைபோட்டிருக்கிறேன். 'அவள் ஒசத்தி என்று சொல்லவில்லை. உன்னைப் போல் கபடமாக இல்லாமல், கலகலவென்று பேசுகிறாள்' என்பார். இந்த மாதிரிக் கமலத்தினிடம் எங்கள் இருவருக்கும் ஒருவித அன்பு ஏற்பட்டிருந்தது.

அன்று காலை கமலத்தின் பெண் ஓடி வந்து, "அம்மா உங்களை மஞ்சள் குங்குமத்துக்கு வரச் சொன்னாள்" என்று அழைத்ததும், ஆவலுடன் போவதற்குத் தயாராகக் கிளம்பி விட்டேன். கமலத்தின் வீட்டை அடைந்ததும் கூடத்தில் அம்பாள் படம் வைத்து ரோஜா மலர்களால் பூஜை செய்திருந்தாள். பக்கத்தில் எரிந்துகொண் டிருந்த வெள்ளிக் குத்துவிளக்குப் பளபள வென்று பிரகாசித்தது. தசாங்கத்தின் சுகந் தமும் கற்பூரமணமும் சேர்ந்து அந்த இடத்தில் ஒருவிதத் தெய்விகத்தை உண்டாக்கின.



எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்த கூந்தலைத் தொளதொள வென்று பின்னித் தொங்கவிட்டு அதன் மேல் இரண்டு பெரிய ரோஜா மலர்களைச் செருகி யிருந்தாள் கமலம். என்னைக் கண்டதும் வழக்கமான புன்னகையுடன் என் பக்கம் திரும்பி, "வா, வா, வருவாயோ மாட்டாயோ என்று நினைத்துக்கொண் டிருந்தேன். உட்கார்." என்று உபசரித்தாள். இந்த விதமான இனிமையான சுவபாவத்துக்குத்தான் நாங்கள் இருவரும் அடிமையாகி இருந்தோம்.

சுடர்விட்டு எரியும் குத்துவிளக்கின் ஒளியில் கமலம் அம்பிகையைப் போலவே தோற்றமளித்தாள் எனக்கு. தெய்விகம் நிரம்பிய அந்த இடத்தில் ஒருவிதக் குறை இருந்ததாகத் தோன்றியது. சிறிது நேரம் அது எதனால் என்பதை என்னால் அறிய முடியவில்லை. தற்செயலாகக் கூடத்துக்கு அடுத்து இருந்த முற்றத்தின்மேல் என் பார்வை திரும்பியது. அங்கே வெறிச்சென்று துளசி இல்லாத பாழ் மடம் ஒன்று இருந்தது!

"இது என்ன கமலம், இவ்வளவு செய்கிறவளுக்கு ஒரு துளசிச் செடிதானா கிடைக்கவில்லை? பாழடைந்த மடத்தைச் சுமங்கலிகள் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார்களே" என்றேன்.

"ஆமாம், ரங்கனிடம் நாலு நாளாய்ச் சொல்லுகிறேன். அவனுக்கும் ஒழியவில்லை. வாஸ்தவம்தான் நீ சொல்லுகிறதும்" என்றாள் கமலம்.

"சின்னஞ் சிறுசாய் அழகாக இருக்கிறது. எங்கே வாங்கினாய் இதை?" என்று கேட்டேன்.

"இதையா?" என்று கேட்டு விட்டுக் கமலம் லேசாகச் சிரித்தாள். உன் கணவருக்கு இந்த விருத்தாந்தம் எல்லாம் தெரியுமே. ஒரு காலத்தில் துளசி மடத்தடியிலேயே பழியாய்க் கிடந்திருக்கிறேன் நான். பன்னிரண்டு வயசில் சின்னஞ்சிறு கிராமாந்திர வீட்டின் கொல்லையில், கிணற்றங்கரைக்குப் பக்கத்தில், பசுந் துளசிக்குக் களிமண்ணால் நாலு பக்கமும் சுவர் எழுப்பி, கோலமிட்டு, விளக்கேற்றி வந்தேன். எங்கள் குடும்பம் வறுமையில் உழன்று வந்தது. நான் ஐந்தாவது பெண். என்னைத் தவிர இன்னும் கல்யாணத்துக்கு மூன்று தங்கைகளும் படிக்க இரண்டு தம்பிகளும் இருந்தனர். அப்பாவுக்கு மணியம் வேலை. வரும்படி குறைவு. ஒருதினம் கிணற்றிலிருந்து ஜலம் கொண்டு வரும்போது தற்செயலாகத் துளசிச் செடி கண்ணில் பட்டது. கொத்தி, களைபிடுங்கி ஜலம் விட்டேன். இரண்டு நாளில் பசுமையாகத் தழைத்து வளர ஆரம்பித்தது. அம்மாவும் அதற்கேற்றாற்போல் சொல்லி வைத்தாள். "கொல்லையில் துளசிச் செடி வைத்தால் சரியாகவே வருவதில்லை. உன் கைராசிக்கு வந்திருக்கிறது. தினம் பூஜை பண்ணேன். நல்ல ஆத்துக்காரர் கிடைப்பார்" என்று.

"அதனாலே அம்மாவுக்கு, அப்பா நல்ல ஆத்துக்கார

ராகக் கிடைச்சுட்டார். அப்பா என்ன பயம் பயப்படறார்!" என்றுள் இதுவரையில் கதையைக் கேட்டு வந்த கமலத்தின் பெண்.

"பேசாமல் இருடி. பெரியவா பேசும்போது குறுக்கேபேசாதே" என்று கடிந்துகொண்டே கதையை மீண்டும் ஆரம்பித்தாள்.

"அம்மா சொன்ன தினத்திலிருந்து எனக்கு ஒரே உற்சாகம். நல்ல ஆத்துக்காரர் கிடைப்பார் என்றல்ல. விளையாடும் பருவம். கவலையற்ற வயசு. எதையும் செய்து தீரவேண்டும் என்று உற்சாகமூட்டும் காலம். இவை யெல்லாம் சேர்ந்து எனக்கு உற்சாக மூட்டின. களி மண்ணைப் பிசைந்து நாலு பக்கமும் சுவர் மாதிரி ஒரு சாண் உயரத்துக்கு எழுப்பினேன். முத்து முத்தாகக் கோலமிட்டுச் செம்மண் பூசி, என் சிநேகிதிகளை அழைத்து வந்து காட்டுவேன். இதனிடையில் யாரோ சொன்னார்கள்: "லட்சுமி துளசியோடு கிருஷ்ண துளசியையும் சேர்த்து வைத்துப் பூஜை பண்ணேன்" என்று. எங்கள் ஊரில் கோயில் நந்தவனம் ஒன்று உண்டு. பண்டாரத்தைக் கேட்டுக் கருந் துளசிச் செடி ஒன்று வாங்கி வைத்தேன். இப்படியே மாசக் கணக்கில் என் பூஜை நடந்து கொண்டிருந்தது. அம்மாவின் வேலை மட்டும் ஓயவில்லை. "பேசாமல் இருக்கிறீர்களே. பதிமூன்று வயசாகி விட்டதே கவலையே இல்லையா உங்களுக்கு?" என்று அம்மா, அப்பாவிடம் சண்டைக்கு ஆரம்பிப்பாள். 'ஆமாம், ஆயிரம் ஆயிரமாய்க் கொட்டிக் கிடக்கிறதோ இல்லையோ, வரன் தேட வேண்டியதுதான். முப்பது ரூபாய் சம்பாதிக்க வழியில்லாதவன் மூவாயிரத்தைக் கொண்டா என்கிறன்' என்பார் அப்பா.

'அப்போ கன்யாமடம் கட்டி வைக்கப் போகிறீர் களா?' என்று உரத்த குரலில் கேட்பாள் அம்மா.

'ஆமாம், போயேன்' என்று அப்பா சலிப்போடு முகத்தைத் திருப்பிக் கொள்வார்.

இம்மாதிரி வாக்கு வாதங்களைக் கேட்டு என் மனம் சலிப்படைய ஆரம்பித்தது. கல்யாணம் வாழ்க்கையில் முக்கியமான பிரச்னை என்று எனக்குத் தோன்ற ஆரம்பித்ததே இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுத்தான். குதூகலத்தோடு பிருந்தையின் பூஜையைச் செய்து வந்த மனம் உற்சாகம் இழந்து அவள் அருளை நாடி நின்றது.

'அம்மா, தாயே! இந்த மாதிரிக் கவலையை எழுப்பும் மகத்தான காரியத்தை நீதான் முடித்து வைக்க வேண்டும்' என்று என் மனம் அவளிடம் பக்தி கொண்டு உருகி வேண்ட ஆரம்பித்தது.

"பிருந்தை என் மேல் கருணை கூர்ந்து அருள் செய்தாள்! பக்கத்துக் கிராமத்தில் தாரமிழந்த நாற்பது வயசுக்காரர் என்னை மணக்க ஒப்புக்கொண்டாராம்! சகலவிதமான செலவுகளையும் தானே செய்து என்னை மணக்கவும் ஒத்துக்கொண்டாராம்!"

"பிள்ளைக்கு என்ன வயசாம்?" என்று அம்மா ஈனஸ்வரத்தில் நூறுவது தடவையாகக் கேட்டாள், அப்பாவிடம்.

"உனக்கு ஆயிரம் தரம் சொல்ல வேண்டும். நாற்பது என்று சொல்கிறார்கள். மேலேயே இருக்கும்" என்று இரைந்து கத்தினர் அப்பா. "என் சத்தம் போடுகிறீர்கள்? குழந்தை காதில் விழப்போகிறது" என்ருள் அம்மா. "விழாவிட்டால் நாளைக்குக் கல்யாணத்தின்போது குழந்தைக்குக் கண் அவிந்தா போகப்போகிறது" என்று கேட்டார் அப்பா.

"ஆமாம், அவர்கள் எல்லாவற்றையும் செய்து கொண்டாலும், மாப்பிள்ளைக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டாமா?" என்று கேட்டாள் அம்மா.

"செய்யத்தான் வேண்டும். ஊரில் இனிமேல் கடன் வாங்க நிலம் நீச்சுக் கிடையாது. அக்காவுக்கு வேண்டு மானல் எழுதிப் பார்க்கிறேன். பிள்ளைகள் எல்லோரும் சம்பாதிக்கிருர்களே'' என்ருர் அப்பா.

"அப்பொழுதுதான் எங்களுக்கும் பணக்கார அத்தை ஒருத்தி இருக்கிருள் என்பது நினைவிக்கு வந்தது.

"ஆமாம், ஐந்தாறு வருஷங்களாகக் கடுதாசிப் போக்குவரத்து இல்லே. அக்காவைக் கேட்டுக் காரியம் நடக்கிறதாவது!'' என்ருள் அம்மா சலிப்புடன்.

"அப்பா அதற்குப் பதில் சொல்லவில்லே. நான்கு தினங்களுக்குப் பிறகு, அத்தையிடமிருந்து வந்த கடிதத்தி ஞல் அப்பாவின் கடிதம் அத்தையின் மனத்தை எவ்வளவு பாதித்துவிட்டது என்பது புரிந்தது. "ஒன்றும் அவசரப் பட்டுச் செய்யாதே. விஷயத்தை அறிந்து வருவதற்கு ராகவன் லீவு வாங்கிக்கொண்டு வருகிருன். செள. கமலத்துக்கு வயசு ஒன்றும் ஆகிவிடவில்லே'' என்று கண்டிப்பாக எழுதி இருந்தாள் அத்தை.


2

"அத்தான் ராகவன் கான்பூரிலிருந்து வந்ததுமுதல் என் மனம் அவனேயும், எனக்குக் கணவனுக நிச்சயிக்கப் பட்டிருக்கும் நாற்பது வயசுக்காரரையும் கற்பனே செய்து பார்ப்பதில் ஈடுபட்டிருந்தது. அழகிய உருண்டை முகம். கண்ணுடிக்குள் துருதுருவென்று பிரகாசிக்கும் கண்கள். அப்பாவுடன் அளவளாவிப் பேசும் தூய்மையான சுவபாவம். ஆனல், அவர் பணம் படைத்தவர்.

"இங்கே வா கமலம்! பழமும், தேங்காயும் எடுத்துக் கொண்டு கோயிலுக்கா போகிருய்?'' என்று சமையலறையிலிருந்து வெளியே வரும் என்னேக் கேட் டான் அத்தான்.

"இல்லை, கொல்லையில் கிணற்றடிக்குப் பக்கத்தில் துளசி மடம் இருக்கிறதே, அதற்குப் பூஜை செய்யப் போகிறாள். இதெல்லாம் கிராமாந்திரத்து வழக்கம் அப்பா" என்றாள் அம்மா. "சரிதான்" என்று விட்டு அத்தான் என்னைப் பின் தொடர்ந்தான்.

"வழக்கம்போல் ஜகஜ்ஜோதியாய்க் காட்சி அளித்தாள் துளசி. கிராமியப் பழக்க வழக்கங்களை விட்டு விலகி, வருஷக் கணக்கில் நகர வாசத்தில் மூழ்கி இருந்த ராகவனின் மனசில் ஒரு விதப் புது சக்தியை அந்தக் காட்சி ஏற்படுத்தி இருக்க வேண்டும். பவழ மல்லிகை மாலையை மடத்தின் முகப்பில் சாத்தும்போது அவன், "அடேயப்பா! கல்யாணம் படுகிற பாடு படுகிறதே இதெல்லாம்" என்று சொல்லிக் கொண்டே என் அருகில் நகர்ந்து வந்து நின்று கொண்டான் அத்தான்.



"என் மனத்தை என்னவோ செய்தது. கையில் பிடித்த மாலையுடன் அவன் பக்கம் திரும்பினேன். இதை

இரண்டு கண்கள் உற்று நோக்குவதை உணர்ந்தேன்.

"ராகவா" என்று கூப்பிடும் அப்பாவின் குரல் இதுவரையில் எங்கள் காதில் விழாமல் இருந்தது ஆச்சரியம்தான்! "ராகவா! இந்தக் கல்யாணத்தில் எனக்குத் துளி கூடச் சம்மதமில்லையப்பா. பெற்ற பெண்ணை இதைவிடப் பாழ் கிணற்றில் தள்ளலாம்" என்று துக்கம் அடைக்கக் கூறினார் அப்பா.

"கல்யாணத்தை நிறுத்திவிடுங்கள், மாமா" என்றான் அத்தான்.

"நிறுத்திவிட்டு...?" என்று பரிதாபத்துடன் கேட்டார் அப்பா.

"கமலத்தை நான் கல்யாணம் செய்து கொள்கிறேன்" என்று சாந்தமாகப் பதில் அளித்தான் அத்தான்.

"பிருந்தை அருள் செய்தாள் என்று என் மனம் பூரித்தது" என்றாள் கமலம்.


*




பண்டித நேருவும் சர்தார் பலதேவசிங்கும் டிசம்பர் மாசம் லண்டனுக்குப் புறப்படும்போது வெல்லிங்டன் விமான நிலையத்தில் பல பெண்கள் வந்து வழி அனுப்பினார்கள். ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவும் ஸ்ரீமதி இந்திராவும் படத்தின் மத்தியில் இருக்கிறார்கள்.



படம் 1



படம் 3



படம் 4

ஊசியும்  நூலும்

வி. சரோஜினி


பல வர்ண நூல்களைக் கொண்டு தைக்கப்படும் பூ வேலையைவிட, ஒரே வர்ணத்தில் தைக்கப்படும் பூ வேலையை அநேகர் விரும்புவர். நூல், துணியின் நிற மாகவோ, அல்லது, அதைவிடக் கொஞ்சம் இருண்ட நிற மாகவோ இருக்க வேண்டும். சில மாதிரிகளை, ஒரே வர்ணத்தின் இருவிதச் சாயை காட்டும் நூல்களால் தைக்கலாம். அப்படித் தைத்தமாதிரி ஒன்றைப் படம் 1-ல் பார்க்க. பெரியதும் சிறியதுமான வட்டங்கள் படம் 2-ல் இருப்பதைப் போல் வரைந்து கொள்ள வேண்டும். பிறகு, ஒவ்வொரு வட்டத்தையும் படம் 3-ல் காட்டியிருப்பதைப் போல் தைக்க வேண்டும். முதல் தையல், வட்டத்திற்கு வெளியிலும், இரண்டாவது தையல், வட்டத்திலும், மூன்றாவது தையல், வட்டத்திற்குள்ளும், நான்காவது தையல், மறுபடியும் வட்டத்திலுமாக மாறி மாறித் தைக்க வேண்டும். வெளிவட்டம் முழுவதையும் இவ்விதம் நிரப்பிய பிறகு, உள் வட்டத்தில், படம் 3-ல் இருப்பதைப் போல் + மாதிரிம் × மாதிரியும் நடுப் புள்ளியிலிருந்து தைக்க வேண்டும்.

இனி, பாக்குக், கலர் நூலால் மெருகிட வேண்டும். படம் 4-ஐப் பார்க்க. பூவின் ஒவ்வொரு இதழும் தெளி வாய்த் தெரியும். உள்வட்டத்திலும் தேன் நிரத் தையல்களுக்கு நடுநடுவே வரும்படி + மாதிரியும் × மாதிரி யும் பாக்குக் கலர் நூலால் தைக்க வேண்டும்.


இந்த மாதிரியைத் தலையணை யுறை, மேஜை விரிப்பு இவைகளுக்குத் தைக்கலாம். தலையணை யுறையில் எதிரெதிராய் இரண்டு மூலைகளுக்குத் தைத்தால் நன்று யிருக்கும் இந்தப் பூக்களை, 'டானு' மாதிரி இரண்டு நேர் கோடுகளால் இரண்டு பக்கத்திலும் இணைத்துத் தைத்தால் பார்வையா யிருக்கும். படம் 1-ஐப் பார்க்க. இதைத் தைப்பது மிகவும் சுலபம். காகிதப் பென்சிலால் நான்கு நேர் கோடுகள் போட்டுக் கொள்ளலாம். அல்லது, ஓர் இழை நூலை அந்த இடங்களில் உருவி எடுத்து விட்டாலும் பாதகமில்லை. பிறகு, படத்தில் காண்பித்திருப்பதைப்போல் தேன் நிறத்தாலும் பாக்குக் கலராலும் மாறி மாறி மும்மூன்று தையல்கள் சாய்வாய்த் தைக்க வேண்டும்.

படம் 5-ஐக் கவனிக்க. குழந்தைகள் சட்டை, பாவாடை, ஜம்பர் கைஓரங்கள் இவைகளுக்கு ஓரம் வளைவு வளைவாய்த் தைத்து வெட்டினால் மிகவும் நேர்த்தியாயிருக்கும். இம்மாதிரி ஓரம் தைப்பதை ஆங்கிலத்தில், 'Scallop' என்று சொல்வார்கள். படம் 5-ல் இருக்கும் மாதிரியை முதலில் தைக்கவேண்டிய துணியின் ஓரத்தில் வரைந்து கொள்ள வேண்டும். பிறகு, வெள்ளை நூலால் ஒவ்வொரு வளைவிற்குள்ளும் படம் 6-ல் காண்பித்திருப்பதைப்போல் நூல்போட்டுக் கொண்டு துணிக்குப் பொருத்தமான பூ நூலால் படம் 7-ல் காட்டி யிருப்பதைப்போல், 'Button hole stitch' பொத்தான் தையல் இடை விழாமல் நெருக்கமாய்த் தைக்க வேண்டும்.

பெரிய வளைவிற்கு நடுவேயிருக்கும் பூங்கொத்தில் பூவுக்கும் மொட்டிற்கும் கடும் சிவப்பு நூலும், இரத்தச் சிவப்பு நூலும் உபயோகிக்கப்பட் டிருக்கிறது. இலையும் காம்பும் இருவிதப் பச்சை நூல்கள். படம் 5-ல் இருண்ட நிறம் காட்டியிருக்கும் இடங்களில் கடும் சிவப்பும் கடும் பச்சையும் தைக்க வேண்டும். வெளுறிய நிறம் காட்டி



படம் 5



படம் 6



படம் 7



பூங்கொத்து



மொட்டு

யிருக்கும் இடங்களில், இரத்தச் சிவப்பும் இளம் பச்சையும் உபயோகிக்க வேண்டும். காம்பிற்கு இருவிதப் பச்சை நூல்களில் எதுவேண்டுமானாலும் தைக்கலாம். பூவின் நடுவில் மஞ்சள் நிற நூலால் ஒரு வட்டம் தைக்க வேண்டும். இதற்கு அடுத்த பெரியவளைவில் குங்குமப் பொட்டுப்போல் ஒரு சிவப்பு வட்டம் தைத்தால் போதுமானது. பூவும் வட்டமும் வளைவுகளில் மாறி மாறி வரும்.

ஓரம் முழுவதும் தைத்து முடிந்த பிறகு, சிறிய கூர்மையான கத்தரிக்கோலால் வளைவுகளைத் தையலில் படாமலும் துணி தெரியாமலும் ஜாக்கிரதையாய்க் கத்தரிக்க வேண்டும்.

புடைவைகளின் ஓரத்திற்கும் இம்மாதிரி அநேகர் தைக்கின்றனர்கள். வேலை மிகவும் கஷ்டம்தான். ஆனால், பார்வைக்கு மிகவும் நேர்த்தியா யிருக்கும்.

*

வேலைக்காரி

சகுந்தலா ராஜன்

சாதாரணமாய்ப் பெண்களுக்குக் கோபம் வந்தால், அந்தக் கோபத்தைப் பாத்திரங்களின் மீது காட்டுவார்களென்றும், செம்போ, தவலையோ நசுங்கின பிறகுதான் அவர்கள் கோபம் தீருமென்றும் சிலர் எழுதுவதை நான் படித்திருக்கிறேன். அதில் உண்மை எவ்வளவோ எனக்குத் தெரியாது. ஆனல், ஸ்ரீமதி மங்களத்திற்குக் கோபம் வந்துவிட்டால், அவள் குழந்தைகள் பாடுதான் திண்டாட்டம் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்த விஷயம். (நல்ல வேளை, பாத்திரம் நசுங்குவது போல் குழந்தைகள் நசுங்கிப் போவதில்லை!)



தீபாவளியாகிச் சில தினங்களே ஆகியிருந்தன.

"ஏண்டா மணி! அந்தப் பழிகாரி பத்துத் துலக்கிறவள்தான் வரல்லையே? அந்தக் கூடைத் துணி பிழிந்து போட்டேனே? சித்தே உலர்த்தினல் என்னடா காசமாய்ப் போறவனே?"

"இப்போத்தானே அம்மா பள்ளிக்கூடம் விட்டா?..."

"பதில் சொல்லாதே! சொல்லாதே! சொல்லாதே!..."

இதற்கு மேல் தபால், திபீல், என்று அடிக்கும் ஓசை. அதுவரையிலும் 'காமிரா ரூமில்' ஆபீஸ் பைலுடன் அழுது கொண்டிருந்த, துரைசாமி அய்யரால் பொறுக்க முடியாதுபோகவே, "அடி பாவி! எண்டி! அடிச்சுக் கொல்லறே அவனை!" என்று சொல்லிக் கொண்டே ஓடி வருவார் பிள்ளையைத் தாங்க.

"ஆமாம்! வீட்டிலே நான் ஒருத்திதான் பாவி! வீடு கிடக்கிற கிடையைப் பாருங்கோ! மாசத்திலே பத்து நாள் ஒருத்தி லீவு போட்டால், வீடு எப்படி உருப்படும்! சாயங்காலம் வீடு கூட்டி வேலாயி வரல்லே! சித்தே துணியை உணர்த்துடா எங்கறேன் எதிர்த்துப் பேசறுன்!..."

பையனைச் சமாதானம் செய்துவிட்டு, மறுபடியும் பைலுக்குள் நுழைந்தால் துரைசாமியின் சிந்தனை 'பைலை' விட்டு வெகுதூரம் ஓடும்.

'வாஸ்தவம்தானே மங்களம் சொல்றது! பாதி நாள் வேலாயி வராட்டால் அவள்தான் என்ன செய்வாள்! ஆனல், இதற்கு முன்பு அவள் இப்படி வேலாயியைப் பற்றிப் புகார் செய்ததில்லை. இப்போது மட்டும் என்?...'

இரவு சாப்பிடும்போது மங்களம் தானுகவே ஆரம்பித்த விஷயம் துரைசாமியின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தது.

"குழந்தைகளை அடிக்கிறேனென்று மட்டும் தெரிந்ததே உங்களுக்கு! வேலாயி பண்ணுகிற அநியாயம் என் தெரியல்லே!..."

துரைசாமி களுக்கென்று சிரித்து விட்டார்.

"ஆமாம், சிரிப்பாய்த்தான் இருக்கும். நான் சிரிப்பாய்ச் சிரிக்கிறேனே இல்லையோ? ஒரு கூடைத் துணியும் தோய்ச்சு, ஒரு அம்பாரம் பாத்திரம் தேய்ச்சுப் பார்த்தால் தெரியும்!"

"மங்கு! நீ வேலை செய்கிறது எனக்குத் தெரியாமல் போகல்லே! அதற்காகக் குழந்தைகளை ஏன் கொல்லணும் என்பதுதான் எனக்குப் புரியல்லே! அக்கம் பக்கத்தில் என்ன சொல்கிறார்கள் தெரியுமோ?"

"எனக்கு அதை எல்லாம் கேட்டுண்டிருக்கச் சாவகாசமில்லை! நீங்கள் கேட்டேளோ இல்லையோ?"

"ராக்ஷஸி மாதிரி, அந்தம்மாள், குழந்தைகளைப் போட்டுக் கொல்லறா ஸார்! ஒரு பிள்ளைக்குத் தவசு பண்ணறா ஒருத்தொரொத்தர்! என்று பேசிக்கிறா."

"பிறத்தியார் சொல்லுவதும், பேசிக் கொள்வதும் தான் என்றைக்குமே உங்களுக்குப்படும். இப்போ நான் சொல்லிப்பிட்டேன். இனிமே ஒரு நிமிஷம் வேலாயி இந்த வீட்டில் இருக்கப்படாது. காத்தாலே வந்ததும் அவள் சம்பளத்தைக் கொடுத்துப்பிடுங்கோ!..."

"கொடுக்கிறேன் ஆனா..."

"ஆனா, ஆவன்னா ஒன்றும் வேண்டாம்..."

"சரி! உன்பாடு! ஊரிலே வேலைக்காரி அகப்படுகிறது சிரமமாய் இருக்கேன்னு சொன்னேன்!..."

"ஒரு சிரமமுமில்லை.. தங்கமாய்ச் செய்யற வேலைக்காரி ஒருத்தியைப் பாத்து வச்சாச்சு..."

"என்னமோ நீ கஷ்டப்படுவாயே என்பதால் சொன்னேன். ஒரு நாள் நின்றாலும் மறுநாள் அத்தனையும் சேர்த்துச் செய்கிறாள் வேலாயி. மூன்று வருஷமாய் நிலைத்து இருக்காள்...அப்புறம் உன்பாடு..."

மறுநாள் வேலாயி வந்தாள். சம்பளத்தை வாங்கிக் கொள்ள மறுத்தாள். 'அம்மா! தயவு பண்ணுங்கோ அம்மா! இனிமே இப்படி நிக்கவே மாட்டேன்' என்று அழுதாள். மங்களம் மசியவில்லை. துரைசாமிக்குத் தெரியும் வேலாயி எவ்வளவு நம்பிக்கையும் விசுவாசமும் உள்ள வேலைக்காரி என்று. ஏன்? மங்களத்திற்கு மட்டும்

தெரியாதா? எவ்வளவோ தரம் வேலாயி நின்றபோதெல்லாம் மங்களம் மன்னித்ததில்லையா அவளை? இப்பொழுது மட்டும் என்ன?...

அடுத்த தினம் துரைசாமி ஆபீஸிலிருந்து வரும் போதே உள்ளே புது வேலைக்காரியின் குரல் கேட்டது. "ஏம்மா! நான்தான் சொன்னேனே தீவாளி கழிச்சதும் உங்க சிநேகிதக்காரம்மா வூட்டை வுட்டுட்டு வந்துடறேன்னு! நான் மட்டும் சொன்ன சொன்னபடிதான்!..."

"எங்கே வரமாட்டேயோன்னு நினைச்சேன் நாகம்மா! நீ இங்கே வரேன்னு உன் பழைய எஜமானிக்குத் தெரியுமோ?..."

"பட்டம்மாளிற்கா? சே! அம்மாம் அசடு இல்லெம்மா நான்! அவங்க உங்களுக்குச் சிநேகமாச்சே...சொல்லுவேனுங்களா?..."

"என்னமோ அன்னிக்கு அவா வீட்டிலே நீ பத்துத் தேய்க்கும் சவரனையும், துணி உலர்த்தும் அழகையும் பார்த்து எனக்கு அப்படியே மனம் லயிச்சுப் போச்சு உன்னிடம்! இனிமே இங்கேயே கிடந்துடு..."

"ஆமாம்! பின்னே!" என்றாள் அந்தப் புது வேலைக்காரி......'என்ன இருந்தாலும் வீட்டு வேலை விஷயங்களில் பெண்களுக்குத் தெரிகிறது நமக்குத் தெரியவில்லைதான்! வேலாயி போனாலும் போனாள், வீடு சுத்தமாச்சு! கறிகாய் வாங்கும் சிரமம்கூடத் தனக்கு வைக்காமல் அவள் செய்து விடுகிறாளே' என்று எண்ணிக் கொண்டார் துரைசாமி.

"அவள் வேலை செய்கிற ஒழுங்கிற்குப் புதுப் புடைவைதான் வாங்கணும். அவளுக்குத் தைப் பொங்கலிற்கு" என்றாள் மங்களம் கணவனிடம்.

ஆறு மாசத்திற்கு ஒரு பழம் புடவை கொடுக்க அழும் அதே மங்களம்தானா இவள் என்று சந்தேகத்

துடன் அவளைப் பார்த்த துரைசாமி, "என்னடியிது துணி விக்கிற விலையில்......" என்றாரம்பித்தார்.

மங்களம் கேட்டால்தானே? பன்னிரண்டு ரூபாய்க்கு, முன்னாடி நாகம்மாளிற்குச் சேலை எடுத்த பிறகுதான் தனக்கு எடுத்துக் கொண்டாள் எனில் மிகையாகாது.

தைப் பொங்கலன்று வெகு உற்சாகமாய் வேலை செய்தாள் நாகம்மாள். பூர்ண திருப்தியுடன் எஜமானி கொடுத்த புடைவையை வாங்கிக் கொண்டு நமஸ்கரித்தாள்! ...மத்தியானம் மணி மூன்றச்சு...நாலு...ஐந்து...ஆறும் அடித்தது! நாகம்மா வரவில்லை. வாசலுக்கும் உள்ளுக்கு மாக நடந்தாள் மங்களம். 'மத்தியானம் வரமாட்டேன்னு சொல்லவே யில்லையே?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். "பொங்கலோ இல்லையோ? கொஞ்சம் ஓய்வு எடுத்துண்டு நாளைக்கு வருவ..." என்று துரைசாமி சொன்னதை அவள் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. மறுநாள் பொழுது விடிந்ததும் வாசல் கூட்டும் ஓசை கேட்கிறதா என்று உற்றுக் கவனித்தாள் மங்களம். ஊஹூம்! அன்று மெழுகாமல்தான் கிடந்தது வீடு!

"எம்மா! நாகம்மா வரல்லே!..."என்று ஏதோ கேட்டான் கடைக்குட்டி கோபு.


"பத்துக் கிடக்கே தெரியல்லையோ!..." என்று சிள்ளென்று விழுந்தாள் தாயார்.

அடிக்குப் பயந்து சற்றுத் தூரத்திலேயே நின்ற கோபு, "அன்னிக்கு அடுத்த தெரு அம்புலு மாமி வீட்டிலே நுழைஞ்சா அம்மா அவ" என்றான்.

"என்னிக்குடா?" என்று அவள் கேட்பதற்குள் முன் ஜாக்கிரதையாக ஓடிவிட்டான் அந்த வாண்டுப் பயல்.

"பழிகாரி! புடைவைக்காரனுக்குப் பன்னண்டு ரூபாய் இன்னும் அழல்லே! விடறேனா பார்! அந்த அம்புலு

மாமியையும் சேர்த்துக் கேட்கிறபடி கேட்கிறேன்..." என்று ஆத்திரத்துடன் கிளம்பினள் மங்களம். அம்புலு வீட்டிலே அவளைக் காணோம். வேறே யாரோ குடிவந்திருந்தார்கள்.



"அவாளெல்லாம் எங்கே?" என்று கேட்ட மங்களத்தை நோக்கி, "எவாள்? இதற்கு முந்தி குடியிருந்தவாளா?" என்று வினவினள் ஒரு மங்கை.

" ஆமாம் !"—"மூந்தா நாள் மாற்றலாகிப் போய் விட்டாளே பெங்களூருக்கு..." "ஹும்! யார் யாரு போனா தெரியுமோ?"..." அவா அகமுடையான் பெண்' டாட்டி...கூட சமையற்காரன்...புதுசா ஒரு வேலைக்காரி" " ஆ வேலைக்காரியா ? அவ பேர்..." " எனக்குத் தெரியாது அதோ எங்கள் வீட்டு வேலாயி வராள் கேளுங்கோ !..." "சௌக்கியம் தானுங்களா ?..."என்று கேட்ட வண்ணம் அச்சமயம் அங்கு வந்த சாக்ஷாத் வேலாயியைக் கண்ட மங்களத்திற்கு உடம்பை என்னவோ செய்தது.

"ஏம்மா! உங்க வூட்டுலே வேலெ செய்து புதுப் புடைவை கூட வாங்கியாந்தாளே அந்தப் பொண்ணுதான் நேத்து இவங்க கூடப் போனது? ஏன்? உங்க கிட்டச் சொல்லிக்கினு வந்தேன்னுதானே சொன்னாள் ?..."

"சொல்லிக்கிண்டா, முழுப்பொய்! நாகம்மா ஊரை விட்டுப் போறான்னு எனக்குத் தெரியவே தெரியாது..."

"நாகம்மாளா? சீதம்மா தன் பேரு என்றாளே?..."

இப்படிப் பட்டவளுக்கு என்ன ஒரே பேராய் இருக்கணுமா? புதுசு புதுசாய்ப் பெயர் மாற்றிண்டிருப்பா..." என்று கத்தினாள் மங்களம்.

"உங்களை விட்டு வந்ததிலேந்து இவங்க வூட்டுலே தாம்மா வேலெ செய்யறேன் !..." என்றாள் வேலாயி.

வேலாயியை மறுபடி கூப்பிட மங்களத்தின் மனம் துடித்தது. ஆனால், கௌரவம் ?...மேலும் ஏற்கெனவே பிறர் வீட்டு ஆளைக் கலைத்து அழைத்து வந்ததில் என்ன சுகம் கண்டாள் அவள் ?

"ஆத்திற்கு வந்து போய்ண்டு இரு வேலாயி !..." என்றாள் மங்களம்.

" ஆங்! வராம இருப்பேனா?" என்று பதிலுரைத்தாள் வேலாயி...

இப்போது மறுபடியும் வேலாயிதான் வேலை செய்கிருள் மங்களத்தின் வீட்டில். அவள் வழக்கப்படி பாதிநாள் நின்றுதான் போகிருள். ஆனல், ஏனே தெரியவில்லை மங்களம் கப், சிப் என்று இருந்தாள்.

அநுபவப்பட்டாயிற் றல்லவா? சில நாட்களே வேலை செய்து, பின் கொள்ளையடித்துப்போன நாகம்மாளை நினைக்கையில், பழம் புடைவையுடன் திருப்தி அடையும் வேலாயி தற்சமயம் மங்களத்தின் கண்ணிற்கும் மனத்திற்கும் வெகு பிடித்தமாய்ப் போய்விட்டாள். மனத்திற்கு திருப்தி ஏற்பட்டபின் வேலாயின் வேலைமீது குற்றம் காணமுடியுமா? கண்டால்தான் கண்கள் பார்க்குமா அதை? மேலும், தன் சிநேகிதி வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த நாகம்மாளைத் தான் அழைத்து வந்தபோது, அவள் மனம் நோகுமே என்று தான் யோசிக்காமல் இருந்ததும், அதே மாதிரித் தன் வீட்டு வேலைக்காரியைப் பிறர் கலைத்ததாகக் கேட்டுத் தான் கோபம் தாங்காமல் ஓடினதுமாகியவற்றை எல்லாம் நினைக்கையில், தன் குற்றம் நன்ருகப்பட்டது மங்களத்தின் மனத்தில். தனக்குப் புத்தி வரத் தெய்வம் செய்த வேலை இது என்று எண்ணிஞள் அவள்...

*

குடும்ப வாழ்க்கை

நந்தினி

பிரியமுள்ள பத்மாவதிக்கு,

உன் வீட்டு வேலைக்காரி நின்று விட்டதாகவும், நீ ஆள் இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் எழுதி இருக்கிறாய். கேட்க வருத்தமாக இருக்கிறது. கூடிய சீக்கிரம் வேறொருத்தி கிடைப்பாள் என்று நம்புகிறேன்.

வேலைக்காரர் அடிக்கடி நம்மைவிட்டு விட்டுப் போகாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம். முப்பது வருஷமாக நம் வீட்டில் வேலை செய்கிறவர்கள் இருந்து வருகிறார்களே, இங்கே அந்த மாதிரி ஒரு வீட்டிலும் காணோமே என்று கேட்டு எழுதி இருக்கிறாய்.

இது கிராமம் போன்றது. வேலைக்கு வருகிறவர்களை இன்னும் உயர்ந்த சம்பளத்திற்கு இன்னும் நல்ல வேலை கிடைக்கும் வா என்று கூப்பிடுகிறவர் இங்கே எவரும் இல்லை. நகரங்களிலோ பல தொழிற்சாலைகள், பல ஆயிரம் கடைகள், வியாபாரிகள், வீடுகள் எல்லாம் இருக்கின்றன. வேலை செய்பவர் செய்யக்கூடிய வேலை எண்ணிறந்தவை. சொற்பப் படிப்பும் சொற்ப அநுபவமும் கொண்ட வேலையாட்கள் ஒவ்வொரு தொழிலாக, இக்கரைக்கு அக்கரை பச்சை என்று எண்ணிச் சென்று விடுவது சகஜம். ஆகையால், உன் வேலைக்காரி நிற்பதில் அதிசயம் எதுவும் இல்லை. இருந்தும் வேலையாட்கள் விஷயத்தில் நாம் கையாள வேண்டிய விதிகள் சில இருக்கின்றன. அவைகளை நீ உணர்ந்தால் நல்லது என்று

எனக்குத் தோன்றுகிறபடியால் அவைகளை விளக்கி எழுதி இருக்கிறேன்.

வேலைக்காரர்கள் எஜமானர்களிடம் விசுவாசம் கொண்டு இருக்க வேண்டுமென்று சொல்வதை நீ அடிக்கடி கேட்டிருப்பாய். அதேவிதம் எஜமானர்களுக்கும் தங்களிடம் வேலை செய்பவர்கள் விஷயத்தில் சில பொறுப்புகள் இருக்கின்றன. அது எந்தமாதிரிப் பொறுப்பு என்பதைச் சரியாக விளக்குவது கஷ்டம். இருந்தும் சொல்கிறேன் கேள்: காந்தி அடிகளிடம் ஒருமுறை சிலர் சென்று, "நாங்கள் பிராயமானவர்களுக்குக் (Adult education) கல்வி போதிக்க விரும்புகிறோம். அது எந்த மாதிரியான கல்வியாக இருக்க வேண்டும்? எத்தனை வருஷங்களில் ஒருவர் எந்த அளவு படிப்பைப் பெறுவது? என்ற திட்டம் எவ்விதம் செய்கிறது? எல்லாம் சற்று நீங்கள் விளக்குங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அடிகள் சிரித்து விட்டு, "நான் வாத்தியாராக இருந்தால் அந்தமாதிரி இத்தனை வருஷத்தில் இந்த அளவுப் படிப்பு என்று திட்டம் செய்யமாட்டேன். கலாசாலையில் டாக்டர் பட்டம் பெற்ற ஒருவர் என்னிடம் வந்து, "எனக்கு நீங்கள் ஏதாகிலும் போதியுங்கள்" என்றால், அவருக்கு ஏற்றதான பாடங்கள் அமைப்பேன். ஒரு கிராமத்துக் குடியானவன், எழுதப் படிக்கத் தெரியாதவன் வந்தால் அவனுக்கு ஏற்றதாகப் பாடம் அமைப்பேன். இரண்டும் தனித்தனி முறைகளில் போதிக்கப்படும் பாடங்களாக இருக்கும்." என்றார். நம்மிடம் வேலைக்கு வருகிற ஆளின் புத்தித் திறமையைப் பொறுத்து இருக்கிறது நாம் அவனை நடத்தும் விதமும்.

1. வேலையாளுக்கு ஒரு வேலையைச் செய்யுமாறு சொல்லும் போதே, ஒரு நம்பிக்கையும் ஊக்கமும் நமது குரலில் காண்பிக்க வேண்டும். அந்த வேலையை அவன்

செய்வான், திறமையாகச் செய்வான் என்று நாம் நம்புவது நமது குரலில் ஒலித்து அது அவனுக்கு உற்சாகம் கொடுப்பதாக இருக்க வேண்டும். வேலை செய் என்று சொல்ல ஆரம்பிக்கையிலேயே அவநம்பிக்கையும் ஏமாற்றமும் இருப்பதாகக் காண்பிக்கக் கூடாது.

2. நாம் சொல்லும் வார்த்தைகள் தெளிவாக உச்சரிக்கப்பட்டு அவனுக்கு நன்ருகப் புரிய வேண்டும்.

3. அவன் தனது அறியாமையினுலோ, பழக்கமில்லாததனுலோ தவறு செய்வதற்கு இடம் கொடுக்கக் கூடாது. உதாரணமாக, "கடைக்குப் போய்க் கடலை மாவு வாங்கி வா." என்று சொல்கையில், அது நன்ருக இருந்தால் மாத்திரமே வாங்கி வா, பூச்சி அல்லது நமிர்ப்பினுல் கட்டிதட்டி இருந்தாலோ, அல்லது இந்த விலைக்கு மேற்பட்ட விலையாக இருந்தாலோ வாங்காதே என்பதை நாம் முதலிலேயே கூறுவது உசிதம். இவ்விதம் தெளிவாகக் கூறினுல், அவன் தவறு செய்ய இடம் இராது. அவனை அநாவசியமாக நாம் திட்டவேண்டி இருக்காது. அநேகம் பெண்கள் தாங்கள் கூறுவதைச் சரியாகப் புரியும்படி கூருமல், பிறகு வேலையாளைத் திட்டுவது சகஜமாக இருக்கிறது.

4. கூடியவரை கோபிக்காதே. அவன் தவறு செய்தால் அதை எடுத்துக் காண்பித்து இனிமேல் அப்படிச் செய்யாதே என்று எச்சரித்தால் போதும். பொதுவில் அவன் தவறு செய்வதற்கு மூல காரணம் என்ன என்பதை யோசித்துப் பார்த்தாயானுல் நூற்றில் எண்பது விகிதமாகிலும் வேலைக்காரனின் தவறுதலுக்குக் காரணம் எஜமான, எஜமானிகளின் தெளிவற்ற சொற்களோ, முன் யோசனை இல்லாமல் கொடுக்கப்பட்ட உத்தரவுகளோதாம் என்பது தெரியவரும்.

5. வேலைக்காரர்களைச் சோம்பேறியாகவோ, திருடர்களாகவோ செய்யாதே. "அது எப்படி நாம் செய்கிறது?


அவர்கள் குணம் அவ்விதம் இருந்தால் என்ன செய்யலாம்?'' என்று கேட்காதே. எப்பேர்ப்பட்ட தங்கமான குணம் படைத்தவரையும் வேலையைச் சொல்லாமல் சும்மா உட்கார வைத்திருந்தால் அவன் நாளடைவில் சோம்பேறியாக மாறுவான். வேலையாட்களுக்குச் சம்பளம், இனம் எல்லாம் நிறையக் கொடுக்கலாம். ஆனால், வேலையைக் கொடுப்பது முக்கியம். அவரவர்கள் சக்திக்கு ஏற்றதாக அதைக் கொடு. ஆனால், பாவம், தூங்கட்டும். என்று விடாதே. அவன் தூங்கித் தூங்கிக் காலத்தை வீண் செய்யும் பாபம் உன்னைச் சேராமலிருக்கட்டும். அவனுக்கு அவனுடைய பொறுப்பைக் கற்றுக் கொடுத்து, அவன் தன் வேலையில் பெருமையும் திருப்தியும் கொள்ளுமாறு செய்.

அதேவிதம், சில்லறைக் காசுகள், ரூபாய்கள், பெட்டிச் சாவிகள் இவைகளைக் கண்ட இடத்தில் வைத்து அதைத் திருடச் சந்தர்ப்பம் அளித்து வேலையாளைத் திருடனாகச் செய்யாதே. அவர்களின் சேமத்தில் நீ உண்மையாகப் பிரியப்படுகிறவளாய் இருந்தால் அவர்களை நேர்வழியில் பழக்கு. திருடனை நல்லவனாகச் செய்வது கஷ்டம். நல்லவனை, அவனுக்குத் திருடுவதற்கு அடிக்கடி சந்தர்ப்பம் அளித்துத் திருடனாகச் செய்வது மிகவும் சுலபம். இந்தப் பொறுப்பை நீ உணர்ந்து வேலையாட்கள் திருட இடந்தராமல் நடந்துகொள். கடையிலிருந்து அவன் சாமான் வாங்கி வந்தால் மீதிச் சில்லறையைச் சரியாக எண்ணிவாங்கு. இனமாக எவ்வளவு வேண்டுமானாலும் கொடு. ஆனால், கணக்குச் சொல்லாமல் அவனாக இனம் எடுத்துக்கொள்ள உடன்படாதே. கணக்குக் கேட்கையிலேயே, அவனிடம் அவநம்பிக்கைப் படுவதுபோலக் காண்பிக்காதே.

6. இறுதியாக, அவர்களிடம் உண்மைப் பிரியம் வை. அவர்கள் சுக துக்கம், தேக சௌக்கியம், ஆகாரம்

இவைகளில் அக்கறை காண்பித்து உன்னாலான உதவியை அவர்களுக்குச் செய்து கொடு. அவர்களுக்குத் தெரியாத வேலையைச் சரியாகச் சொல்லிக் கொடு. "பூயிஷ்டம் பவ தக்ஷிண பரிஜனே" என்று கணவன் வீட்டிற்குப் போகும் சகுந்தலைக்குக் கண்வ மகரிஷி சொல்லிக் கொடுத்தார் என்பதை நீ படித்திருக்கிறாய் அல்லவா? வேலையாட்கள் விஷயத்தில் அவ்விதம் தாராளமாகவே கூலியோ இனமோ கொடுப்பவளாக இரு. அவர்கள் செய்ததற்கு இதுதான் கூலி என்று திராசில் நிறுக்காதே. அவர்கள் நம்மிடம் நன்றியுடன் இல்லை என்ற நினைக்காதே. அவர்கள் உனக்குச் செய்வதற்கு நீ நன்றியைக் காண்பித்துக் காண்பித்து, நன்றி என்ற குணத்தை அவர்களுக்குப் பழக்கிக் கொடு. இவ்விதம் நீ நடந்துகொண்டால், உன் வேலையாட்கள் உன்னிடம் நிரந்தரமாக இருப்பார்கள். உன்னை விட்டுப் போக நேரிட்டாலும் வருத்தத்துடன் பிரிவார்கள்.

உன் அம்மா
நந்தினி.





முனிமாணிக்கம் நரஸிம்ம ராவ்
மொழிபெயர்ப்பு: சீதாதேவி

அது சாயங்கால வேளை. மேற்குத் திசைப் பெண் செவ்வலரிப் பூவை நிகர்த்த புடைவையை உடுத்து, பூர்ண சந்திரனைப்போல் பொட்டிட்டுக்கொண்டு அழகிய நக்ஷத்திரங்களைப் போன்ற குழந்தைகள் சூழ நிற்கும் சமயம்.

விடிந்தது முதல் பொழுது சாயும் வரையில் வயல்களில் மேய்ந்துவிட்டு வீடு திரும்பிய பசு தன் கன்றுகளின் நடுவில் நின்று தாயின் வாத்ஸல்யத்தைப் பொழிந்துகொண்டிருக்கும்.

பக்ஷிகள் கூடுகளைத் திரும்பவும் அடைந்து குஞ்சுகளுடன் 'கிசு கிசு' வென்று குலாவும் சமயம். இயற்கை அப்படியே ஒரு தாயின் வடிவாக உருவெடுத்திருக்கும் சமயம்.

நீங்கள் எங்கள் வீட்டைப் பார்க்க வேண்டுமானால் அந்தச் சமயத்தில் வாருங்கள். எவ்வளவு 'ஹாய்' யாக இருக்கும் சமயம் அது? 'ஜில்' லென்ற கடல் காற்று உங்களுக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும்?

தலையைக் கவிழ்த்துக்கொண்டு நடக்காதீர்கள். பாருங்கள்; சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு வாருங்கள். தாய்மார் சின்னக் குழந்தைகளை எடுத்துக்கொண்டு கூழோ, 'ஆ அம்' மோ ஊட்டுகிறார்கள். அதோ ஒருத்தி தன் குழந்தையின் தளர் நடையைக் கண்டு ஆனந்திக்கிறாள். இன்னொருத்தி, தன் குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்து போகிறாள்.

இக் காட்சிகளைக் கவனித்துக்கொண்டு அந்தச் சாலையிலேயே நேராய்ப் போங்கள்.

ஆஹா! எப்பேர்ப்பட்ட நல்ல வேளை அது! வானத்தில் கிருத்திகை தெரிகிறது. கிருத்திகையின் கிழக்கே சிவந்த ரத்தினம் போல் ரோகிணி ஜ்வலிக்கிறது. அதை ஒட்டினாற் போல மிருகசீர்ஷத்தில் அடங்கிய மூன்று நக்ஷத்திரங்களும் அழகாய் மினுமினுக்கின்றன. அதற்கப்புறம் திருவாதிரை செக்கச் செவேலென்று பிரகாசிக்கிறது. அழகிய ஆறு நக்ஷத்திரங்களின் கூட்டம் அது. ஐயோ, பைத்தியக்காரா! உயிரற்ற அந்த நக்ஷத்திரக் கூட்டங்களைக் கண்டு மகிழ்ந்து போகிறாயே!

பொறுங்கள்.........பொறுங்கள்.

அதுதான் எங்கள் வீடு.

அந்தத் திண்ணையின் மேல் இருக்கிறார்களே, அந்த உயிரோடு கூடிய ஆறு நக்ஷத்திரங்களையும் சற்று நின்று பாருங்கள். குஞ்சுகளுடன் கூடிய பெட்டைக் கோழி போல் கண்களுக்கு விருந்து செய்துகொண்டு அதோ நிற்கிறாளே, அவள்தான்...ஒளிப்பானேன்? அவள்தான் என் மனைவி.

அவள் பெயர் என்ன?

சொல்ல வெட்கப்படுவே னென்று நினைத்தீர்களா? ஊ ஹூம், பெருமையோடு சொல்கிறேன் அவள் பெயரை. ராணீ ஸாஹேப், காந்தம்மாள் ஸுல்தானு பீகம் இத்யாதி...

அவளைப் பாருங்கள். என் மனைவி அழகாயில்லை? ஆம், அவள் நல்ல அழகி.

பாருங்களேன். அவள் அவ்வளவு உயரமும் இல்லை, அவ்வளவு குட்டையும் இல்லை. நிதானமான உயரம். அழகே உருவெடுத்து வந்தவள் என்றும் சொல்வதற்கில்லை, விகாரமும் இல்லை. பார்ப்பதற்குக் கவர்ச்சியா யிருக்கிருள். அவள் மிகச் சிவப்பு மில்லை, மிகக் கறுப்புமில்லை. அவள் நிறமே வேடிக்கையான நிறம். அந்த நிறத்தை இந்த மாதிரி யென்று விவரித்துச் சொல்ல முடியாது. அதென்னமோ அழகான ஒரு நிறம் அது. மிகவும் அழ கான நிறம்.


வீட்டு எஜமானியைப் பார்த்தாயிற்று. சரி! உள்ளே போவோம், வாருங்கள். அந்த ஹாலில் குழந்தைகள் விடும் சைக்கில்கள் இரண்டு இருக்கும். உடைந்துபோன இரண்டு மூன்று நாற்காலிகள் அதிதிகளை வரவேற்கத் தயாராய் இருக்கும்,

கொஞ்சம் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பினீர்க ளானல், விசித்திரமான வஸ்துக்கள் உங்கள் கண்ணில் படும். வாலை இழந்துவிட்டாலும் ஆண்மை துளி கூடக் குறையவில்லை, அதோ கண்களை உருட்டி விழிக்கும் அந்த இரண்டு நாய்களுக்கும். அவை இரண்டும் எங்கள் வீட்டுக்குக் காவலாக இருக்கின்றன.

பிடரி மயிரைத் தொங்க விட்டுக்கொண்டு, பார்ப்பவர் நடுங்கும் குரூரமான பார்வையுடன் அங்கே படுத்திருக் கிறதே, அது எங்கள் சிங்கம். சமீப காலத்திலே அதற்கு ஏதோ ஆபத்து நேர்ந்து, கால் ஒடிந்துவிட்டது. எங்கள் சின்னி அதற்கு எவ்வளவோ சிகிச்சை செய்து பார்த் தாள். ஒன்றும் பிரயோஜனம் இல்லை.

அந்த மூலைக்குப் போகாதீர்கள்! அது அடர்ந்த ஒரு பெரிய காடு. சிங்கங்களும் வேங்கைப் புலிகளும் பயங்கர

மான காட்டு யானைகளும், சர சரவென்று ஓடும் பாம்பு களும் அங்கே இருக்கின்றன. ராதாவுகி விஜயமும் அந்த காட்டைப் பாதுகாக்கிறார்கள். அவர்கள் மகா வீரர்கள். சிங்கங்களின் மீசையைப் பிடித்து உலுக்குவார்கள். யானைகளின் கால்களை மட மட வென்று ஒரு கையால் முறித்து விடுவார்கள். பதி னறடி வேங்கை யின் கழுத்தில் ஒரு கந்தல் துணி யைக் கட்டி அத்தனை பெரிய புலியை அலாக்



காய் வளர்ப்பு நாய்க் குட்டியைப் போல் தரதரவென்று இழுப்பாள் எங்கள் விஜயம்.

அந்தக் காட்டு மிருகங்களைப் பார்த்துப் பயந்துபோய், பாவம், மிகத் தூரத்தில் விலகி இந்த மூலையில் ஒதுங்கிக் கிடக்கும் வெள்ளைப் பூனை எங்கள் ராதாப்பயலுடையது. இன்றைக்கு அதற்கு ஏதோ உடம்பு கொஞ்சம் சரியில்லை. அதனால், அவன் அதற்கு மூன்று முறை தொட்டி ஸ்நானம் செய்வித்து, அதற்கப்புறம் களிமண் வைத்தியம் செய்தான். அதனாலேதான் அது அப்படி அழுது விழித்து கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனையோ வேடிக்கைகள். அந்தக் கூடமே ஒரு சிறிய காட்சி சாலை.

கந்தல் துணிகள் வீடு முழுவதும் ஏன் சிதறிக் கிடக்கின்றன வென்று கேட்காதீர்கள்! அந்தச் சிங்கங்கள் முதலியவற்றைக் கட்ட அவைகள்தாம் உபயோகப்படு கின்றன.

'நாய்கள் கடிக்குமா?' என்று அந்த அறியாப் பெண்ணைக் கேட்டுப் பாருங்கள். 'கடிக்காது' என்பாள் அவள். 'எதனால்?' என்று கேளுங்கள். 'அவை வளர்ப்பு நாய்கள்' என்பாள். அவை வளர்ப்பு நாய்களாம்! அதனால்தான் கடிப்பதில்லையாம்.

ஆனால், அவளிடம் அதிகமாகப் பேச்சுக் கொடுக்காதீர்கள்! அப்புறம் விஷயம் பிரமாதமாய்விடும். அவளுக்குக் கோபம் வந்துவிட்டால் சிங்கத்தையே உங்கள்மேல் உசுப்புவாள். அந்தப் பாழாய்ப்போன சிங்கங்கள் அவள் 'கடி' யென்றவுடன் 'டக்' கென்று கடித்துவிடுகின்றன. அவள் 'வேண்டாம், நிறுத்திவிடு' என்றால், 'கப் சிப்' பென்று இருந்துவிடுகின்றன. அவளிடம் அகப்பட்டுக் கொண்டால் இன்னொரு கஷ்டம்கூட உங்களைப் பிடித்துக் கொள்ளும். அவள் சிங்கத்தைக் கொண்டுவந்து உங்கள் முன் விட்டுக் 'கடி' என்று ஏவும்போது, நீங்கள் பயந்து நடுங்கி நின்ற நிலையில் மல்லாக்காய் விழுந்து, 'ஐயையோ! வேண்டாமம்மா, எனக்குப் பயமாய் இருக்கிறது' என்று நடித்தீர்களோ, பிழைத்தீர்கள்! அவள் சந்தோஷத்துடன் சிங்கத்தைத் திருப்பிக் கூப்பிட்டுக்கொள்வாள். உங்கள் உயிர் தங்கிவிடும். இந்த ரகஸ்யத்தை அறியாமல் நீங்கள் அவள் செய்வதை யெல்லாம் பார்த்துக்கொண்டு ஆச்சரியப் பட்டுக்கொண்டே நின்றுவிட்டீர்களானால்......... அந்தச் சிங்கம் உங்கள் உடம்பு முழுவதும் பாய்ந்து பிடுங்கிவிடுவதோடல்லாமல், அவளும் பெருங்குரல் பாய்ச்சி அழ ஆரம்பித்துவிடுவாள்.

அதன் பின்னும் அவளிடம் பேசிக்கொண் டிருந்தீர்களானால் அன்று உங்கள் சோற்றில் மண்தான். காரணம்? அவள் அம்மாவை கேட்டுப் பொம்மைப் பெட்டியைக் கீழே இறக்கச் சொல்வாள். உங்கள்முன் அவைகளைப் பரப்பி, தஞ்சாவூர் நாட்டியப் பெண்களைச் சதிர் செய்யச்

சொல்லுவாள். பெங்களூர்த் 'தாயி' யைப் பாடச் சொல்லுவாள். துரைகளேயும் துரைசானிகளேயும் வர வழைத்து 'டான்ஸ்' ஆடச் சொல்லுவாள். நீங்கள் சந்தோஷப்படுவதாகத் தெரியாவிட்டால் 'ஹோ' வென்று அழ ஆரம்பித்துவிடுவாள்.

அத்தச் சுவரில் மாட்டியிருக்கும் போட்டோக்களே யெல்லாம் பார்க்காதீர்கள்! அதில் ஒரு மரம் இருக்கிறதே, பார்த்தீர்களா! வெளுத்த அடிமரமும் மஞ்சள் நிறக் கிளேகளும் கறுத்த பழங்களும் சிவந்த இலேகளுமாக நிற்கிறதே! அது என் மனேவி சுயமாக யோசித்து அழகாகத் தைத்த படம். விருந்தாளி என்று வருகிற ஒவ்வொரு மனிதனும் அதைப் பார்த்து ஆச்சரியப் படுவான். மரங்களுக்கு அரசனேப் போன்ற அம் மரத் தையும் அந்த நிறக் கலவையையும் கண்டு புகழாதவர்களே இல்லே.

என் மனேவியும் தன் சிநேகிதிகளிடம் அதைக் காண் பித்து அவர்கள் கொடுக்கும் புகழ் மாலேயை அணிந்து, அவர்களிடம் பெருமை அடித்துக்கொள்வாள். 'அவருக்கு இதிலெல்லாம் துளி கூட ஆசையே கிடையாது; இன்னும் ஏதாவது கலர் நூல் இருந்தால் வாங்கி வரச் சொன்னேன். வாங்கி வரவில்லே. என்ன செய்வது?'' என்று கூடச் சொல்லுவாள்!

அந்த இரண்டாவது படத்தில் இரண்டு அன்னப் பக்ஷி கள் எதிரும் புதிருமாய் நின்றுகொண்டு, மூக்கால் ஒரு பூங் கொத்தைத் தூக்கிப் பிடித்துகொண்டு நிற்கின்றன.

அந்தப் படத்தின் கீழே 'அன்னங்கள்' என்று மசியால் கொட்டை கொட்டையாக எழுதி வைத்தவன் நான்தான். பார்ப்பவர்கள் 'இவை என்ன?' என்று அநாவசியமாகக் கேள்வி போடாமல், அவை அன்னங் களே என்று தெரிந்து கொள்வதற்காக!

கைக்குழந்தை விஜயத்தையும் ராதாவையும் பார்த்துவிட்டீர்கள். ஆகையால், மீதியிருக்கும் பெரிய குழந்தைகள் மூவரையும் பார்த்துவிட்டால் உங்களுக்கு எங்கள் சம்சாரத்தோடு நன்ருய்ப் பழக்கம் ஏற்பட்ட மாதிரிதான்.

பெரியவள் உங்களுடன் பேசமாட்டாள். அவளுக்கு வெட்கம். அவளை விட்டுவிடுங்கள். அடுத்தவள் இருக்கிருளே, அவளைக் கிட்டக் கூப்பிடுங்கள். வருவாள். இது வரையில் அவள் மூவாயிரத்து ஐந்நூற்று அறுபத்தைந்து கல்யாணங்களை முடித்துவைத்திருக்கிருள்! இன்னும் செய்துகொண் டிருக்கிருள். சாரதா சட்டத்துக்கு, அவள் செய்யும் கல்யாணங்களைக் குறுக்கே நின்று தடுக்க அதிகாரம் கிடையாது. அவளைப் பொறுத்தமட்டில் வாழ்க்கை 'நித்ய கல்யாணம் பச்சைத் தோரண' மாகவே இருக்கிறது. அவளுக்குப் பத்தாவது வயசு நடக்கிறது. அவளுக்கப்புறம் பிறந்தவன் பிள்ளை. பிறவியிலேயே சாஸ்திரியாகப் பிறந்திருக்கிருன். தன் பிள்ளை மகா மேதாவி என்பது அவன் அம்மாவின் எண்ணம். நூறு நூருய்ச் சம்பாதித்துத் தாயார் கையில் கொண்டுவந்து கலகலவென்று கொட்டி, மாத்ரு பூஜை செய்வானென்று அந்தப் பைத்தியக்காரி நம்பியிருக்கிருள். அவள் மனக் கோட்டையில் அவன்......'ஹை கமிஷனர் ஆப் போலீஸ்' ஆகலாம்; இல்லாவிட்டால், 'மதருஸ் அண்டு ஸதர்ன் மராட்டா ரெயில்வே கம்பெனி'யில் 'ஜில்லா ட்ராபிக் ஸூபரின்டெண்டு' ஆகலாம். இன்னும், பகவான் தயவிருந்தால் சென்னை மாகாணத்தின் 'போஸ்ட்மாஸ்டர் ஜெனர'லாகக்கூட வரலாம். எது எப்படி யிருந்தாலும் எங்கள் காந்தம் ஒரு விஷயத்தில் மாத்திரம் தீர்மானமாகச் சொல்லுவாள். 'என் பிள்ளை ஜன்மத்துக்கும் பள்ளிக்கூட வாத்தியாராய் மட்டும் போகவே மாட்டான். அவன்

அப்பாவைப்போல் குருவிக் கதையும் காக்காய்க் கதையும் எழுதிக்கொண்டு இருக்கமாட்டான் ' என்று.

'ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? கதைகள் எழுதினுல் என்ன? அவனுடைய அப்பா நல்ல நல்ல கதைகள் எழுதுகிருரே? உங்கள் பிள்ளேயும் அவர்மாதிரி நல்ல கதைகள் எழுதி அவரையும் விடப் புகழ்பெற வேண்டுமென்று உங்களுக்கு ஆசையில்லேயா?' என்று நீங்கள் கேட்பீர்கள்.

'நீங்களும் அப்படிச் சொல்லுகிறீர்களே? போதுமே, கதைகள் எழுதும் அழகு! எதற்குப் பிரயோஜனம்? இதெல்லாம் உப்புக்காகுமா, புளிக்காகுமா? அதிலேயும் இவன் அப்பா எழுதும் கதைகளேப் பற்றிச் சொல்லவே வேண்டாம்! திரும்பத் திரும்ப வீட்டு ராமாயணத்தைத் தானே எழுதுகிருர்? என்ன அதிசயம், இப்படிப்பட்ட கதைகள் எழுதுவது? யார் வேண்டுமாஞலும் எழுது வார்கள். 'நானும்—எங்கள் சுப்பியும்!' என்ருே, 'நானும்—எங்கள் ஜானியும்' என்ருே யார்தான் எழுத மாட்டார்கள்?' என்று அவள் தவருமல் சொல்லுவாள்.

✻

ஆத்மாவினின்று சுதந்தரத்தையும் நியாய புத்தியையும் பிரித்து எடுத்துவிடுகிற மதக் கோட்பாடுகளே, நூல்களே, உருவங்களே, சட்டங்களே, மதங்களே எல்லாவற்றையும் விலக்கி விடுங்கள். சிந்தனே செய்வது ஆபத்து என்கிற அபிப்பிராயத்தை அடியோடு நசுக்குங்கள். ஒரு மனிதன் மற்ெருரு மனிதனுடைய ஆஸ்தியாக இருக்க முடியுமென்ற அந்தக் களங்கம்நிறைந்த கொள்கையை அழித்துப் போடுங்கள். நமது மனத்துக்கு விலங்கு போடும் முயற்சியைக் கோபத்தோடு கண்டிப்போமாக. கடவுள் இல்லேயாஞல் அதற்காக நாம் பணிந்துபோவதோ, பல்லிளிப்பதோ, ஊர்ந்து செல்வதோ கூடாது. கடவுள் உண்டாஞல் இந்த உலகத்தில் அடிமைகளே இருக்கக்கூடாது.

—இங்கர்சால்

போர்த்துக்கீசியர்

துளசி

பாரத பூமியில் சுதந்தரத்தின் அருணோதயம் ஆகியிருக்கின்றது. பாரத மக்களின் அடிமைத் தளைகள் ஒழிந்து, அவர்களும் உலகத்தில் தங்கள் பழைய பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கும் காலம் சமீபித்து விட்டது. இந்தியா ஆங்கில ஆட்சியின் பிடிப்பினின்றும் விடுதலை பெறுவது நிச்சயம் என்று ஏற்பட்டவுடன், இம் மாபெரும் தேசத்தில் சிற்சில இடங்களைப் பிடித்துக்கொண்டு, சுயேச்சாதிகாரம் செலுத்தி வரும் போர்த்துகல், பிரான்ஸ் முதலிய தேசங்களுக்குப் பயம் உண்டாய்விட்டது. பிரான்ஸ் உடனே தன் ஆட்சியின் கீழுள்ள மக்களைச் சீர்ப்படுத்த ஆரம்பித்து, பிரஞ்சு-இந்தியா பிரான்ஸின் குடியேற்ற நாடல்ல; சுதந்தர பிரான்ஸின் சுதந்தரமுடைய ஓர் அங்கம்; பிரஞ்சு-இந்தியர்களும் பிரஞ்சு மக்களைப் போலவே சம சுதந்தரமுடையவர்கள் என்று கோஷிக்கத் தொடங்கிவிட்டது. போர்த்துகல் விஷயம் அப்படியின்றி, அது தன் வசமுள்ள பிரதேசங்களை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொள்வதென்ற தீர்மானத்துடன் நடந்து வருகிறது. உள்நாட்டு மக்களிடையே எழும் விடுதலை உணர்ச்சியையும் போராட்டங்களையும் பேதம், தண்டம் என்னும் உபாயங்களினால் அடக்கப்பார்க்கிறது. முஸ்லிம் சகோதரர்களைக் கிளப்பிவிட முயல்கிறது. ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என்னும் பிரச்னைகளை அங்கேயும் தூண்டிவிட்டு, மக்களை அடிமைத்தனத்திலேயே ஆழ்த்திவைக்கப் பார்க்கிறது. விடுதலைக்குப் போராடும் மக்கள் தலைவர்களைப் படுமோசமாகத் தண்டிக்கிறது.

இந்தியாவின் கிழக்கிலும் மேற்கிலும் கடற்கரையோரமுள்ள சிற்சில இடங்கள் அந்நியருடைய எதேச்

சாதிகாரத்துக்கு உட்பட்டுச் சர்வ சாதாரணமான பிரஜா உரிமைகூட இன்றிக் கொடுங்கோலாட்சி செலுத்தப் படுவது மிகப் பிரசித்தமான விஷயம். போர்த்துக்கீசியர் இந்தியாவில் அதிகாரம் பெற்றது சரித்திரத்தில் தற்செயலாக நிகழ்ந்த சம்பவந்தான். இப்போது இந்தியா சுதந்தரத்தின் வாசற்படியை நெருங்கியிருக்கும் சமயத்தில், கோவாவில் நம் நாட்டு மக்கள் ஸாலாஸர் (Salazar) சுயேச்சாதிகாரத்தின்கீழ், போர்த்துக்கீசிய இந்தியாவின் கவர்னர் ஜெனரலான டாக்டர் போஸா (Dr. Bossa) புரியும் அக்கிரமங்களுக்கு இலக்காகித் துன்புறுவதைக் காண்கிறோம். இப்போது, போர்த்துக்கீசியரின் கொடுமை தாங்காமல் மக்கள் ஒருசமயத்தில் மராட்டியரின் உதவியைக் கோரியபோது, போர்த்துக்கீசியர்கள் ஸால்ஸெட் (Salsette) மாகாணத்தையும், தம் முக்கிய ராணுவஸ்தலமாகிய பாஸீன் (Bassein) கோட்டையையும் எவ்வளவு பலமாகப் பாதுகாத்தும், வீர மராட்டியர்கள் அவர்களுடைய ராணுவச் செருக்கை அடக்கி, அவர்களை எவ்வாறு புறமுதுகிட்டோடச் செய்தனர் என்பது யோசிக்கத் தக்கது.

ஸால்ஸெட்டில் போர்த்துக்கீசிய ஆட்சி, கி.பி. 1534-ம் ஆண்டில் ஏற்பட்டது. வாஸ்கோ-டா-காமா நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியாவுக்கு வழி கண்டு பிடித்து முப்பது வருஷங்கள் ஆவதற்குள்ளாகவே போர்த்துக்கீசிய மரக் கலங்கள் இந்தியாவின் மேற்குக் கரையோரமுள்ள முக்கியத் துறைமுகங்களுக் கெல்லாம் வரத்தொடங்கின. போர்த்துக்கீசியர் தங்களுக்குப் போட்டியாகவிருந்த மூர்களின் வியாபாரத்தை நாசமாக்கிக் கடலோர மெங்கும் தங்கள் தொழிற்சாலைகளை ஸ்தாபித்துக்கொண்டனர். கோவாவைத் தலைநகரமாக வைத்துக்கொண்டு காம்பே வளைகுடாவின் துறைமுகங்

களைத் தங்கள் கப்பற் படைகளைக் கொண்டு அழித்தனர். 1532-ம் ஆண்டில் நூனே-டா-குன்ஹா (Nuno-da-Cunha) என்ற போர்த்துக்கீசிய தளபதியானவன் காம்பே ஸுல்தானுடைய 12000 வீரர்களுடைய பாதுகாப்பைப் பெற்ற பாஸீன் கோட்டையைத் தாக்கி, அதன் மதில்களை இடித்து வீழ்த்தி அதைக் கைப்பற்றினன். குஜராத்தின் ஸுல்தானன பஹாதுர்ஷா வசமிருந்த தாமன் (Daman) மாகாணம் ஜயிக்கப்பட்டது. பஹாதுர்ஷா போர்த்துகேசியருக்குப் பணிந்து பாஸீனையும் அதைச் சேர்ந்த பிரதேசங்களையும் போர்த்துகேசியருக்கு விட்டுக்கொடுத்ததுமன்றிக் காம்பேயிலிருந்து செங்கடலை நோக்கிச் செல்லும் குஜராத்தின் கப்பல்களெல்லாம் பாஸீனில் தங்கிப் போர்த்துக்கீசியரின் அனுமதிச் சீட்டுப் பெற்றுப்போவதற்கும், தான் துருக்கியருடன் கூட்டுறவு வைத்துக்கொள்ளா திருப்பதற்கும் இணங்கினன். நாளடைவில் தாமன், பாஸீன் முதலிய விடங்களிலுள்ள கோட்டைகள் பலப்படுத்தப்பட்டன. பதினேழாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து போர்த்துகேசியரின் அதிகாரம் மங்கத் தொடங்கியது. அவர்களுடைய மமதையை அடக்குவதற்குச் சிவாஜி மன்னன் தோன்றினன். சிவாஜி உயிருட னிருந்த வரையில் போர்த்துக்கீசியர் அந்த மஹாவீரன் எந்தச் சமயத்தில் தங்கள்மீது படையெடுத்துவிடுவானே என்று அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்தனர். சிவாஜியின் மைந்தனன சாம்பாஜியும் அவர்களுடன் இடைவிடாமல் போர்தொடுத்து வந்தார். விரைவில் மராட்டியருடைய கடுமையான எதிர்ப்புக்குள்ளாக வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்த போர்த்துக்கீசியர் தங்கள் கோட்டைக் கொத்தளங்களை உறுதியாக்கிக் கொண்டதுடன், ஒவ்வொரு கிராமத்திலும் எதிரிகள் வருவதை அறிவதற்கான கோபுரங்களை நிருமித்துக்கொண்டனர்.

போர்த்துகேசியரின் ராணுவப் பாதுகாப்புகள் சிறந்தவையா யிருந்தன ; ஆனால், அவர்களுடைய போர் வீரர்கள் திறமை குறைந்தவர்கள். போர்த்துக்கீசியர் க்ஷீணமுற்றதற்குப் பல காரணங்கள் இருந்தன. "அவர்களுடைய சமூக வாழ்க்கை சீர்கெட் டிருந்தது ; ஒழுக்க முறைகள் தளர்வுற் றிருந்தன. விபசாரம் நாகரீகமான ஒரு தீயகுணம் எனக் கருதப்பட்டது. பொதுஜன நிர்வாக முறையும் கெட்டிருந்தது. நியாயம், விற்கவும் வாங்கவும் கூடிய ஒரு பொருளா யிருந்தது. ராஜாங்க உத்தியோகங்கள் விலைக்கு விற்கப்பட்டன. சுதேசிகள் போர் உணர்ச்சியும் ஆண்மையும் குன்றிச் சோம்பேறித்தனமே மேலிட்டிருந்தனர்" என்று ஒரு சரித்திர ஆசிரியர் எழுதுகிறார்.

முதலி லெல்லாம் அவர்களுடைய மத உணர்ச்சி அவர்களுக்கு ஆவேசத்தையும் தீரத்தையும் அளித்துவந்தது. பிற்காலங்களிலோ அது விக்ரஹ ஆராதனை செய்பவர்களை இரக்கமின்றிக் கொள்ளையடிக்கவும், ஏமாற்றவும், அடிமைப்படுத்தவும் தூண்டும் மதவெறியாக மாறியது. ஆசியாவில் அதிகாரம் செலுத்துவதற்குத் தாங்கள் போப் பாண்டவரின் உத்தரவைப் பெற்றிருப்பதாகப் பெருமை பேசிக்கொண்டதுடன், மக்களுடைய சொத்து, சுதந்தரங்களை அபகரிக்கக்கூடத் தங்களுக்கு உரிமையிருப்பதாயெண்ணி இறுமாந்திருந்தனர். ஒவ்வொரு நாட்டுக் கப்பலும் தமக்குச் சுங்கம் செலுத்தச் செய்தனர் ; சுதேச சிற்றரசர்களை அவமதித்தனர் ; கடற்கரை யோரமுள்ள சுதேசிகளுக் கெல்லாம் அச்சம் விளைவித்து வந்தனர்.

அவர்கள் ஒருவரை யொருவர் நடத்தும் முறையும் இதைவிட மேலாயிருக்கவில்லை. ஒற்றுமையின்றிப் பல கட்சிகளாய்ப் பிரிந்துபோயிருந்தனர். அவர்களிடையே பேராசையும், கொடுமையும், விபசாரமும் தாண்டவ

மாடின. தன்னலமே பெரிதெனக் கருதாத போர்த்துக்கீசியனே அங்கே இல்லை.

1720-ம் ஆண்டில் பாஜிராவ் ஷாஹு மஹாராஜாவின் பேஷ்வா ஆனான். அதே ஆண்டில்தான் போர்த்துக்கீசியரால் துன்புறுத்தப்பட்ட மக்கள் தங்களை மீட்கும்படி மதத்தின் பேரால் பேஷ்வாவை வேண்டிக்கொண்டனர். ஆனால், போர்த்துக்கீசியரை எதிர்க்கப் போதிய பலம் அப்போது தனக்கிருப்பதாக பேஷ்வா நினைக்கவில்லை. 1720-லிருந்து 1731 வரையில் மராட்டியர் போர்த்துக்கீசியருடைய எல்லைப்புறப் பாதுகாப்புக்களைத் தாக்கி அவற்றைப் பலஹீனப்படுத்துவதிலேயே முனைந்திருந்தனர்.

1732-ம் ஆண்டில் கோன்ட் - டி - ஸான்டோமில் (Conde de Sandomil) இந்தியாவில் போர்த்துக்கீசிய ராஜ்யங்களுக்கு வைஸிராயாக நியமிக்கப்பட்டான். அவன் தன் ராஜ்யத்தின் நிர்வாகத்தையும் ராணுவப் பாதுகாப்புக்களையும் எதிரிகளால் அசைக்கமுடியாதபடி பலப்படுத்துவதற்கான சீர்திருத்தங்களைச் செய்யலானான். ஸால்ஸெட் தீவுக்கு லூயி பாடெலோ (Louis Botelho) என்னும் வீரனைத் தளபதியாக்கினான். அத் தீவின் பாதுகாப்புக்கான ராணுவச் செலவின் பொருட்டு ஜனங்களிடமிருந்து பளுவான வரிகள் வசூலிக்கப்பட்டன. ராணுவத்திற்குப் பணமும், ஆள் பலமும் பெறவேண்டி, போர்த்துக்கீசியர் மக்களைப் பலவிதத்தில் துன்புறுத்தினர். மக்கள் துன்பம் தாங்காமல் மராட்டியரை உதவிக்கு அழைத்தனர்.

ஸால்ஸெட் தீவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் முற்றுப் பெறுமுன்பே மராட்டியர் அத் தீவை ஆக்கிரமிக்கத் தீர்மானித்தனர். பேஷ்வாவின் சகோதரனும், சிறந்த வீரனும், அரசியல் அறிஞனுமான சிம்ணாஜி அப்பாவிடம் ஸால்ஸெட் முற்றுகையின் தலைமை ஒப்புவிக்கப்பட்டது. மராட்டிய சேனைகளின் பராக்கிரமத்துக்குமுன் நிற்கமுடி

யாமல், போர்த்துக்கீசிய கவர்னர் தோற்று ஓடி விட்டான். அத் தீவு மராட்டியர் வசமாயிற்று.

இந்தத் தோல்வியினல் போர்த்துக்கீசியரின் பலம் அழிந்துவிடவில்லை. பாஸீன் அவர்களுக்கு ஓர் அரணுயிருந்தது. அதன் கோட்டைகள் பலமிக்கவை. மதிற் சுவர்கள் முப்பதிலிருந்து நாற்பத்தைந்து அடி உயரம் வரையில் இருந்தன. இவற்றை யெல்லாம் அழித்துவிட்டாலன்றி வெற்றி கிடைக்கா தென்று மராட்டியத் தளகர்த்தன் அறிந்தான். பாஸீன் அதிகாரியான டி மெகாலிஸ் (De Megalhaes) கோவாவுக்கும் பாஸீனுக்குமுள்ள போக்கு வரவுச் சாதனங்கள் சரியாயிருக்கும் வரையில் தன் பத்திரத்துக்குக் குறைவில்லை யென்றிருந்தான். தனக்கு வேண்டிய யுத்த சாமக்ரியைகள் முதலானவற்றைக் கோவாவிலிருந்து பெறக்கூடு மென்ற தைரியத்துடனிருந்தான். அதுவுமன்றி, ஸால்ஸெட் தோல்வியினல் பயமடைந்த வைஸிராய் அன்டோனியா கார்டிம் (Antonio Cardim) என்ற வீரனை பாஸீன் சேனைத்தலைவனக நியமித்தனுப்பி இன்னும் தன்னுலியன்ற உதவியை யெல்லாம் செய்தான்.

கோவாவுக்கும் பாஸீனுக்குமுள்ள போக்கு வரவுச் சாதனங்களை அடியோடழித்துத் தாமன் ஜில்லாவிலிருந்து பாஸீனுக்குச் சாமான்கள் போகமுடியாமற் செய்தாலன்றிப் பாஸீனைப் பணியச் செய்ய முடியாதென்று மராட்டியர் கண்டு முதலில் மாஹிம் (Mahim) கோட்டையைத் தாக்கினர். ஆனல், அவர்கள் அம் முறை வெற்றிபெருமல் திரும்ப நேரிட்டது.

போர்த்துக்கீசியரை வெல்வதற்கு இன்னும் பலமிக்க சைனியமும் புதிய போர்முறைகளும் தேவை யென்று மராட்டியர் தெரிந்துகொண்டனர். இதற்குள் நிஜாமுடன் செய்த யுத்தத்தில் பேஷ்வா ஜயித்துவிட்டபடியால், 12000

குதிரை வீரரையும், காலாட்களையும் பாஸீன் முற்றுகைக்கு ஒத்தாசையாக அனுப்பினான். சிம்னாஜி அப்பா புதுவித மான யுத்த தந்திரத்தை மேற்கொண்டான். கோட்டை களைத் தாக்காமல், பாஸீனுக்குள் எந்தச் சாமான்களும் போகமுடியாதபடி தந்திரமான உபாயங்களைக் கைக் கொண்டான். போர்த்துக்கீசியர் களைத்துவிட்டனர். எதிரிகளோ தாமனில் பிரவேசித்துவிட்டனர். கோவா வுடன் தொடர்பும் அற்றுப்போய்விட்டது. சாமான் களோ கிடைக்கவில்லை. இந்த நெருக்கடியில் தளபதி கார்டிம் ராஜினாமா செய்துவிட்டான். அவனுக்குப் பதிலாக மாஹிம் நகரைக் காத்த தீரனான டி மெல்லோ (De Mello) அப் பதவியை ஏற்றான்.

மராட்டியரைத் தானாவிலிருந்தும் ஸால்ஸெட்டிலிருந் தும் வெளியேற்றுவிடில் பாஸீனுக்கு ஆபத்து என்பது டி மெல்லோவுக்கு விளங்கியது. 1738-ம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தினான்காம் தேதியன்று பாஸீனை விட்டுக் கிளம்பிப் போர்த்துகல்லிலிருந்து வந்திறங்கின சேனை களின் உதவியுடன், பம்பாய்த் தீவைச் சுற்றிக்கொண்டு தானாவை அடைந்தான். அங்கே பகைவரின் குண்டு ஒன்று பாய்ந்து வந்து அவனைக் கொன்றுவிட்டது. தலைவன் போனபிறகு போர்த்துக்கீசியப் படைகள் சித றுண்டுத் திரும்பி ஓடிவிட்டன.

சிம்னாஜி அப்பா பாஸீனைத் தாக்குவதற்குமுன் மற்றக் கோட்டைகளையெல்லாம் தகர்த்துப் பாஸீனைப் போர்த்துக் கீசியருக்குச் சொந்தமான மற்றப் பிரதேசங்களினின்றும் முற்றிலும் வேருக்கினான். மராட்டியருடைய இரண்டு வருஷம் நீடித்த ஆக்கிரமிப்பு, போர்த்துக்கீசியருடைய யுத்த சேமிப்புக்கள், உத்சாகம் முதலியவற்றை உறிஞ்சி விட்டது. கோவாவுடன் தொடர்பு அற்றுவிட்டதால் அங்கிருந்து சகாயம் கிடைக்க வழியில்லாமற் போயிற்று.

கோவாவும் ஆபத்தான நிலைமையில் இருந்தது. அவர்கள் உதவி கோரக் கூடியவர்கள் ஒருவருமே இல்லை. ஆங்கிலேயர்களும் அவர்களும் எப்போதுமே நேசபாவமாக இருந்ததில்லை. ஆகையால், ஆங்கிலேயர்கள் அவர்களைப் பற்றிக் கவலையே படவில்லை.

1739-ம் வருஷம் பிப்ரவரி மாசம் 7-ந் தேதி சிம்னஜி அப்பா பாஸீன் கோட்டையை முற்றுகை யிட்டான். மே மாதம் 2-ந் தேதி கோட்டை மதில்கள் தகர்க்கப்பட்டு மாராட்டியர் கோட்டைக்குள் புகுந்தனர். 5-ந் தேதி போர்த்துக்கீசியர் பணிந்துவிட்டனர். அவர்கள் பாஸீனை விட்டு வெளியேறுவதற்கு அவகாசம் அளிக்கப்பட்டது. தீரனான சிம்னஜி பகைவருக்கு மிகவும் கௌரவமான நிபந்தனைகளை விதித்தான்.

இவையெல்லாம் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடந்தவை. போர்த்துக்கீசியர் தம் செயலால் அடைந்த பலன், வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறது. சரித்திரத்தின் நிகழ்ச்சிகள் எதிரொலி செய்தவண்ணம் இருக்கின்றன. ஆயினும், டாக்டர் போஸா தன் முன்னோர்களின் கொள்கைகளால் விளைந்த பலாபலன்களைச் சிந்தித்துப் பார்த்து, அவற்றின் படிப்பினையை ஏற்று நடப்பார் என்று எதிர்பார்ப்பது வீணாகும்.

✲

குழந்தைகள் தங்களுடைய வாழ்க்கையைப் பெரியவர்களின் சேர்க்கை இல்லாமல் ஆரம்பிப்பதில்லை. ஆதலால், பெரியவர்கள் குழந்தைகளை அதிகமாகக் கண்காணிப்பது, நடைமுறையில் சாத்தியமில்லாத புத்தி மதிகளைக் கூறுவது, அடிப்பது முதலியவற்றைக் கைவிட வேண்டும். இவைகள் அவர்களுடைய வாழ்வில் இடையூறு உண்டுபண்ணுவ தல்லாமல் அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாய் இருக்கின்றன.

— மாண்டிசோரி

பாசம்

எம். எஸ். கமலா

கூடத்திற்கு அடுத்த அறையில் விளக்கு அருகில் அமர்ந்து முரளி படித்துக்கொண்டிருந்தான். ரேழியில் செருப்பின் ஓசைகேட்டது. செருப்புச் சப்தத்தைக் கேட்டு அதிர்ந்து விழித்துப் படிக்கத் தொடங்கியதால் முதல் மூன்று வரியை விட்டுப் படிக்கத் தொடங்கினுன் முரளி.

ராஜகோபாலன் மனத்தில் தன் பிள்ளை சிரத்தையாகப் படிக்காததால் கோபம் பொங்கியது. அவன் அருகில் வர வர முரளியின் குரலும் உச்ச ஸ்தாயியில் ஏறிக்கொண்டு பதங்களை உச்சரித்தது. பதங்களை வேகமாய்ச் சொல்லப் போய்ச் சிலவற்றை விழுங்கியும் மற்றும் சிலவற்றை விட்டும் படித்துக்கொண் டிருந்தான் முரளி. தந்தையின் முகத்தைப் பார்க்கப் பிரயத்தனப்பட்டுச் சில வாக்கியங்களை வழியனுப்ப வேண்டியதாகிவிட்டது.

ராஜகோபாலன் தன்பிள்ளையின் பிழைப் புராணத்தைக் கேட்டுப் பொறுமையை இழந்தான். ஷர்டைக் கூடக் கழட்டாமல் பிள்ளையின் முன் அமர்ந்தான். முரளியின்வாய் அடைத்துவிட்டது. கண்கள்மாத்திரம் புஸ்தகத்திலேயே பதிந்துவிட்டன.

கண்களை உருட்டியபடியே, "ஏண்டா கிறுக்கிவிட்டே" என்ருன் ராஜகோபாலன்.

பையன் ஏதும் பதில் சொல்லவில்லை. அதைப் பார்த்த தந்தை, பையன் காதைப்பிடித்து இழுத்து கிமிட்டியபடியே, "படிப்பதற் கென்னடா?" என்ருன்.

குழந்தை முரளிக்குத் துக்கம் பொங்கி வந்தது. வலது கையில் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு, இடது கை மணிக் கட்டால் கண்களைக் கசக்கியபடியே, தேம்பித் தேம்பி அழுதான்.

"நித்தியமும் இது ஒரு புராணமாகிவிட்டது. நான் வந்து படி என்கிறது. நீ அழுவது, திருட்டுப் பயலே!" என்று படீரென்று கன்னத்தில் ஓர் அறைவிட்டான்.

முரளி புஸ்தகத்தைக் கீழே போட்டுவிட்டு, கைகளை உதறிக் கொண்டு அழுதான். "சொல்லச் சொல்ல அழு கிருயா? வாயை மூடுகிருயா இல்லையா?" என்று ராஜ கோபாலன் கையை மேலுக்கு ஓங்கினுன். பயத்தினுல் அழுகையை நிறுத்தப் பிரயத்தனப்பட்டான் முரளி. ஆனுல், உள்ளுக்குள்ளே குமுறிக் கொண்டுதான் இருந் தது.

"என் இன்னும் விழிக்கிறே! எடு புஸ்தகத்தை!!"

முரளி புஸ்தகத்தைப் பயத்துடன் நடுங்கியபடியே கையில் எடுத்தான்.

முரளி படிக்கத் தொடங்கினுன். விக்கலும் விம்மலு மாய்ப் பதங்கள் வெளிவந்தன.

"இந்த வேலையை முன்பே செய்திருந்தால்" என்ருன்.

பிள்ளையைத் தானுகக் கண்டு படிக்க வைத்தான் என்ற பெருமையுடன் தலை நிமிர்ந்தான் ராஜகோபாலன் "ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டீர்கள். எழுந்திருங்கள் சாப்பிட..." என்ருள், பொறுமையுடன் சமையல் அறை வாசலில் நின்று கொண்டு கணவனையே பார்த்துக் கொண் டிருந்த அவன் மனைவி ராதை.

"உனக்கேன் அவ்வளவு அகங்காரம்? உன்னுலேயே அவன் கெட்டுப் போகிருன். உன் பிள்ளை படிக்க வேண்டா மென்ருல்..." என்று விடுவிடென்று எழுந்து புறக்கடைப் பக்கம் சென்ருன்.

விடிந்துவிட்டது. பறவைகளின் ஆனந்த நாதத்துடன் விழிப்புக் கொண்ட முரளி முதல் நாள் இரவு தான் பட்ட அடியை மறந்து கண்ணை மூடிக்கொண்டு கட கட வென்று படித்துக்கொண் டிருந்தான்.

ராஜகோபாலன் தன் ஆபீஸ் வேலைகளை முடித்துக் கொண்டு எழுந்திருக்கும்போது யாரோ நண்பர்கள் வந்து விட்டனர். அவர்களுடன் பேசிக்கொண் டிருந்ததில் பொழுது போனது தெரியவில்லை. இரண்டு வாய் சாப்பிட்டுவிட்டுப் புறக்கடையில் கையலம்ப வந்தான். அடுத்த வீட்டு அம்பிப் பயலும், முரளியும் கொய்யாமரத் தருகில் நின்றிருந்தனர்.

"திருட்டு நாய்களா? கொய்யாக்காய் உடம்பிற்காகு மாடா!" என்று அதட்டினான்.

முரளி தந்தையின் குரலைக் கேட்டதும் ஓடத் தலைப் பட்டான். அப்படியே கால் சறுக்கி விழுந்து விட்டான்.

"இனிமேல் மரம் ஏறுவாயா? வாயைத் திறந்து பதில் சொல்லேண்டா!" என்று முதுகில் இரண்டு அறை கொடுத்துக் காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே வந்தான்.

"இனி ஏறமாட்டேன். அம்மா! ஊம்.........ஊம்" என்று அழுதுகொண்டு முரளி தன் தந்தை இழுத்த இழுப்பிற் கெல்லாம் இசைந்து வந்தான்.

"உங்கம்மாளாலேதான் நீ இப்படிக் கெட்டுக் குட்டிச் சுவராப் போகிருய். உன்னைச் சொல்வதில் குற்ற மில்லை. அவள் இருக்காளே...என்று முணு முணுத்துக் கொண்டு, அவசர அவசரமாய் ஆபீசுக்குப் புறப்பட் டுச் சென்ருன்.

தந்தை ஆபீசுக்குச் சென்றதும் முரளி தன் துக்கம் தீர வாய் விட்டு அழுதான். தாய் எத்தனை நல்ல வார்த்தை கள் சொன்னாலும் கேட்கவில்லை. தாய் ஆறுதலான

வார்த்தைகளைச் சொல்லச் சொல்ல அவனுக்குத் துக்கம் பொங்கிப் பொங்கி வந்தது. ராதையும் ஆனமட்டும் சமாதானப் படுத்திப் பார்த்தாள். முடியவில்லை.மணி ஒன்றும் அடித்து விட்டது. யாரோ உள்ளே வருவது தெரிந்தது. தலை நிமிர்ந்து பார்த்தாள். அவள் அண்ணன் அனந்த கிருஷ்ணன்.

மாமனைக் கண்டதும் முரளிக்குத் துக்கம் பீறிட்டு வந்தது. அதுவரை அழுது அழுது வடிந்திருந்த கண்ணீர் மறுபடியும் புரள ஆரம்பித்தது.

"ஏண்டா முரளி!" என்று மருமகனின் முதுகை வருடினான் மாமன். அவ்வளவுதான்; மடை திறந்து கொண்டது.

"வா அண்ணா! வீட்டில் எல்லோரும் சௌக்கியமா?" என்று கேட்டாள் ராதை.

"எல்லோரும் சௌக்கியம்தான். இவன் முகம் ஏன் இப்படி வீங்கியிருக்கிறது ஏன் அழுகிறான்?"

"ஏன் அழுகிறான? அவன் பாவம்! என் கர்மம்! வயசு ஆக ஆக உங்க அத்திம்பேருக்குப் புத்தியே கெட்டுப் போச்சு. அவன் கன்னத்தைப்பார் நேத்தி ராத்திரியிலிருந்து இப்படியே அழுதுகொண் டிருக்கிறான். நீ எழுந்திரு இலைபோடறேன். உன்சாக்கால் அவனும் எழுந்திருக்கட்டும். என்றைக்கும் இருக்கிறதுதான் இந்த ரோதனை" என்று வெறுப்புடன் சொல்லிக்கொண்டே அடுக்களைக்குள் சென்றாள் ராதை.

ஒன்பது வயசு நிரம்பிய மருமகனை அப்படியே சிறு குழந்தையைப்போல் எடுத்தணைத்தபடியே "நீ போய் இலை போடு. நாங்கள் இருவரும்தான் சாப்பிடப் போகிறோம்" என்று சொல்லிக்கொண்டே குழாயடிக்குச் சென்றான். மாமனின் அன்பணைப்பில் துக்கம் தடைக்கட்டி நின்று விட்டது.

இருவரும் சாப்பிட்டு வந்து கட்டிலில் சாய்ந்தனர். முரளி சோர்ந்து தூங்கிவிட்டான். அனந்தகிருஷ்ணன் யோசனையில் ஆழ்ந்தான். ராதை தன் வேலைகளை முடித்துக்கொண்டு வந்து அமர்ந்தாள்.

"முரளி தூங்கிவிட்டானா அண்ணா?" என்று வெகு அன்புடன் கேட்டாள் ராதை.

"அழுது அழுது அலண்டிருக்கிறான். இப்பத்தான் கண்ணை மூடினான். பா...வ...ம்."

"என்ன பாவமோ அண்ணா! எனக்கு இந்தச் சம்சாரம் வரவர வெறுத்துப் போச்சு. இங்கே பெரிய தலை ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. இவரோ நாளுக்கு நாள் இப்படியாகிறார்..."

"நானும் அவரைப் பற்றியேதான் யோசித்துக் கொண் டிருக்கிறேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. குழந்தை மடசாம்பிராணியா? இல்லை. அவனுக்கு இருக்கும் சமர்த்தும் சாமர்த்தியமும் அவருக்கு இருக்கிறதோ இல்லையோ?"

"நான் குறைப்படுவதும் இதற்குத்தான், அண்ணா! அப்பான்னு குழந்தைகளுக்குப் பயம் இருக்க வேண்டியதுதான். ஆனாலும், இம்மாதிரி பயத்தை நான் பார்த்ததே இல்லை. அவர் குரலைக் கேட்டாலே பெரிய புலியைப் பார்த்தாப் போலேதான்."

"அப்படிப் பயப்பட்டால் அவர்களிடம் என்ன வேலையை வாங்கக் கூடும்?"

"அவர் இல்லாதபோது நன்றாய்ப் படிக்கிறான். ஒரு தப்பு இல்லாமல் அன்றாடம் பாடத்தை வாத்தியாருக்கு எழுதிக் காண்பித்து விடுகிறான். ஆனால், இவர் வந்து அருகில் அமர்ந்தால் போதும். அவன் வாயிலிருந்து வார்த்தை கிளம்பாது. கொன்று தீர்த்து விடுகிறார். இதுதான் அன்றைய பாடம். நாள்தோறும் படும்கஷ்டத்தைப்

பார்த்தால்......'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அனந்தகிருஷ்ணன் தங்கையின் கசிந்த கண்களைக் கண்டு கலங்கி விட்டான்.

''நீதான் சொல் அண்ணு! நாள் முழுவதும் புஸ்தகமும் கையுமாய் உட்காரச் சொன்னால். நம் குழந்தை யாச்சேன்னு அருகில் அழைத்து ஒரு அன்பான வார்த்தை! ஒரு விளையாட்டுச் சாமான் வாங்கிக் கொடுக்கவோ, வெளியில் அழைத்துச் செல்வதோ... இந்த வீட்டில் குழந்தை பிறக்காமல் இருந்திருந்தால் நன்றா யிருந்திருக்கும்'' என்றாள் சலிப்புடன்.

''ஒரு பக்கம் பயமும் இருக்க வேண்டும். ஒரு பக்கம் செல்லமும் இருக்க வேண்டும். எது அதிகமானாலும் கஷ்டம்தான்...''

''அதிகமோ? பின்னும் அதிகமோ? அவர் அடிக்கும் அடிக்கு என் நெஞ்சு உடைந்து போகிறது. அடுத்த வீட்டுக்குப் போகப்படாது. வீட்டிலே சுத்தி வரப்படாது. விடிந்தால் படுக்கும் மட்டும் புஸ்தகமும் கையுமாய் உட்கார்ந்திருக்க வேண்டும். இந்தச் சின்ன வயசில் எந்த மஹானுபாவர் இப்படிப் படித்தாரோ தெரியாது?'' என்று அலுத்துக் கொண்டாள்.

''ரொம்ப நன்னா இருக்கிறது. உனக்கு இந்த ஒரு விஷயத்தில்...அத்திம்பேரை......திருப்ப முடியாவிட்டால் ......''என்றான் தன் வெறுப்பை முழுவதும் காண்பித்துக் கொண்டு.

''நான் அப்படித் திருப்பச் சக்தியுள்ளவளானால் ....'' என்று சொல்லிக்கொண்டே எழுந்து சென்றாள். அதே சமயம் ''மாமா'' என்று தூக்கிப் போட்டபடி அழுதபடியே கண்களைத் திறந்து பார்த்தான் முரளி.

"என்டாப்பா! அத்தனை பயம்!! இதோ இருக்கேனே!!!" என்று முதுகை வருடினான்.

* * * *

நான்கு வருஷத்திற்கு முன் தான் யுத்த சேவையி லீடுபட்டு மலேயா நாட்டில் பிடிபடுவதற்கு முன் பார்த்துச் சென்ற மருமானை, இன்று பயத்தின் உருவாய்ப் பார்க்கும் போது ஒரு புறம் நகைப்பும் மற்ரொரு புறம் கோபமும் வந்தன. ஆனால், அழகிய அந்த எட்டு வயசு நிரம்பிய சிறு வனின் முகத்தில் ரோஜா இதழ்களைப் போன்ற மிருதுத் தன்மையும், கவர்ச்சியும் இருந்தன.

மாலை ஐந்துமணிக்கு முரளி அனந்தகிருஷ்ணனின் கையைப் பிடித்துக் கொண்டு கடைத்தெருவில் நடந்து கொண் டிருக்கிறான். அவன் முகத்தில் என்றுமில்லா ஆனந்தம் பொங்கிக் கொண்டிருந்தது. நடையில் பயத்தின் நடுக்கத்திற்கு பதில் உற்சாகத்தின் ஓட்டம் குதித்தது. அவன் கையில் ஒரு பந்து. அதன் மேலேயே அவன் கண்கள் பதிந்திருந்தன.

"இந்த மோட்டார் அடுத்த வீட்டு அம்பியிடம் கூட இருக்கு மாமா! எனக்குத்தான்......" என்னும்போதே கடைக்காரனிடம் விலைபேசி ஒரு விமானம், மோட்டார், ஒரு சிறிய விளையாட்டு மைதானம், அதில் நிற்க வைக்க இரண்டு சிப்பாய்கள் இத்தனையையும் வாங்கிவிட்டான் அனந்தகிருஷ்ணன். அவைகளை எல்லாம் வைத்துக் கட்டிய அட்டைப் பெட்டிகளைச் சுமக்கக் கூடாமல் சுமந்துகொண்டு நடந்தான் முரளி.

"முரளி! சினிமாவுக்குப் போய்விட்டு வீட்டுக்குப் போகலாம்" என்றதும் அவன் மனத்தில் அப்பா வீட்டுக் குப் போனதும் வைதால் என்று தோன்றியது. "வேண் டாம் மாமா! அப்பா அடிப்பா! ஆத்துக்குப் போக லாம்!" என்ருன் நடுங்கிய குரலில். அவன் முகத்திற்குமுன்

தந்தையின் பயங்கர உருவம் தாண்டவமாடியது. ஆனந்தத்தில் மிதந்துகொண் டிருந்த அவன் முகம் பிணத்திற்கொப்பாய்க் கறுத்தது. அனந்தகிருஷ்ணன் பரிதாபத்துடன் "முரளி நான் இருக்கேன். உங்கப்பா ஒண்ணும் சொல்லாமல் பார்த்துக்கறேன்" என்று அன்புடன் அவனை அழைத்துக் கொண்டு கொட்டகைக்குள் சென்றான். அன்று திரையிடப்பட்டது 'கிருஷ்ணலீலா' படம். அதைப் பார்த்த முரளியின் மனத்தில் தோன்றியது: இத்தனை துஷ்டத்தனம் செய்யும் கண்ணனை எல்லோரும் அன்புடன் அணைத்து முத்த மிடுகின்றனர். நம் அப்பா மாத்திரம் ஏன் நாம் எதையும் செய்யாமல் இருக்கும்போதே அடிக்கிறார் என்று யோசித்துக்கொண்டே தூங்கிவிட்டான். காலையில் அடிபட்டது, மாலையில் நடந்தது, மனத்தில் கவலையற்ற உற்சாகம் இத்தனையும் சேர்ந்து அவனைத் தூக்கத்தில் ஆழ்த்தினன்.

* * *

இரவு ஏழுமணிக்கே வீட்டுக்குவந்த ராஜகோபாலன் முரளி வீட்டி லில்லாததைக் கண்டதும் அகங்காரத்துடன் கூண்டிலடைபட்ட புலியைப்போல் வராந்தாவில் இப்புறமும் அப்புறமும் உலாவிக்கொண் டிருந்தான். சமையல்றையிலிருந்த ராதைக்கு உள்ளுக்குள் சிரிப்பு வந்தது. இன்று ஒருநாளாவது முரளி தந்தையின் அடிக்கும், வசவுச் சொற்களுக்கும் தப்பித்துக் கொண்டானென்ற பெருமை அந்த உதட்டுக்கிடையில் அவ்வப்பொழுது தாண்டவ மாடியது.

ராஜகோபாலன் அடிக்கொருமுறை அனல் போன்ற தன் கண்களை அடுக்களைப்பக்கம் திருப்பி, "உன்னுல்தான் அவன்கெட்டுப் போகிறுன். உன் புத்தி ஏன்தான் இப்படி மழுங்கி விட்டதோ? விளக்கு வைத்ததும் அவன் படிக்க வேண்டாமா?" என்று முணுமுணுத்தான். அப்பொழுதும் அவள் வாயை மூடிக்கொண்டு தன் வேலையி

வாழ்ந்திருந்தாள். அதே சமயம் தெருவில் ஜட்கா ஜல் ஜல் என்று வந்து நின்றது. தூங்கும் முரளியைத் தட்டி எழுப்பி, அவன் பொம்மைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு, சில பழ வகைகளுடன் அனந்தகிருஷ்ணன் வண்டியை விட்டு இறங்கினான். தந்தையின் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்தவாறே தடுமாறியபடி உள்ளே நுழைந்தான், முரளி,

வந்த மைத்துனனைக்கூட அழைக்காமல் "ஏண்டா! திருட்டு நாயே! எங்கே சுத்தத் தொலைந்தே! படிக்க வேண்டாமா? இன்னிக்கு என்ன படிச்சேடா!" என்று முரளியை நோக்கி நடந்தான்.

"அய்யோ! மாமா!!" என்று முரளி மாமனின் பின் மறைந்து நின்று கொண்டான்.

"அவன் எங்கே போனான்? நான்தானே கடைத் தெரு மட்டும் அழைத்துப் போய் வந்தேன்" என்று மருமானை அப்படியே கட்டிக்கொண்டான்.

"உங்க மாமா வந்துவிட்டால் படிக்க வேண்டாமா? அவன் பின்னாலே ஒளிந்துகொண்டால்........." என்று முரளியை இடது கையால் இழுத்து, வலது கையால் அகங்காரம் தீர நான்கு அறை விட்டான். அனந்தகிருஷ்ணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஒரு சிறு பையனுக்குத் தான் அளித்த வாக்குறுதியைக்கூட நிறைவேற்றத் தனக்குச் சக்தி இல்லாமல் போனதை நினைத்துப் பார்த்தான். ராதையோ, கதவுடன் கதவாய் ஒட்டிக்கொண்டு கற்சிலை போல் நின்றிருந்தாள்.

"அப்பா! இனிமேல் போகவில்லை. அம்மா! மாமா!!" என்றலறிய முரளியின் குரல் திடீரென்று நின்றது. தடாரென்ற ஓசை கேட்டது. அதுவும் ராஜகோபாலனின் கைங்கரியம் என்று நினைத்தனர் அண்ணனும் தங்கையும். ஆனால், உடனே "முரளி! டேய் திருட்டு நாயே!" என்ற

ராஜகோபாலனின் குரல் அவர்களைச் சுயநிலைக்குக் கொண்டு வந்தது.

* * *

இரண்டு இரவுகள் இளித்துவிட்டு இருளுடன் கரைந்தன. மூன்றாவது இரவும் வந்துவிட்டது. முரளி கண்களைத் திறக்காமல் படுத்திருந்தான். தலைமாட்டில் அனந்த கிருஷ்ணன் 'ஐஸ் பேக்' குடன் அமர்ந்திருந்தான். ராதையோ, கட்டிலருகில் அமர்ந்து கண்ணீர் வடித்தபடியிருந்தாள். அவ்வப்பொழுது பரிதாபத்துடன் அண்ணன் முகத்தைப் பார்ப்பாள்.

அனந்தகிருஷ்ணன் பார்வையிலோ, "ராதை! நான் நான்கு வருடங்கள் கடல் கடந்து கிடந்தவன் உன் வீடு தேடி வந்து உன் பிள்ளைக்கு எமனாகவா வேண்டும்?'' என்ற அர்த்தம் தோன்றியது.

ராஜகோபாலன் முரளியின் கால்மாட்டில் ஒரு நாற்காலியிலமர்ந்தவன் இரண்டு நாட்களாய் ஆபீசுக்கும் போகவில்லை. அவன் மனத்தடியில் எங்கோ அடங்கிக் கிடந்த பாசம் புயல் கொண்டெழுந்தது. அவன் அகங்காரக் கடலை அலைக்கழித்து அல்லல் படுத்தியது. முன்கோபக் கப்பலை முறித்து நாசமாக்கியது. "முரளி கண் திறக்கமாட்டானா?'' என்ற ஒரே எண்ணத்துடன் தவம் கிடந்தான்.

ராஜகோபாலனின் மனமோ துடிதுடித்துக்கொண்டு சாந்தியைத் தேட, அவன் கண்களின் வழியாய் வெளி வந்து துளாவியது. அவன் கண்களுக்குத் தென்பட்டதோ, கூடத்தின் மூலையில் மூன்று நாட்களுக்குமுன் வாங்கிவந்த முரளியின் விளையாட்டுச் சாமான்கள். கேட்பாரற்ற அநாதைப் பண்டங்கள்போல் கிடந்தன.

"மாமா! எனக்குப் பொம்மை வேண்டாம். அப்பா! இனிமேல் எங்கும் போகவில்லை அப்பா!! விட்டிலேயே

படிக்கிறேன்" என்று உளறினன். அந்தச் சொற்கள் ராஜகோபாலனின் மனத்தில் சுரீர் என்று பாய்ந்தன. கூடத்திலிருக்கும் பொம்மைகளிலிருந்து பந்தை எடுத்துக் கொண்டு வந்து, "முரளி! முரளி!! முரளீ!!!" என்று குழைந்த குரலில் அழைத்தான்.


"நான் விளையாடல்லேப்பா! இதோ வந்துட்டேன்" என்று சொல்லத் தொடங்கினன்.

முன்பே எரிந்து புடம் போடப்பட்ட மனம், இச் சொற்களைக் கேட்டதும் நீர் ஊற்றுக் கரைந்ததைப்போல் ஆகிவிட்டது. "என் கண்ணே முரளீ! நான் பாவிடா! கோபத்தில் கண் மண் தெரியாமல் அடித்து விட்டேண்டா! இனிமேல் நீ நன்ன விளையாடப்பா! இந்தாப்பா!! இந்தா!!! இதோ பார் பந்து" என்று அவன் கைகளை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

ராஜகோபாலனின் குரலைக் கேட்டு ராதையும், அனந்த கிருஷ்ணனும் விழிப்புக் கொண்டனர். கண்ணீர் வடிய ராஜகோபாலன் குழந்தை முகத்தின்மேல் தன் முகத்தைப் பதித்திருப்பதைப் பார்த்தனர்.

"அய்யோ! மா...மா!" என்று வீறிட்டபடியே முரளி புரண்டு படுத்தான்.

ராஜகோபாலனின் பாசம் நிறைந்த அந்த முத்தம் முரளியின் பயத்தைத் தெளிய வைத்ததோ என்னவோ நாம் அறியோம். தன் பவுஹீனமான கண்களை மெதுவாகத் திறந்தான். அருகிலிருக்கும் தந்தையையும் மாமனையும் பார்த்தான். அவன் வாய் அவனையும் அறியாது "மாமா!" என்றுதான் அழைத்தது.



வெற்றிலையைத் தாம்பூலமாக உபயோகிக்கும்போது, வெற்றிலையின் காம்பு, நுனி, நடுநரம்பு. பின்புறத்தில் அமைந்துள்ள தோல் ஆகியவைகளை நீக்கி, முக்கிய மாகப் பாக்கையும் சுண்ணும்பையும் கலந்து தாம்பூலம் போட வேண்டும். இதன் ரசத்தைப் பருகுவதால் நெஞ் சுரல், கபக்கட்டு, அசீரணம், உடலைப் பற்றிய ரோகம், மூச்சுத் திணரல், கோழைக்கட்டு, தலைபாரம், நீரேற்றம் சந்திபாதம், மாந்தம், குரற்கம்மல், வயிற்றுவலி ஆகியவை நீங்கும்.